கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# வணிக ஜோதி

1982 - 83

# VANIKA JOTHY

CANAGARATNAM MADYA MAHA VIDYALAYA
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்த்துக்கள்

## முக்கிய அறிவித்தல்

# யூனிவேர்சல்

## நூலக சேவை

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடுதல்களைச் செய்ய வேண்டாமென மிகத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும்பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன், ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினுல் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்

செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23853

UNIVERSAL LIBRARY SERVICE

# வணிக ஜோதி

# VANIKA JOTHY

**1982 - 1983**

UNIVERSAL LIBRARY SERVICE

**மலர் 9**

UNIVERSAL LIBRARY SERVICE
KANTHARMADAM - JAFFNA
Acc. No. M 31-1

இதழாசிரியர்கள்:

செல்வி. ரேவதி இராஜரட்னம்
செல்வி. இரஞ்ஜனி இராசமணி

வர்த்தக மாணவர் மன்றம்
யா/கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம்.

Commerce Students Association
J/Canagaratnam M. M. V.
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஜோதி"யின் கதிர்கள் .....

ஆசியுரைகள்

1. சுதந்திர வர்த்தக வலயம் - ஓர் ஆய்வு
திரு. E. டிமன்போட் 1

2 இலங்கையின் கிராமியக் கொடுகடன் அமைப்பும் சில அடிப்படைப் பிரச்சினைகளும்
திரு. அ. வரதராஜப்பெருமாள் 13

3. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் உல்லாசப் பிரயாணத்துறையின் பங்கு
செல்வன். தி. நந்தகுமாரன் 29

4. பொருளாதார முறைமைகளின் வளர்ச்சியும் பொருளாதாரப் பிரச்சினைகளும்
செல்வி. இ. இரஞ்ஜனி 35

5. கிராமிய விவசாயமும் அதன் பொருளாதார முக்கியத்துவமும்
செல்வன். K. இராஜகோபால் 41

6. சரக்குமுதல் கைமாற்று அமைப்பு
திரு. R. இலங்காதுரை 45

7. இலங்கை ஏற்றுமதி கடன் வசதிகளும் சேவைகளும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
செல்வன். ம. தனபாலன் 49

8. விளம்பரம்
செல்வி. K. சுபாங்கி 55

9. கூட்டுறவுத் தத்துவங்கள்
செல்வி. ப. இராகினி 61

10. கட்டுப்பாடில்லா வாணிபமும் கட்டுப்பாடுள்ள வாணிபமும்
செல்வி. கா. சந்திரகுமாரி 65

11. கணக்கியல் விமர்சனங்களின் ஓர் நோக்கு
திரு. S. புவனேந்திரராஜா 69

12. நிறுவன முதல் - சிறு விளக்கம்
திரு. S. உமாக்காந்தன் 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இராவ்பகதூர்

**சி. வை. தாமோதரம்பிள்ளை B. A., B. L.**

அவர்கட்கு

புளொக் அன்பளிப்பு: 'மில்லைற்' தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச் செய்தி

'வணிக ஜோதி' ஒன்பதாவது மலராக மலர்வதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மலர் வெளியீட்டினை வரவேற்கின்றேன்.

எமது கல்லூரி வர்த்தகப்பிரிவு தனிச்சிறப்புடையது. இம் மன்றத்தின் ஆக்கபூர்வமான செயல்கள் பெரிதும் பாராட்டுதற்குரியன. வர்த்தக மன்ற மாணவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களின் தலைமைப்பண்பு போற்றுதற்குரியது.

இச் சந்தர்ப்பத்தில் பெருவிருட்சமாக வேர் விட்டு கிளை பரப்பி ஒளிரும் வர்த்தகக் கல்விப் பீடத்தின் ஆரம்ப கர்த்தராக விளங்கிய இளைப்பாறிய ஆசிரியர் திரு. எம். சுப்பையா அவர்களை நினைவு கூர்வது நன்றிக் கடைப்பாடுடையதாகும். அவர் இட்ட விதையே இன்று நிழல் தருமரமாக வர்த்தக மாணவர்களை ஆற்றுப் படுத்துகின்றது.

வர்த்தகக் கல்விக்குரிய சகல அம்சங்களும் இச் சஞ்சிகையில் இடம் பெற்றுள்ளன. இது பலருக்கும் பயன்தருமென்பது எமது துணிபு.

எமது வர்த்தக மாணவமன்றம் பல்லாற்றாலும் மென்மேலும் ஓங்கி வளர எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

இ. சச்சிதானந்தம்
1983-05-30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR PRINCIPAL



**R. Satchithanandam**, *B. A. (London), Dip. in Ed. (Ceylon)*
*(S. L. E. S. Class IV)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பிரதேசக் கல்விப்
பணிப்பாளரின்

## ஆசிச் செய்தி

''வணிக ஜோதி'' ஆண்டு தவறாது வெளிவருவதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இம் மலரை வளம்படுத்தும் விடயங்கள் தேசிய அடிப்படையில் வணிகத்துறையை மேம்படுத்த வகையளிக்குமென நம்புகிறேன்.

வணிகத்துறைக் கல்வியில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் முதன்மை பெற்றுத் திகழ்கிறது. இவ் வித்தியாலய வர்த்தக மாணவ மன்றம் 'வணிக ஜோதி''யை வெளிக்கொணர்வது வணிகத்துறைக் கல்வியின் வளர்ச்சியேயெனின் மிகையாகாது.

இம் மன்றம் வளர்பிறை போல் வளர்ந்து மாணவ சமுதாயத்திற்கும், மனித குலத்திற்கும் மேலான தொண்டு செய்ய வேண்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
22-04-1983

ம. சிமியாம்பிள்ளை
கல்விப்பணிப்பாளர்

UNIVERSAL LIBRARY SERVICE
KANTHARMADAM - JAFFNA
Acc. No. M 311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதியே" உனது நறுமணம் எங்கும் பரவ
எமது நல்லாசிகள் பல.

உங்கள் குடும்பத்தின்
அன்றாடத் தேவைகளை
பொங்கும் மகிழ்வுடன்
என்றும் நிறைவு செய்வது

# 'FAMILY SHOP'


- உணவுப் பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- அலங்காரப் பொருட்கள்
- அன்பளிப்பு வகைகள்
- பால்மா, சோப், நூல்வகைகள்
- இன்னும் பல, பல

# "பெமிலி சொப்"

[ யாழ். கனகரத்தினம் (ஸ்ரான்லி) கல்லூரிக்கு அருகாமையில் ]

425, (793) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டாரக் கல்வி அதிகாரி (வர்த்தகம்)

அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ். கனகரத்தினம் ம ம. வி. வர்த்தக மாணவ மன்றத்தினர் தங்களது 9 வது வெளியீடாக வணிக ஜோதியை வெளியிடுவது பாராட்டுக்குரியது.

இதற்கு ஆசியுரை வழங்கும் பேறு எனக்குக் கிடைத்தமை மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் வணிகத்துறைக் கல்வி பல வழிகளிலும் அவசியமாகிறது. இத்துறைக் கல்வியை நாடிநிற்கும் மாணவரது எண்ணிக்கையும் முன்னெருபொழுதுமில்லாத அளவுக்குப் பல்கிப்பெருகியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் ஏனைய தொழில்துறைக் கல்விக்கிருந்த மயக்கமும், மவுசும் குறைந்து காணப்படும் இக் காலகட்டத்தில் "வணிக ஜோதி" போன்ற சஞ்சிகைகளின் அவசியமும் தேவையும் அதிகரித்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு 'வணிக ஜோதி'யின் பங்களிப்பு தமிழ் மொழி மூலம் கற்கும் வணிக மாணவரது அபிலாஷைகளை நிறைவேற்றும் என்பது எனது திடமான எண்ணம்.

உங்கள் பணி தொடர எனது நல்லாசிகள்.

இங்ஙனம்

103, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். 26-05-83

எம். ஏ. சி. ஏ. ஸலாம்
வ. க. அ. (வர்த்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Cross Travel Services Ltd"

சுவிஸ் எயர் ஸ்தாபனத்தால் இலங்கையில் அதன் பயணச் சீட்டு விற்பனை பிரதிகர்த்தாவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

**உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில்**

★ விமானச் சீட்டுகளையும்

★ பிரயாண ஒழுங்குகளையும்

உடனுக்குடன் செய்து கொடுக்கும் ஸ்தாபனம்


# "குரெஸ் ட்ரவல் சேவிஸஸ் லிமிட்டெட்"

2ம் கட்டிடம், நவீன சந்தை,

இல: 5, 1ம் மாடி யாழ்ப்பாணம்.

☎ 22040; 22065


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றப் பொறுப்பாசிரியரின்

# ஆசிச் செய்தி

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவ மன்றத்தின் பொறுப்பாசிரியர் என்ற அடிப்படையில், எனது மாணவச் செல்வங்களின் படைப்பிற்கு, ஆசிச் செய்திகளை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தற்காலத்தில் நவீன மாற்றங்களைப் பகிரங்கப்படுத்தக்கூடிய சாதனங்கள் அதிகம். இருப்பினும்; குறிப்பாக வர்த்தகப் பாடங்களுடன் தொடர்பாக புதிய மாற்றங்களையும் கருத்துக்களையும் நல்கக்கூடிய சாதனங்களின் பங்களிப்பு அரிதாகவே இருக்கின்றன. இதனால் 'வணிக ஜோதி' வர்த்தகக் கல்விக்கு ஆற்றும் பங்களிப்பு மிக முக்கியமான இடத்தினை வகிக்கின்றது.

'வணிக ஜோதி' எமது மன்ற அங்கத்தவர்களின் திறமைக்குச் சான்றாக இருக்கும் அதே வேளையில் வர்த்தகக் கல்வியை உயர் வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கு இதன் ஒவ்வொரு சுடரும் இன்றியமையாத உசாத்துணை அம்சமாக அமைந்துள்ளமை பெரும் திருப்தியை அளிக்கின்றது.

வர்த்தகக் கல்வியின் வளர்ச்சிக்கு எமது மாணவர் ஆற்றும் இப் பங்களிப்பு, இலங்கையில் வர்த்தகக் கல்வி வரலாற்றில் முக்கிய இடமொன்றினைப் பெறும் என்பது எமது நம்பிக்கை. மன்றத்தின் முயற்சி மேன்மேலும் வளர்ந்து, பெரு விருட்சமாகி வர்த்தக உலகிற்கு நிழல் பரப்ப வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க அன்புச் செல்வங்களின் பணி.
வளர்க அன்புச் செல்வங்களின் திறன்.

யா/கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம். 31-5-83.

வ. க. பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு வருட செயற்குழு 1982/83

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. இ. சச்சிதானந்தம் (அதிபர்) |
| துணைக்காப்பாளர்கள் : | திரு. வ. க. பாலசுப்பிரமணியம்<br>திரு. அ. உபயசேகரம்<br>திருமதி பா. கனகரத்தினம்<br>செல்வி அ. கந்தையா<br>திருமதி வி. சுப்பிரமணியம் |
| மன்றப் பொறுப்பாசிரியர்: | திரு. வ. க. பாலசுப்பிரமணியம் |
| தலைவர் : | செல்வன் ம. தனபாலன் |
| துணைத்தலைவர் : | செல்வன் P. ராஜா |
| செயலாளர் : | செல்வன் N. சசிதா |
| துணைச்செயலாளர் : | செல்வி K. மைதிலி |
| பொருளாளர் : | செல்வன் S. J. கணேசரட்னம் |
| துணைப்பொருளாளர் : | செல்வன் T. சுந்தரலிங்கம் |
| இதழாசிரியர்கள் : | செல்வி R. ரேவதி<br>செல்வி இ. இரஞ்ஜனி |
| வணிகநூல் நிலையப் பொறுப்பாளர்கள்: | செல்வன் T. ஸ்ரீ பாஸ்கரன்<br>செல்வன் A. அன்ரன் றெஜினோல்ட் |
| விளம்பரப்பொறுப்பாளர்: | செல்வன் S. அரியலிங்கம் |
| செயற்குழு உறுப்பினர்கள்: | செல்வன் S. தில்லைச்சந்திரன்<br>செல்வன் K. சுரேந்திரகுமார்<br>செல்வன் S. T. S. இராஜரட்ன<br>செல்வி N. மேரி மாக்கிறட் |
| கணக்காய்வு: | திருமதி ப. கனகரத்தினம்<br>செல்வி S. பவானி |
| மன்ற நெறியாழ்கை: | திரு. அ. உபயசேகரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சில வார்த்தைகள்

"வணிக ஜோதி'' எமது கல்லூரி வர்த்தக மாணவ மன்றத்தின் படைப்பாகும். 9 வது மலராக உங்களிடம் சமர்ப்பிக்கும் இம் மலர் வணிகத்துறை கல்விக்கு வேண்டிய கருத்து, கருவூலங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துத்தர முனைந்துள்ளது. வர்த்தகவியல் மனித வாழ்வின் அன்றாட விடயங்களைக் கற்பிக்கின்றது. இவ்வகைக் கற்றலுக்கு உதவும் நோக்கத்தின் வெளிப்பாடே இம் மலராகும். இதனைப் படித்து அறிய விரும்பும் தங்களுடன் ஒருசில கருத்துக்களை முன் வைக்க வேண்டிய கடைப்பாடு இதழாசிரியர்கள் என்ற வகையில் எங்களிடம் சுமத்தப்பட்டுள்ளது.

"வணிக ஜோதி'' போன்ற ஒரு சஞ்சிகையை வெளியிடுவது என்பது இலகுவானதொன்றல்ல. பொருளாதாரப் பிரச்சனை உள்ளிட பல எதிர்ப்புச் சக்திகளை எதிர்நோக்க வேண்டிய பொறுப்பு வணிக மாணவ மன்றத்தின் செயற்பாட்டை முன் எடுத்துச் செல்ல விடாது தடங்கலாக அமைந்துவிடுகின்றது. ஏற்படக்கூடிய எல்லாவித மான இடையூறுகளை நிறுத்தி இடர்பாடுகளை எல்லாம் தாண்டுவதற்கு வணிக மாணவ மன்றத்தின் காவலர்களின் உற்சாகமே ஆதாரமாக அமைந்தது என்றால் மிகையாகாது, எமது வித்தியாலய அதிபரும், மன்ற உப காப்பாளர்களும் இம் மலர் வெளிவருவதற்கு ஆணிவேராக இருந்தார்கள். மன்ற உறுப்பினர்களின் பொது ஆற்றலும், சிறப்பு ஆற்றலும் இம்மலர் செவ்வனே வெளிவர தீனியாக அமைந்தது. வணிக மாணவ மன்ற உறுப்பினர்களின் வற்றாத இலட்சியப் பிடிப்பே ஆண்டு தோறும் இம்மலரைப் பொலியச் செய்கிறது.

வணிக கல்வியின் ஊற்றாக இம்மலர் அமைந்துள்ளது. மாணவச் செல்வங்களின் சொத்தாக மலரும் இம் மலர்க் கொத்தை ஆராய்ந்து பாருங்கள். இம் மலர் சிந்தும் மதுவை மாந்துங்கள். அதன் நிலையான சுவையும் அறியாமை பிணிபோக்கும் அரும் மருந்தென அமையும் பாங்கும் நிலையானவை. இதற்கு மேலும் தங்களை தாமதித்துவைக்க யாம் விரும்பவில்லை. மணம் கமழும் மலரின் பகுதிகளை மனம் கொண்டு அனுபவியுங்கள். மாறாத அனுபவங்கள் தங்களைச் சாரும்.


ஈற்றில் ஒரு வார்த்தை. ஆண்டுதோறும் அகல்விளக்காகப் பிரகாசிக்கும் எமது "வணிக ஜோதி''க்குத் தங்களின் நல்லாதரவு நீடிக்க வேண்டும்.

நன்றி

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக் காணும்
# பொருளியல் மேதை




கார்ல் மார்க்ஸ்

## எமது இதயபூர்வமான அஞ்சலிகள்

அன்பளிப்பு: செட்டியார் அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Commerce Students' Association — Executive Committee 1982/83



**Seated:** *(Left to Right)* Mrs W. Subramaniam (*Vice Patron*), Miss. N. Sasitha (*Secretary*), Mr. A. Upayasegaram (*Vice Patron*), Mr R Satchithanandam (*Principal*), Mas. M Thanabalan (*President*) Mr V. K. Balasubramaniam (*Vice Patron & Teacher in Charge*), Mas. S. J. Ganesharatnam (*Treasurer*, Mrs. P. Kanagaratnam (*Vice Patron*), Miss. A Kandiah (*Vice Patron*).

**Standing:** *(Left to Right)* Mas. S. T. S. Rajaratna, Mas. K. Surendrakumar, Miss. K. Mythili (*Asst. Secretary*), Miss. R. Ravethy (*Editor*), Miss. S. Bavany (*Auditor*), Miss. R. Ranjani (*Editor*), Mas. S. Thillaichandiran, Mas. S. Ariyalingam, Mas. A. Anton Reginold.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வர்த்தக வலயம் - ஓர் ஆய்வு

MR. E DEMEN FORD
Asst Lecturer, Faculty Of Agriculture,
Batticaloa University College

இன்றைய அரசாங்கத்தின் கைத்தொழிற் கொள்கையில் முக்கிய பங்கினை வகிக்கும் சுதந்திர வர்த்தக வலயம் பற்றிய கரிசனையான்து அண்மைக் காலங்களில் பொதுவாக பலராலும் விமர்சிக்கப்பட்டுக் கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. ஆயினும் இவ் ஆய்வுகளானவை பொதுவாக அதன் எதிர்பார்க்கைகளையும், அவற்றின் குணாம்சங்களையும் மட்டுமே பிரதிபலிப்பதாக இருப்பது; ஒரு பக்கச் சார்பான விடயங்களை மாத்திரம் வெளிக் கொணர்வதற்கு வழிவகுப்பதாக அமையும். இன்றைய நிலையில், இச் சுதந்திர வர்த்தக வலயமானது அமைக்கப்பட்டு ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்ட இவ்வேளையில் இவற்றின் செயற்பாடுகளானவை எந்தளவு தூரம் இலங்கையின் பொருளாதார விருத்தியில், குறிப்பாகக் கைதொழில் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதனை ஆராய்வதற்கு இவ் ஆய்வானது உதவிபுரிவதாக அமையும். எனவேதான் பொருளியல் மாணவர்களைப் பொறுத்தவரையில் மட்டுமன்றி அதன் மேல் ஆர்வம் கொண்ட சாதாரண மக்களைப் பொறுத்தவரையிலும் ஓர் உபயோகமான ஆய்வாக விளங்க முடியும் என்பதனாலேயே, அதுபற்றிய சில கருத்துக்களை இங்கு கூற நான் முயன்றுள்ளேன்.

1977 ஜூலை மாதம் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது, அதற்கு முன்னைய காலப் பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையினை விட முற்றிலும் வேறுபட்டதும்' புதிதானதுமான ஒரு பொருளாதாரக் கொள்கையினை அமுல்நடாத்த முற்பட்டது. இதனது ஒரு விளைவே திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்ட சுதந்திர வர்த்தக வலயம் ஆகும். இத்தகைய வலயம் ஒன்றினை அமைப்பதன் மூலம் கைத் தொழிற்துறையில் மட்டுமன்றி, அதனைவிட ஏனைய பல அம்சங்களிலும் இது இலங்கையின் பொருளாதார விருத்திக்கு உதவ முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் இத்தகைய ஒரு கொள்கையானது அதற்கு முற்பட்ட அரச பதவிக் காலத்தின்போது சிறிது வேறுபட்ட முறையில் "முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்" (IPZ) ஒன்றின் மூலமாக செயற்படுத்த முனைந்த போதும், அதன்பின்னர் சில காரணங்களினால் தடைப்படுத்தப்பட்டமையும் பலரும் அறிந்ததாகும்.

"சுதந்திர வர்த்தக வலயம் மூலம் பல நன்மைகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு இடமுண்டு. அத்துடன் இது கைத்தொழிற்துறையில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கு வழி அமைப்பதாக இருக்கும்" இது போன்ற கருத்துக்கள், இவ் வலயம் அமைப்பதற்கு முன்னரும், அது அமைக்கப்பட்ட பின்னரும் கூட பொதுவான கருத்தாக கூறப்படினும், கோட்பாட்டு ரீதியில் கூறப்பட்ட இவ்வாசகங்களை எந்தளவு தூரம் நடைமுறைச் சாத்தியத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை பரந்ததொரு அடிப்படையிலான ஓர் ஆய்வின் மூலமே விளக்க முடியும். உதாரணமாக இவ்வலயத்தினால் வேலைவாய்ப்பு அதிகரிப்பு, உள்நாட்டு மூலப்பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பு, தொழில்நுட்பவிருத்தி, துணைச் சேவைகளான நீர், மின்சாரம், போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்து, கப்பற்சேவை, தபாற் தந்தி என்பன போன்ற சேவைகளின் பூரிப்பு உள் நாட்டுக் கைத்தொழில்களுக்கான தூண்டுகை, வெளிநாட்டுச் செலவாணி வருமானத்தின் உயர்ச்சி என்பன போன்ற நன்மைகள் ஏற்படுமென இலட்சிய ரீதியில் கூறப்பட்டவற்றின், பெறுபேறுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதனை இவ் ஆய்வானது ஓரளவிற்காவது தெளிவாக்கும். ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளைக் கடந்து விட்ட இவ்வலயத்தின் "செலவு - நன்மை" (Cost - Benefit) யாது? இதன் மூலம் நன்மை பெற்றோர் யாசர்? இது இந்நாட்டினைப் பொறுத்தவரையில் இலாபகரமானதா? என்பன போன்ற கேள்விகளுக்கு இது விடைகொடுப்பதாக அமையும்.

## வருமானங்கள்: (Incomes)

சுருங்கக் கூறப்போனால் சுதந்திர வர்த்தக வலயம் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களே நன்மையடைந்துள்ளனர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இவ் வலயத்திலிருந்து எமது நாடு எத்தகைய நன்மைகளைப் பெற்றுள்ளது என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும். அண்மைக் காலத்தில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (G. C. E. C.) வின் அறிக்கையொன்றின் படி இவ்வலயமானது மொத்த ஏற்றுமதி வருமானமாக 2200 மில்லியன் ரூபாவினைப் பெற்றுள்ளது எனக் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆனால் இவ் ஏற்றுமதி மூலம் இலங்கை பெற்றுள்ள "தேறிய ஏற்றுமதி உழைப்பு" (Net Export earnings) எவ்வளவு என்பது சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய தொன்றாகும். அதாவது இவ் ஏற்றுமதிகளின் பொருட்டு ஏற்பட்ட மொத்த இறக்குமதிச் செலவினம் எவ்வளவு என்பது இத்துடன் ஒப்பீட்டுப் பார்க்க வேண்டியதாகும். உதாரணமாக 1981 வரையிலான அரசாங்க செயற்பாடு (Government Performance 1981) தொடர்பான பிரசுரம் ஒன்றில் கொடுக்கப்பட்ட தரவுகளை இங்கே கொடுப்பது பொருத்தமானதாக இருக்கும்.

| | |
|---|---|
| *1978 - 81 ஆண்டு வரையிலான* | |
| *61 நிறுவனங்களின் இறக்குமதிகள்* | *= 2063 மில்லியன் ரூபா* |
| *1979 - 81 ஆண்டுவரையிலான* | |
| *41 நிறுவனங்களின் ஏற்றுமதிகள்* | *= 1845 மில்லியன் ரூபா* |

இவ் இறக்குமதிகள் பெரும்பாலும் மூலதனச் செலவுகளையே உள்ளடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதுமட்டுமன்றி இவ்வலயத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் இடப்பட்டுள்ள மொத்த முதலீடுகளை நோக்கும்போது இது ஒரு திருப்திகரமான தொன்றா என்ற கேள்வியும் எழுகின்றது. புள்ளி விபரங்களின்படி 1980 டிசம்பர் வரை வர்த்தக உற்பத்தியில் போட்டிருக்கும் 23 செயற்திட்டங்களிலான மொத்த முதலீடு 826 மில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. இம் முதலீடுகளானவை உள்நாட்டு முதலீடுகளையும் உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதே போன்று 1981ம் ஆண்டு காலப்பகுதியில் அனுமதியளிக்கப்பட்ட 17 செயற்திட்டங்களின் (Projects) மொத்த முதலீடு 1464 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதில் 896 மில்லியன் ரூபாவினை மட்டுமே வெளிநாட்டு முதலீடுகளானவை பெற்றுள்ளன; ஆகவே உள்நாட்டிலிருந்து பெறப்பட்ட முதலீடுகளானவை ஒரு கணிசமான பங்கினைப் பெற்றுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆகவே இத்தகைய ஒரு வெளிநாட்டு முதலீடுகளானவை தவிர்க்க முடியாத ஓர் அம்சமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இச் சுதந்திர வர்த்தக வலயம் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஏனைய வருமானங்களை கருத்திற் கொள்வோமாயின்' இதன் மூலம் பெற்றுக்கொள்ளும் ஏனைய வருமானங்கள் யாவை? ஊழியத்திற்கான கூலி, நீர், மின்சாரம் போன்ற சேவைகளுக்கான கொடுப்பனவுகள், நிலவாடகை, மூலப் பொருள் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானங்கள், இலாபத்தின் மீதான எமது பங்கு ஆகியவை மட்டுமே. இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களை ஒப்புநோக்கும் போது மொத்தச் செலவீட்டின் விளைவு (Returns) மிகச் சொற்ப தொகையாகவே இருப்பதனைக் காணலாம். உதாரணமாக ஒரு ஏக்கருக்கான நிலவாடகையாக வருடாந்தம் 25000/- ரூபா வீதம் 146 ஏக்கருக்கான மொத்த வருமானமாகக் கிடைப்பது 36 மில்லியன் ரூபா மாத்திரமே. இதனைவிட் பா. கொ. பொ. ஆணைக்குழு நிறுவனங்களிடமிருந்து ஒரு ஏக்கருக்கான நிலையான கட்டணமாக 60000/- அறவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது (99 வருடங்களுக்குமான நிலையான கட்டணத் தொகை) ஆகவே இந் நிலையான கட்டணத்திலிருந்து வருடமொன்றிற்கு 146 ஏக்கருக்குமாக கிடைப்பது 606 X 146 = 88476 ரூபாவேயாகும் (ஆகக்கூடிய தொகை) ஆகவே சராசரி நிலவாடகை வருமானம் வருடாந்தம் 37 மில்லியன் ரூபா மட்டுமே கிடைக்கப் பெறுகின்றது ஆனால் அதே நேரத்தில் இங்கு மற்றுமொரு கேள்வி எழுகின்றது. இலங்கை அரசாங்கமானது இவ்வலயம் தொடர்பாக ஏக்கருக்கு ஏறக்குறைய 100000 ரூபாவரை நிலையான செலவாக (Fixed Cost) செலவிட்டுள்ளது. அதனைவிட இதனைப் பராமரிப்பதற்கான ஏனைய நடைமுறைச் செலவுகள் வேறு. ஆகவே செலவுகளையும், வருமானத்தையும் நோக்கும்போது திருப்திகரமற்ற முறையில் உள்ளதனைக்காணலாம்

இதே போன்று இவ்வலயத்தில் தொழில்புரியும் ஊழியங்களுக்கான கூலி வருமானமும் பெருந் தொகையாக இருக்க முடியாது. ஏனெனில் இவ்வலயத்தில் தொழில்புரியும் ஊழியங்களில் பெரும்பாலானவை பயிற்றப்படாத ஊழியங்களாககவும் (Unskilled Labour) அடிமட்ட ஊழியங்களாகவும் காணப்படுவதனால் அவர்களின் கூலி பெறுகைகள் குறைந்த கூலி மட்டங்களாகவே காணப்படுகின்றன. அத்துடன் வேலைவாய்ப்புத் தொடர்பாக் மதிப்பீடு செய்யப்பட்ட இலக்கினையும் பூரணமாக அடைந்து கொள்ள முடியவில்லை. புள்ளிவிபரங்களின்படி 1981ம் ஆண்டு காலப்பகுதி வரைக்குமான மொத்த வேலைவாய்ப்பு 19,921 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை முழுமைத்தானத்தில் கொள்வோமாயின் சராசரிக் கூலியின் அடிப்படையில் (மேலதிக நேரகொடுப்பனவு, ஊ. சே. நிதிப்பங்களிப்பு என்பன உட்பட) வருட்மொன்றிற்கு பெற்றுக் கொள்ளப்படும் மொத்தத் தொகை 192 மில்லியன் ரூபாவாகவே காணப்படும் (800 x 20000 × 12)

கூலிக் கொடுப்பனவு மட்டுமன்றி சேவைகள் மூலம் பெறப்படும் தொகை உயர்ந்ததோர் அளவாக இருக்கமுடியாது. இதனை நேரடியாகக் கணிப்பதும் கூட ஒரு சிக்கலான விடயமாகும். ஆயினும் இதனை ஒரு குறித்த தொகையாகக் கொள்வோமாயின் இச் சேவைகளை வழங்குவதற்கென இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற செலவீனங்களுடன் ஒப்பிட்டு நோக்கின், இவற்றின் மூலம் பெறும் வருமானம் எதுவுமில்லை என்றே கருதமுடிகின்றது. இது மட்டுமன்றி மூலப் பொருள் விற்பனை மூலம் பெறுகின்ற வருமானங்களை அளந்து கொள்ளும் விதத்தில் போதிய புள்ளிவிபர வழங்கல்கள் கிடைக்காமையினால், இதனைக் கூட குறிப்பிட்டுக் கூற முடியாதுள்ளது. ஆயினும் இவ்வலயத்தின் தொழிலகங்கள் உள்நாட்டு மூலப்பொருட்களில் மிகக் குறைந்த அளவில் தங்கியிருப்பதனைக் கொண்டு இதனது பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவில் காணப்படும் என்பதனையும் நம்புவதற்கில்லை. (அட்டவணை II இனைப் பார்க்குக) இவற்றினை விட இலாபத்தின் மீதான உள்நாட்டுப் பங்கானது உழைக்கப் படும் வருமானத்தின் ஒரு பகுதியாக அமையினும், இதுவும் சில சிக்கலான பிரச்சனைகளை எழுப்பிவிடுகின்றன. அதாவது வெளிநாட்டுச் சந்தையானது வெளிநாட்டவரின் கையில் தங்கியிருப்பதனால் சிறந்த விலைகளை ஏற்றுமதிகள் பெற்றுக்கொள்வதில் தடைகளை உண்டுபண்ணிவிடுகின்றது. ஆகவே பெறக்கூடிய இலாபபங்கிலும் பார்க்க குறைந்தளவு ஒரு தொகையினையே உண்மையில் அடையக் கூடியதாக உள்ளது எனலாம்.

இவற்றுடன் நிதிச் செலவினங்களை ஒப்புநோக்குகையில் இவ்வலயத்திற்கான மூலதனச் செலவுகள், நடைமுறைச் செலவுகள் என்பன இலங்கை அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் அடிப்படைத் தேவைகள், பராமரிப்பு, விளம்பரப்படுத்தல் முதலீட்டாளர்களுக்கானசேவைகள் என்பவற்றிற்கு அரசாங்கம் ஏற்கனவேஏறக்குறைய 300 மில்லியன் ரூபாவினை கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் செலவிட்டுள்ளது. அதுமட்டுமன்றி வருடாந்த நன்கொடையாக மேலும் 60 மில்லியன் ரூபாவினை அரசாங்கம் செலவிட்டு வருகின்றது' இந்நிலையில் உழைக்கப்பட்ட அந்நிய செலாவணியானது. கூட்டிய கணக்கின்படி (Value Added Account) 400 மில்லியன் ரூபாவென (1981இன் ஏற்றுமதிப் பெறுமதியில் 35%) எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆகவே செலவு – நன்மை ஆய்வின் அடிப்படையில் (Cost - benefit Analysis) நோக்கும்போது இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம் என்பது ஓர் அநாவசிய செலவீட்டுச் செயற்திட்டம் (White Elephant Project) என்றே கருதமுடிகின்றது.

## வேலை வாய்ப்பு: (Employment)

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயமானது பெரும் எதிர் பார்க்கைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது 1977, 1978ம் ஆண்டுகளில் இவ்வலயமானது ஏறக்குறைய 150,000, 100,000 அல்லது ஆகக்குறைந்தது 50000 வேலைவாய்ப்புக்களை உருவாக்கு மென்ற பொதுவான பேச்சுக்கள் இடம்பெற்றன. 1979 ஜுலை 22இல் ஐக்கிய தேசியக் கட்சியின் "இரண்டு வருட முன்னேற்றம்" தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் வெளியிட்ட செய்தியில் "இம் முதலீடுகளிலிருந்து அந்நிய செலாவணி உழைப்புகளாக வருடாந்தம் ஏறக்குறைய 5600 மில்லியன் ரூபா, வேலைவாய்ப்பு எதிர்பார்க்கையின் அளவு வருடாந்தம் 36000 ஆக அமையும்" என கூறப்பட்டது. ஆயினும் எதிர்பார்கப்பட்ட வேலைவாய்ப்புக்களில் உண்மையில் அடைந்து கொள்ளப்பட்ட வேலைவாய்ப்புக்கள் எவ்வாறு உள்ளன என்பதனை பின்வரும் அட்டவணையானது (அட்டவணை 1) எடுத்துக் காட்டும்.

மேற்கூறிய தரவுகளிலிருந்து வெவ்வேறுபட்ட கைத்தொழில்களில் அனுமதிக்கப்பட்ட கைத்தொழில்கள், செயற்படுத்தப்பட்ட கைத்தொழில்கள்என்பவற்றிற்கிடையிலான வேலைவாய்ப்புக்களுக்கிடையிலான வேறுபாடுகள் தெளிவாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இத்தகைய ஒரு வீழ்ச்சி நிலைக்கு அனுமதியளிக்கப்பட்ட கைத்தொழில்களானவை உடனடியாக இயங்க முடியாமையினை ஒரு காரணமாகக் கூறினாலும், மதிப்பீடு செய்யப்பட்ட வேலைவாய்ப்புக்கள் கூட எதிர்பார்க்கப்பட்ட வேலைவாய்ப்புக்களை அடைந்து கொள்வதாக இருக்கவில்லை. ஆயினும் புள்ளிவிபரங்களின்படி "அனுமதியளிக்கப்பட்ட எல்லா செயற்திட்டங்களும் உற்பத்தியில் ஈடுபட்டிருக்குமாயின் ஏறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை I

**1978 — 1982 ஆண்டு காலப்பகுதியில் உடன்படிக்கை செய்யப்பட்டதும் பா. கொ. பொ. ஆ. இனுள் அனுமதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட வேலைவாய்ப்பும்**

| | வகை | அனுமதிக்கப்பட்ட தொழில்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வேலைவாய்ப்புகள் | | | | திறுவப்பட்ட தொழில்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வேலைவாய்ப்புக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 78 | 79 | 80 | 81 | 78 | 79 | 80 | 81 |
| 1. | உணவு, குடிவகை, புகையிலை | 56 | 351 | 1782 | 1652 | 56 | — | — | — |
| 2. | ஆடை, தோற்பொருட்கள் | 14,301 | 7,837 | 6,457 | 4,008 | 13,662 | 2782 | 6,164 | 1,793 |
| 3. | மரம், மர உற்பத்திகள் | - | 44 | 780 | 47 | — | — | 250 | — |
| 4. | காகிதம், காகித உற்பத்திகள் | 222 | 163 | — | — | — | — | — | — |
| 5. | இரசாயனப் பொருள், இறப்பர்உற். | 9,681 | 1,061 | 1,512 | 315 | 740 | | 1023 | 450 |
| 6. | உலோகமற்ற கனிப் பொருட்கள் | 832 | 157 | — | 649 | — | 655 | - | 649 |
| 7. | அடிப்படைக் கனிப் பொருட்கள் | 555 | 1,585 | 4,116 | 592 | 395 | 275 | 3,520 | 175 |
| 8. | உலோகபொரு + போக்கு உபகர. | 848 | 1,971 | 3,282 | 2209 | 689 | — | 2702 | 237 |
| 9. | உற்பத்திப் பொருட்கள் | — | — | 378 | 334 | — | — | 878 | 834 |
| 10 | மொத்தம் | 26,495 | 13,195 | 18,607 | 9,805 | 15,542 | 3,719 | 13,987 | 8,638 |

UNIVERSAL LIBRARY SERVICE
KANTHARMADAM - JAFFNA
Acc. No. M 31.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைய 55000 பேர் அங்கு வேலைவாய்ப்புப் பெற்றிருக்க முடியும்'' என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் ஏற்கனவே நோக்கியபடி 1981 டிசம்பர் மாதமுடிவில் 19921 பேரே வேலைவாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர். அதிலும் ஏறக்குறைய 90%மானோர் பெண்களாகவே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே வேலைவாய்ப்புக்களைத் தீர்க்கும் வகையில் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயமானது ஆற்றிய பங்கு பெருமளவு வெற்றி பெறவில்லை என்றே கருதமுடிகிறது.

இதுவரையில் கிடைக்கப்பட்ட வேலைவாய்ப்புக்களின் அளவு மட்டுமன்றி அங்கு தொழில்புரியும் தொழிலாளர்களின் குணும்சங்களையும் நோக்குவது ஓரளவு அவசிய மானதாகும். பெரும்பாலான தொழிலாளர்கள் பயிற்றப்பட்டாததும், அடிமட்டத் தொழிலாளர்களாகக் காணப்படுவதனுல் அவர்களின் கூலி கொடுப்பனவுகள் உயர்ந்த மட்டக் கூலிகளாகக் காணப்படுவதில்லை. இதனுல் இவ்வலயத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்தவித முன்னேற்றத்தினையும் கொண்டு வர வில்லை என்றே கருத முடிகின்றது.

இவைமட்டுமன்றி சு. வ. வலயத்தினுல் வேலைவாய்ப்புக்களானவை அதிகரிக் கின்றது என்று கூறினுலும் இவ் வேலைவாய்ப்புக்களெல்லாம் வேலையற்ற ஊழியப் படையினருக்கு வழங்கப்பட்டனவா என்ற கேள்வியும் எழுகின்றது. ஏனெனில் உள் நாட்டு தொழில்துறையிலிருந்து இவ்வலயத்தின் தொழிற்துறைக்கு பெயரும் தொழி லாளர்கள் மூலம் உள்நாட்டு தொழில்துறைக்கு ஏற்பட்ட இழப்புக்கள் கருத்தி லெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பாக தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள், நிறைவேற்றுநர்கள் போன்ருேரின் பெயர்ச்சியின் காரணமாக உள்நாட்டுத் தொழிற்துறையில் இவ்வம்சம் தொடர்பாக சில பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவை மட்டுமன்றி இத் தொழிலாளர்களின் நலன் புரி நடவடிக்கைகள் கூட திருப்திகரமானதாக அமையவில்லை.

## உற்பத்தி (Production):

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தின் பெரும்பகுதி உற்பத்தியானது ஆடைக் கைத்தொழில்கள் மீதான முயற்சிகளாகவே காணப்படுகின்றது. அதாவது ஏற்கனவே எதிர்பார்த்ததனைப் போன்று கனரக அல்லது இடைநிலை உற்பத்தி களாக அமையவில்லையென்பது இதனது ஒரு குறைபாடாகக் கூறினுலும், ஆடைக் கைத்தொழிலின் முக்கியத்துவம் இலங்கையின் கைத்தொழில் அமைப்பில் மட்டுமன்றி ஏனைய பொருளாதார நடத்தைகளிலும் கொண்டுவந்த மாற்றங்கள் என்ன என்பதனை பின்வரும் ஆய்வானது எடுத்துக்காட்டுவதாக அமையும்.

சுதந்திர வர்த்தக வலயத்தின் ஆடைக் கைத்தொழில் நிறுவனங்களில் பெரும் பாலானவை இறக்குமதி மூலப்பொருட்களில் தங்கியுள்ளமை இவற்றின் பெரும் குறைபாடாகக் கூறப்படுகின்றது. உள்நாட்டு மூலப் பொருட்களுக்கான கேள்வி இவ்வலயம் நிறுவப்படுவதனுல் அதிகரிக்கும் என்பதில் இவ் வலய நிறுவனங்களானவை தங்கியுள்ளன என்பதனை பின்வரும் அட்டவணை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை II

### ஆடைக் கைத்தொழில்கள், தோல் உற்பத்திகள் என்பவற்றில் உபயோகிக்கப்பட்ட மூலப்பொருட்கள்

| ஆண்டு | உள்நாட்டு மூலப்பொருள் (வீதாசாரத்தில்) | வெளிநாட்டு மூலப்பொருள் (வீதாசாரத்தில்) |
|---|---|---|
| 1975 | 29.5% | 70.5% |
| 1976 | 26.3% | 73.7% |
| 1977 | 36.3% | 63.7% |
| 1978 | 14% | 86% |
| 1979 | 9% | 91% |
| 1980 | 7% | 93% |

(மூலம் - மத்திய வங்கி அறிக்கை 1980)

மேற்தரப்பட்ட அட்டவணையின்படி ஆடைக் கைத்தொழில்கள், தோல் உற்பத்திகள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களில் உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடானது வீழ்ச்சியடைந்துவருவதனையும், வெளிநாட்டு மூலப் பொருட்களின் பயன்பாடானது அதிகரித்து வருவதனையும் அவதானிக்கலாம், உதாரணமாக 1975 ல் இவை கொண்டிருந்த பங்கானது முறையே 29.5% மாகவும், 70.5% மாகவும் காணப் பட்டது. ஆனால் 1980 ல் இவை 7% மாகவும், 93% மாகவும் அதிகரித்திருப்பதனை யும் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக 1977 இற்குப் பின்னர் இதனது வீழ்ச்சி படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதனையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. வேறு வார்த்தையில் கூறுவதாயின் உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன் பாடு என்பது முற்றிலும் பொருத்தமற்றதென்றே கொள்ளவேண்டியுள்ளது.

உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடு மட்டுமன்றி' ஆடை இறக்குமதிகள் மீதான செலவீனங்கள் இவ் வலயம் அமைக்கப்பட்டதன் பின்னர் வேகமாக அதிக ரித்து வருவதும் மற்றுமொரு அம்சமாகும். இதன் காரணமாக ஏற்படும் அந்நிய செலாவணி இழப்பீடுகள் பக்கவிளைவுகளில் ஒன்றாகும் இவ் இறக்குமதி செலவீனங் களானவை, நலன்களை ஒப்பீடு செய்வதற்கு உதவி புரிவதாகவும் அமையும்.

## அட்டவணை III

### ஆடைகள், துணி வகைகள் மீதான இறக்குமதிகள்

| ஆண்டு | மில்லியன் ரூபா | வி. எ. உ, மில்லியன் (S. D. R. million) | மொ. இறக்குமதி வீதாசாரம் |
|---|---|---|---|
| 1972 | 48 | — | 2.3 |
| 73 | 55 | — | 2.0 |
| 74 | 59 | 7 | 1.3 |
| 75 | 20 | 2 | 0.4 |
| 76 | 49 | 5 | 1.1 |
| 77 | 150 | 15 | 2.5 |
| 78 | 531 | 27 | 3.6 |
| 79 | 1536 | 76 | 7 |
| 80 | 1721 | 80 | 5 |

மூலம் - இலங்கை மத்திய வங்கி அறிக்கை (1973 — 80)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டப்பட்ட அட்டவணையின்படி ஆடை, துணிவகைகள் என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் 1976ம் ஆண்டின் பின்னர் பெருமளவில் அதிகரித்துக் கொண்டு செல்வதனைக் காணலாம். ஆயினும் மொத்த இறக்குமதிச் செலவீட்டின் விதாசார அடிப்படையில் நோக்கும் போது பெருமளவு வித்தியாசங்கள் ஏற்படாமைக்கு மொத்த இறக்குமதிச் செலவினங்களின் உயர்ச்சியே காரணமாகும். ஆகவே ஏற்றுமதி மூலம் கிடைக்கப் பெறும் அந்நிய செலாவணி உழைப்புக்களின் தேறிய வருவாய் மிகக் குறைந்த தொன்றாகவே உள்ளது.

சுதந்திர வர்த்தக வலயம் ஒன்று அமைக்கப்படுவதன் மூலம், அது உள்நாட்டுக் கைத்தொழிற்துறைக்கு ஒரு தூண்டுகோலாக அமையும் என்பது முற்றிலும் பொருத்த மற்ற தொன்று என்பதனை கடந்தகால அனுபவங்கள் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளன. உதாரணமாக இலங்கையின் ஆடைக்கைத்தொழில்களில் ஈடுபடும் அரச உடமையாக்கப்பட்ட தொழிற்சாலைகள், தனியார்துறை நிறுவனங்கள் என்பன தம்மை உறுதிப்படுத்திக் கொள்வதில் பெரும் பிரச்சனைகளை எதிர் நோக்கியது. துல்கிரிய, வெயாங்கொடை, வத்தேகம, மின்னேரியா, பூகொட போன்ற தொழிற்சாலைகளானவை தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சனைகள் காரணமாக தமது உற்பத்தியினை 27% குறைத்துக் 'கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. இவற்றின் முகாமைத்துவமானது வெளிநாட்டவர் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையிலும் கூட இத்தகைய ஒரு வீழ்ச்சி ஏற்படச்செய்தது. அதுமட்டுமன்றி தனியார் துறை நிறுவனங்களானவை சந்தைப்படுத்தல் பிரச்சனை காரணமாக தமது உற்பத்திகளைக் குறைக்கவோ, அல்லது மூடிவிட்வேண்டிய நிலைகோ தள்ளி விட்டது. இதனால் இறக்குமதி ஆடைகள் மீதான நுகர்வு அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிட் வேண்டியதாகும். அத்துடன் இவ்வாறு மூடப்பட்டது உற்பத்திகளைக் குறைத்துக் கொண்டதுமான நிறுவனங்களின் வேலை இழப்புக்கள் பற்றிய அம்சமானது வேலைவாய்ப்பு தொடர்பான தரவுகளுடன் இணைத்துப் பார்க்க வேண்டிய தொன்றாகும். இதனது ஒரு வெளிப்பாடே அண்மைக் காலங்களில் ஆடை இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் எனலாம்.

## தொழில் நுட்பம்: (Teahnology)

சு. வ. வலயம் மூலம் தொழில்நுட்பம் தொடர்பான முன்னேற்றம் ஏற்படுவதற்கு வழியுண்டு என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் இதுவரை காலம் நிறுவப்பட்ட நிறுவனங்கள் மூலம் எத்தகைய தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டன? இவ்வலயத்தின் உற்பத்திகளைச் சிறிது நோக்குவோமாயின் இதனை இலகுவில் புரிந்து கொள்ளலாம். இதுவரை நிறுவப்பட்ட் நிறுவனங்களின் பெரும்பாலான உற்பத்திகளானவை தைக்கப்பட்ட ஆடை, டீயர், இறப்பர் தொடர்பான சிறு உற்பத்திகள், (Rubber bands & Sheets) பொலித்தீன் உற்பத்திகள், ஆபரணங்கள், சர்வதேச விமான சேவைக்கான உணவு வழங்கல் போன்றவைகளே ஆகும். இத்தகைய உற்பத்திகளிலும் சேவைகளிலும் பாரியளவு தொழில்நுட்பம் கலந்துள்ளது என்று கூறமுடியாது. அதுமட்டுமன்றி மூலதனச் செறிவான உற்பத்திகளாக இவை மேற்கொள்ளப்படுவதாயின் அவர்கள் இங்கு வரவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே மலிந்த ஊழியங்களை நாடி வரும் இந் நிறுவனங்கள் மூலம் தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்படும் எனக் கூறுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு மூலதனம்: (Foreign Capital)

இலங்கை அரசாங்கத்தின் இன்றைய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் வெளிநாட்டு மூலதனமானது சுதந்திர வர்த்தக வலயம் மூலம் போதுமான சலுகைகள் வழங்குவதன் மூலம் உள்நாட்டில் முதலீடு செய்வதற்கு தூண்டுதல் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் மூலதனப் பற்றுக்குறைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும், அந்நிய செலாவணி பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் இது ஒரு சுலபமான வழி முறையாகக் காணப்படினும் இதுவரை காலம் இவ்வலயம் மூலமாக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளானவை எத்தகைய பங்களிப்பு செய்துள்ளது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. உதாரணமாக 1980 டிசம்பர் வரை வர்த்தக உற்பத்தி நிறுவனங்கள் 23 இனது மொத்த முதலீடு 326 மில்லியன் ரூபாவாகவே காணப்பட்டது. இது இதனைவிட உயர்ந்த தொகையாக இருந்தாலும் கூட இவற்றினை உள்நாட்டிலிருந்து பெற்றிருக்க முடியும். இலங்கையின் இறக்குமதி அமைப்பினை ஆராய்வோமாயின் அரசாங்க மீண்டெழும் செலவுகளில் சிலவற்றினை மூலதனச் செலவுகளாக மாற்றக் கூடிய சாத்தியங்களை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக இன்றைய தாராள இறக்குமதி கொள்கை காரணமாக மில்லியன் ரூபாக் கணக்கில் மோட்டார் வாகன இறக்குமதி, சீனி இறக்குமதி போன்றவற்றிற்கு அரசாங்கம் செலவிட்டு வருகின்றது. உதாரணமாக 1976ல் 61 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட சீனி இறக்குமதி 1981இல் 2662 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. இதில் மிக முக்கியமான அம்சம் யாதெனில் 1977 ம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் இலங்கையானது தனது சீனித்தேவையில் சுய நிறைவினை அண்மித்திருந்தமையாகும். ஆகவே இத்தகைய சீனி இறக்குமதிச் செலவுகளானவை மாற்றியமைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் விளைவேயாகும். இத்தகைய செலவுகளை தொழில்கள் மீதான உள்நாட்டு மூலதனமாக மாற்றியமைத்திருக்க முடியும். எனவே சுதந்திர வர்த்தக வலயம் மீதான வெளிநாட்டு முதலீடுகளானவை அரசினது இறைமையினைப் பாதிக்கும் அதேவேளை நாட்டிற்கும் ஒரு பொறுப்பாகக் (Liability) காணப்படுகின்றது.

## முடிவுரை (Conclusion)

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பான மேற்கூறப்பட்ட அம்சங்கள் ஒரு சில நட்டத்தைக்களை மட்டுமே விமர்சிப்பதாக உள்ளது ஏற்கனவே செலவு - நலன் ஆய்வின்போது கூறப்பட்ட அம்சங்கள் யாவும் நிதி ரீதியிலான விடயங்களில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது. ஆயினும் அதற்கப்பால் இதன் மூலமாக மறைமுக ரீதியில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இழப்புக்களும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியதாகும். அதாவது ஊழியர் பெயர்ச்சியின் மூலம் ஏற்படும் சமூக செலவு, கள்ளக்கடத்தல் தொழிலாளர்கள் மீதான சுரண்டல், போக்குவரத்து நெருக்கடிகள், சக்தி தொடர்பான செலவுகள் (energy Cost) சூழல் அசுத்தமாகல் (Pollusion) கட்டிட செலவுகளில் ஏற்படும் உயர்வு, தென்னைநிலங்களின் மாற்றுப் பயன்பாடு (Alternative use of Coconut Land), கட்டிட நிர்மாணம் தொடர்பான வேலைமீதான இயற்கை வளம் அழிப்பு (de forestation for the Construction of buildings), கலாச்சார, உளவியல் தாக்கங்கள் என்பனவாகும்.

இதே வேளையில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தொடர்ந்தும் தற்போதைய பொருளாதாரக் கொள்கையினைக் கடைப்பிடிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அதுமட்டுமன்றி இது போன்றதொரு அமைப்பினை "விவசாய வல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் திட்டமாக'' விவசாய நடவடிக்கைகளிலும் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ''விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின்'' தகவல்கள் தெரிவிக்கின்றன. இது விவசாய அமைப்பினைப் பொறுத்த வரை எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவரும் என்பதனை அதனது செயற்பாடுகளின் பின்னரே அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் எமது நாடு காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தபோது உள்ள நிலையினை விட, இவ் வலயம் மூலம் பெறப்படும் நன்மைகள் குறைவாகவே காணப்படும் உதாரணமாக அந்நியர் ஆட்சிக்காலத்தில் போது உள்நாட்டு வருமானங்கள் வெளியே எடுத்துச்செல்லப்பட்டன என்று குறை கூறப்படினும், அதே நேரத்தில் உள்நாட்டு நலன் குறித்து சில வசதிகளை அவர்கள் செய்துகொடுக்கத் தவறவில்லை. உதாரணமாக போக்குவரத்து வசதி, கல்வி வசதி என்பன. ஆனால் நவ காலனித்துவ அமைப்பாகிய சுதந்திர வர்த்தக வலயம் மூலம்எமது அரசாங்கமே அவற்றிற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே தான் காலனித்துவத்தினை விட நவ காலனித்துவமானது கூடிய தாக்கம் நிறைந்தது என்று கூறப்படுகின்றது. ஆகவே இவ் வலயமானது நவ காலனித்துவ தாக்கங்களை அதிகரிப்பதற்கு வழிவகுப்பதாகவே அமையும். ஆயினும் இவ் வலயத்தினைத் தவிர்ப்பதன் மூலம் இதன் தாக்கங்களிலிருந்து முற்றாக நாம் நீங்கிவிடுவோம் என்பதும் தவறான ஒரு கருத்தாகும். இறுதியாகக் கூறுவதாயின் மூன்றாம் உலக நாடுகளானவை இத்தகைய நவ காலனித்துவத் தாக்கங்களில் சிக்குண்டிருக்கும் இவ்வேளை தமது பொருளாதாரச் சமூக அமைப்பிற்கேற்ற பொருத்தமான கொள்கைகளை அமைப்பதன் மூலமே இவற்றிலிருந்து ஓரளவாவது நிவாரணம் பெற வழிபிறக்கும் என்பதே இதன் கருத்தாகும்.


வருடாவருடம் நறுமணம் பரப்பும் "வணிகஜோதி"க்கு

என்றும் எமது நல்லாசிகள்

ஸ்ரீ பார்வதி அச்சகம்

288, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

☎ 22689




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

# OCEAN TRADERS

IMPORTERS AND DEALERS OF FISHING GEARS

## OCEAN TRADERS

76, Hospital Road,
JAFFNA.

T. Phone: 22122

With the Best Compliments of

# Sundaramoorthy & Sons

Head Office:
210, [76] Hospital Road,
JAFFNA.

T. Phone: 24195

Branch:
117 & 119, Bankshall St,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Use Always*

# "VIMEL'S TEA"

Head Office:

**VIMEL EXPORT**
No. 1, Dam St,
**COLOMBO.**

T. Phone: 31641

Branch:

142, Hospital Rood,
**JAFFNA.**

# Chelsons Metal Industries

MANUFACTURERS OF

All Kinds of Aluminium Hallow Wares, Enamel Wares
Stainless Steel and Foundries

118, K. K. S. Road,
**JAFFNA.**
**SRI LANKA.**

*Registered No. 12040*
*T. Phone: 24074 & 23376*
*T' Grams: CHELSON*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கிராமியக் கொடு கடன் அமைப்பும் சில அடிப்படைப் பிரச்சினைகளும்

திரு. அ. வரதராஜப்பெருமாள்
உதவி விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்

ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கங்களின் ஊடுருவலுக்கு முன் இந்திய, இலங்கைக் கிராமங்கள் தனித்தனி அலகுகளாக அன்றைய சமூக பொருளாதார நிலைக்குரிய வகையான சுய தேவைப் பூர்த்தியுடையவையாக, கிராம மக்கள் தமது பெரும்பாலான தேவைகளைத் தமது கிராம எல்லைக்குள்ளேயே பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய நிலையில்; வெளியாரில் தங்கியிருக்காத நிலையில் அமைந்திருந்தனர். விவசாயமும் கைத்தொழிலும் கிராம அலகுகள் ஒவ்வொன்றினுள்ளும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப் பட்டவையாக தொழிற் பட்டன. தத்தம் கிராமத்திற்குரிய சட்டத்தையும் ஒழுங்கையும் தாமே வகுத்துக்கொண்டு அதனைத் தமக்கேயுரிய வகையில் நிலை நாட்டிக் கொண்டு, தமக்குரிய பாதுகாப்பைத் தாமே ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு கிராமங்களும் தனித்துவம் வாய்ந்த ஒவ்வொரு பொருளாதார அலகுகளாக இயங்கி வந்தன. ஒவ்வொரு கிராம அலகினுள்ளும் சாதி அடிப்படையிலான சமூக உறவு நிலவி வந்தது. கிராமத்தின் நில உடைமையமைப்பானது குடும்ப அலகினடிப்படையில் இருந்த போதிலும் உற்பத்தி நடவடிக்கையானது குடும்ப அலகாக அமையாமல் அக்கிராமம் சார்ந்த சமூக அலகாகவே அமைந்திருந்தது. அதாவது ஒரு குடும்பத்தின் உற்பத்தி நடவடிக்கையானது குடும்ப உழைப்பு அல்லது கூலியுழைப்பினைல் மேற்கொள்ளப்படுதல் என்பதாக வல்லாமல் சாதியடிப்படையிலான சமூக உழைப்பினால் மேற்கொள்ளப் பட்டது. அக் கிராமங்கள் ஒவ்வொன்றினுள்ளும் சுரண்டல் உறவு முறை நிலவி வந்தது. எனினும் அவ் உறவு முறை தனி மனிதர்கள் என்ற ரீதியில் அமையாமல் சமூக வடிவிலேயே அமைந்திருந்தது உழைக்கும் மக்கள் கிராமத்தின் தொழிற்பாகுபாட்டின் அடிப்படையிலான சாதிப்பாகு பாட்டிற்கு உட்பட்டு ஒவ்வொரு சாதியினரும் தமக்கென வகுக்கப்பட்ட தொழிலை தம் கிராம எல்லைக்குள் மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சாதியினரும் சமூக அந்தஸ்தும் ஒழுங்கு படுத்தப் பட்டதாக அமைந்திருந்தது. வெளியாரின் பொருளாதார, சமூக ஆதிக்கத்துக்கோ, சுரண்டலுக்கோ, இன்றிருப்பது போல, முற்றாக ஆட்பட்டிருந்தன என்று சொல்வதற்கில்லை. அரச அதிகாரத்தில் இருப்போனின் வரிவிதிப்புக்கு உட்பட்டவையாக, அவனுக்குக் கட்டுப்பட்டவையாக கிராமங்கள் இருந்தன. எனினும் அவை கிராமங்களின் தனித்துவமான அலகு நிலையை சிதைத்து விடுபவையாக அமையவில்லை. அரசர்கள் கிராமியப் பொருளாதாரத்திற்கு அடிப்படையான நீர்ப்பாசன ஒழுங்கமைப்புக்களை எப்போதும் பராமரித்தும் விருத்தி செய்தும் வந்துள்ளனர்.

ஐரோப்பிய காலனித்துவம் - குறிப்பாக பிரித்தானிய காலனித்துவம் - மேற்கண்டவற்றுக்கு மாறான பல "சாதனை"களை ஆற்றியுள்ளது. இந்திய, இலங்கை நாடுகளை சர்வதேச பொருளாதார அமைப்பின் துணைக்கோள் அலகாக மாற்றியது மட்டுமல்லாது, இந் நாடுகளின் கிராமங்களின் சுயநிறைவான, சுயஇயக்கமுடைய அலகுத்தன்மையை முற்றாக அழித்து விட்டு அவற்றை நகர்சார்ந்த அதனூடாகச் சர்வதேச பொருளாதாரம் சார்ந்த பொருளாதார சிற்றலகுகளாக்கியது. இந் நிலைமையை உருவாக்கும் பொருட்டு,

1) கிராமியக் கைத்தொழில்களை அழித்தொழித்தது.

2) நீர்ப்பாசன பராமரிப்பு, விருத்தி என்பவற்றைக் கைவிட்டது

3) கிராமங்களை பிரித்தானிய உற்பத்திப் பொருட்களின் சந்தைக் காடுகளாக்கியது. இதனை நடைமுறைப் படுத்துவதற்கான கடைக்காரர்களையும், வட்டிக்குப் பணம் கொடுப்போரையும் கிராமங்களில் உருவாக்கியது.

4) பல்வேறு வகைப் பட்ட வரிகளை கிராமிய மக்கள் மீது விதித்தும், கிராமிய மக்களின் நிலங்களை அரச நிலங்களாக்கியும் கிராமிய மக்களை நிலமற்றவர்களாகவும் வறிய சிறு நிலவுடைமை விவசாயிகளாகவும் ஆக்கியது. இவ் வரி முறைகளை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரிகளையும் ஏஜண்டுகளையும் நியமித்து அவர்களை புதிய வகைப்பட்ட நிலச்சுவாந்தர்களாக்கியது.

5) ஐரோப்பியக் கைத்தொழில் உற்பத்திக்கான மூலப்பொருட்களையும், ஐரோப்பியரின் தேநீர் தேவைகளையும் உற்பத்தி செய்யும் பிரதேசங்களாக கிராமங்களையாக்கியது.

சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலமாக பிரித்தானிய காலனித்துவம் இந்திய, இலங்கைக் கிராமங்களில் சாதித்தவை இவையே யாகும். இந் நிலைமைகளை மேலும் மேலும் விருத்தியாக்கும் பொருட்டு காலனித்துவ ஆட்சியமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றே 'கிராமியக் கொடுகடன் சேவை' யாகும். காலனித்துவ அமைப்பினால் உருவாக்கிச் செயற்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார அமைப்புக்களையும் நடவடிக்கைகள் அனைத்தையும், எவ்வாறு தேசியத் தலைவர்கள் எனப்படும் நகர உயர் குழாத்தினர், அப்படியே செயற்படுத்தி விரிவாக்கி வருகின்றனரோ அவ்வாறே காலனித்துவ ஆட்சியாளரினால் 1908 ஆம் ஆண்டு இலங்கையில் தொடங்கப்பட்ட கிராமியக் கொடுகடன் நடவடிக்கையை 1931 ம் ஆண்டுக்குப் பின்னர் சிறப்பாக 1948 ம் ஆண்டுக்குப் பின்னர் முழு அரசியல் அதிகாரத்தோடும் பாராளுமன்றப் பீடம் ஏறிய ஒவ்வொரு அரசாங்கத்தினரும் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

கடன் கொடுப்பனவு ஒன்றின் தாற்பரியம் கடனைப் பெறுபவனின் விருத்தி என்பதனை விட கடன் கொடுப்பவனின் விருத்தியினையே அடிப்படையாகக் கொண்டதாகும். கடன் வழங்கும் ஒரு சிறு கடைக்காரனிலிருந்து சர்வதேச ரீதியில் கடன் வழங்கும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதிவரை இவ் அடிப்படைத் தாற்பரியமே செயற்படுகின்றது. உலக வங்கி வழங்கும் அபிவிருத்திக் கடனுதவி பற்றிக் கூறும் செறில் பேயர் (Cheryl Payer), "உதவி வழங்கும் ஏஜன்சிகளின் அடிப்படை நோக்கம் உதவியைப் பெறும் நாடுகளில் தாம் கொண்டிருக்கும் அரசியல் பொருளாதார நலன்களைத் தொடர்ந்தும் நிலைப்படுத்திக் கொள்வதும் பாதுகாத்துக் கொள்வதுமேயாகும்." எனக் குறிப்பிடுவது இங்கு கவனத்திற்குரிய ஒன்றாகும்.

இலங்கையின் இன்றைய கிராமியப் பொருளாதாரமானது, பிழைப்பு மட்டத்துக்கு மேலாக உபரியைப் பெறக்கூடிய அளவான வருமானத்தை வழங்காது! சிறு காணித்துண்டுகளுக்கு உரிமையாளர்களாக உள்ள உழவர்களைப் பெருந்தொகையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட உற்பத்திமுறையையுடைய அமைப்பு ஆகும். இத்துறையானது சர்வதேச முதலாளித்துவ உற்பத்தி முறையின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட அமைப்பாக இருக்கின்றபோதிலும் இதில் முதலாளித்துவ உற்பத்திமுறை வளர்ச்சியடையாமல் குடியான விவசாய உற்பத்தி முறைமையே ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இது இன்றைய மூன்றும் உலக நாடுகளின் கிராமங்கள் அனைத்துக்கும் பொதுவானதாகும்.

இலங்கையின் கிராமிய விவசாய உற்பத்தித்துறையில் ஈடுபடுவோரில் 35 வீதத்தினர் நிலமற்ற கூலி விவசாயிகள் ஆவர். மேலும் சுமார் 35 வீதத்தினர் சிற்றளவான நிலத்திற்கு சொந்தக்காரர்களாக இருக்கின்ற போதிலும், சீவனோபாயத் தேவைகளை அடைந்து கொள்ளக்கூடிய வருமானத்தைப் பெறுவதற்கு அந்நிலம் போதாமையினால் தமது ஒருபகுதி உழைப்புச் சக்தியை விற்பதில் ஈடுபடுகின்றனர். இலங்கையின் நிலவுடமையாளரில் 82 வீதமானோர் இரண்டு ஏக்கருக்கும் குறைந்த அளவு நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகவேயுள்ளனர். இலங்கையின் கிராமிய விவசாய நிலையையாராய்ந்த பேராசிரியர் டட்லி சியர்ஸ் அவர்கள் 3 ஏக்கர் நிலவளவையே சிக்கன நிலவுடமை என வரையறுப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கிராமிய நிலவுடைமையமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வு இடைவெளியும் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்தது. 97 வீதமான பயிர்ச்செய்கையாளர்கள 76 வீத நிலத்திற்கு உடமையாளர்களாக இருக்க 3 வீதமானோர் 24 வீத நிலத்தை உடையவர்களாக இருக்கின்றனர். 34 வீதமான பயிர்ச்செய்கையாளர்கள் அரை ஏக்கருக்கும் குறைந்த அளவு நிலத்திலேயே சாகுபடி செய்கின்றனர்.

இதுவரை அவதானித்தவாறான பொருளாதார அமைப்பு தன்மைகளைக் கொண்டிருக்கும் கிராமிய விவசாயத்துறையில் கடன் கொடுப்பனவு, சேமிப்புத் திரட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு 1911 ம் ஆண்டு தொடக்கம் நிறுவன ரீதியான அமைப்புக்கள் விரிவாகிக்கொண்டு வருகின்றன. கிராமியக் கொடுகடன் நிறுவனங்களின் விரிவையும் நடவடிக்கைகளையும் விளங்கிக்கொள்ளவேண்டுமாயின் கிராமியப் பொருளாதாரத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியினையும்; கிராமியத்துறை நகர, சர்வதேச அமைப்புக்களினோடு கொண்டிருக்கும் உறவுகளையும் தொடர்புபடுத்தி நோக்குவது அவசியமாகும்.

## கிராமியப் படுகடனின் அவசியம்

கிராமிய மக்களின் படுகடன் விரிவுக்கு சிக்கனமற்ற நிலவுடைமை, பயிர் அழிவு, உற்பத்திச் செலவுகளின் தொடர்ச்சியான அதிகரிப்பு, ஏற்கனவே பட்டகடன் ஆகியன பிரதான காரணங்களாக உள்ளன.

1. சிக்கனமற்ற நிலவுடைமை:-

பேராசிரியர் யோகரத்தினம், சிக்லர் ஆகியோரின் கணிப்புக்களின்படி இலங்கையின் சராசரி நெற்காணியுடைமை 2 ஏக்கருக்கும் குறைவானதாகும்.

| | | |
|---|---|---|
| ½ ஏக்கருக்கும் குறைந்த நிலவுடைமை | — | 35.7% |
| ½ — 1 ஏக்கருக்கு இடைப்பட்ட நிலவுடைமை | — | 29.4% |
| 1 — 2 ஏக்கருக்கு இடைப்பட்ட நிலவுடைமை | | 17.1% |
| 2 – 5 ஏக்கருக்கு இடைப்பட்ட நிலவுடைமை | — | 14.2% |
| 5 — 10 ஏக்கருக்கு இடைப்பட்ட நிலவுடைமை | — | 2.9% |
| 10 ஏக்கருக்குக் கூடுதலான நிலவுடைமை | — | 0.7% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 ஏக்கருக்கும் குறைந்த நில அளவானது பொருளாதார ரீதியில் சிக்கனமற்றதாகும். கிராமியக் குடியான விவசாய அமைப்பானது குடும்ப உழைப்பையும் சீவனோபாயத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருப்பதனால், மேற்கண்ட சிக்கனமற்ற நிலவுடைமையில் இருந்து பெறப்படும் வருமானத்தின் போதாமையானது படு கடனைத் தவிர்க்கமுடியாததாக்குகின்றது.

2. பயிர் அழிவு:-

இலங்கையின் பெருந்தொகையான விவசாயிகள் உலர் வலயத்தில் பயிர் செய்கின்றனர். இவர்களிற் பெரும்பாலானோர் வானம் பார்த்த பூமியையே பெற்றிருக்கின்றனர், பல சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்த மழை கிடைக்காமற்போய்விடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வெள்ளம் ஏற்பட்டு விளைந்த பயிர்களை அழித்துவிடுகின்றது. இவ் இயற்கை பாதிப்பு மட்டுமல்லாது, போதிய பயிர்ப் பாதுகாப்பு இல்லாமையினால் யானை, பன்றி போன்ற காட்டு மிருகங்களினாலும் விவசாயிகள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான பாதிப்புக்களினால் பயிர் அழிவு ஏற்பட்டு வருமானம் இழந்திருக்கும் நிலையில் விவசாயிகள் தம் நுகர்வுத் தேவைகளையும், எதிர்வரும் காலத்தின் பயிர்ச்செய்கைத் தேவையையும் குறித்து கடன்காரர்களாக வேண்டியேற்படுகின்றது.

3. உற்பத்திச் செலவுகளின் அதிகரிப்பு:-

புதிய தொழில் நுட்பங்கள் கிராமிய விவசாயத்துறையில் பொருந்தாமுறையிற் புகுத்தப்பட்டதன் காரணமாக விவசாயத்துக்கான கடன் ஓர் அத்தியாவசியமான அங்கமாகியுள்ளது. மரபு ரீதியாக விதைக்கப்பட்டுவரும் நெல்லினங்களைவிடக் கூடிய விளைச்சல் தருபவை என எதிர்பார்க்கப்படும் புதுரக நெல்லினங்கள், செயற்கைப் பசளைகள், களை கொல்லிகள் போன்ற உள்ளீடுகள் அவசியமானவையாக ஆக்கப்பட்டுள்ளன. விவசாயத்தில் விலங்கினங்களின் பாவனை கைவிடப்பட்டு டிரக்டர், நீரிறைக்கும் இயந்திரம் போன்ற பெரும் மூலதனச் செலவுகள் தவிர்க்கப்பட முடியாதவையாக்கப்பட்டுள்ளன. விவசாய நவீனமயமாக்கல் என்ற பெயரில் ஆரம்பத்தில் கடன் வசதிகளோடு கிராமிய விவசாயியின் வாழ்வினுள் புகுந்த மேற்கண்ட அம்சங்கள் காலப்போக்கில் அவனைக் கட்டாயமான முறையில் கடன்பெறவேண்டிய நிலைக்குள்ளாக்கியுள்ளன.

குடியான விவசாயிகளிற் பெரும்பாலோர் - அனைவரும் என்று கூடக் கூறலாம் - பிறக்கும்போது கடனுடன் பிறக்கின்றனர். விவசாயத்தைத் தொடங்கும்போது கடன் பெற்றே தொடங்குகின்றனர். பெற்ற கடனை அடைக்கக்கூடிய வகையில் விளைச்சல் தரும் வருமானம் போதாமையினால் தொடர்ந்தும் கடனாளியாகவே இருக்கின்றனர். இறக்கும் போதும் கடனாளியாகவே இறக்கின்றனர்.

1957 ம் ஆண்டின் கிராமியக் கடன்நிலை பற்றிய ஆய்வின்படி கடன்கள் உற்பத்தி சார்ந்தவை, உற்பத்தி சாராதவை என வகைப்படுத்தப்படுகின்றன. மொத்தக் கடனில் 56 வீதம் உற்பத்தி சார்ந்ததாகவும் 44 வீதம் உற்பத்தி சாராததாகவும் காணப்பட்டது. உற்பத்தி சார்ந்த கடன்பிரிவில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, வர்த்தகம், நிர்மாண வேலைகள், வாகனக் கொள்வனவு போன்றனவும். உற்பத்தி சாராத பிரிவில் உணவு, மருத்துவம், கொண்டாட்டங்கள், கடன் மீளச் செலுத்துதல் போன்றவற்றுக்காகப் பெறப்படும் கடன்களும் உள்ளடக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய குடியான விவசாயிகளின், நிலமற்ற விவசாயத் தொழிலாளரின் கடன் தேவைகளும்; கிராமிய கடைக்காரர், மத்தியதர, பணக்கார விவசாயிகள், கிராமங்களில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழில் செய்வோர், நிலச்சுவான்தர்கள் ஆகியோரின் கடன் தேவைகளும் ஒன்றல்ல. குடியான விவசாயிகள் தமது அடிப்படைத் தேவைகளான பயிர்ச்செய்கை, உணவு, மருத்துவம், கொண்டாட்டங்கள், கடன் மீட்சி போன்றன குறித்து கடன் கோருகின்றனர். ஆனால் இரண்டாவது வகையினர் முற்கூறப்பட்டவற்றுக்கு மேலாக உபஉணவுப் பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு, சிறுகைத்தொழில், இயந்திர உபகரணக் கொள்வனவு, வீடுகட்டல், வாகனக் கொள்வனவு, வர்த்தகம், கூடிய வட்டிக்குப் பணம் கடன் வழங்கல் ஆகியன குறித்தும் கடன் கோருகின்றனர். வர்த்தக வங்கிகள் வழங்கும் கிராமியக் கொடுகடனில் இவ்வாறானவற்றுக்கே கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. 1980 ம் ஆண்டு வர்த்தக வங்கிகள் வழங்கிய மொத்தக் கிராமியக் கொடுகடனில் இவை சுமார் 60 வீதமும், 1981 ம் ஆண்டு வழங்கப்பட்ட கடனில் 50 வீதமும் இவ்வாறான தேவைகட்காகவே வழங்கப்பட்டுள்ளது.

## கிராமியக் கொடுகடன் நிறுவனங்களின் வளர்ச்சி:

1906 ம் ஆண்டு இலங்கையின் பிரித்தானிய ஆளுநரினால் நியமிக்கப்பட்ட 'கிராமியக் கடன் பற்றிய ஆய்வுக்குழு'வின் அறிக்கையின் பேரில், லண்டனிலிருந்து பெறப்பட்ட குடியேற்றச் செயலாளரின் அனுமதியுடன் ரூ. 2 மில்லியன் 'சுதேச விவசாயிகளுக்கான கடன்' என்ற பெயரில் கிராமியக் கடன் முதன்முதலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. அதே குழுவின் ஆலோசனையின் பேரில் 1911 ம் ஆண்டின் 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சட்டப்படி' கடன் கொடுப்பனவு நோக்குடன் கூட்டுறவு அமைப்பு இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டது. 1904 ம் ஆண்டுதான் இந்தியாவில் கூட்டுறவு அமைப்பு சட்டப்படி ஆரம்பிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1911 க்கும் 1926 க்கும் இடைப்பட்ட காலம் இலங்கையின் கூட்டுறவு அமைப்பு வளர்ச்சியின் 'பரிசோதனைக் காலம்' என அழைக்கப்படுகின்றது. 1926 ம் ஆண்டு மொத்தம் 315 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அவற்றில் 290 சங்கங்கள் விவசாயக் கடன் சங்கங்களாகவே தொழிற்பட்டன. இவ்வாண்டில் கூட்டுறவு அமைப்பு 84164 உறுப்பினர்களைக்கொண்டிருந்ததுடன் 444,000 ரூபாவைக் கடனாக வழங்கி 328,000 ரூபாவை மட்டுமே மீளப்பெற்றது.

1941 ம் ஆண்டு 1786 கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 91988 உறுப்பினர்களுடன் இயங்கிவந்தன. இரண்டாவது உலக யுத்தத்தின் போது கூட்டுறவு அமைப்பானது கடன் வழங்கும் நடவடிக்கை என்பது மட்டுமல்லாது வர்த்தக நடவடிக்கைகளையும் ஆரம்பித்தது. உலக யுத்தத்தின்போது ஏற்பட்ட உணவு நெருக்கடியைத் தவிர்க்குமுகமாக அரசாங்கம் நுகர்வுப்பொருட்களைப் பகிர்வு செய்வதற்காக கூட்டுறவு அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டது. இதன்படி கூட்டுறவு அமைப்பில் நுகர்வோர் பொருட்கள் பகிர்வு செய்யும் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவை 1942 ல் 32 ஆக இருந்து 1945 ல் 4004 ஆகியது. இக் காலகட்டத்தில் கூட்டுறவு வர்த்தகநடவடிக்கை இலாபகரமாக இயங்கியதனால் கடன் கொடுப்பனவில் அவ்வளவு அக்கறையாக இருக்கவில்லை.

1947 — 67 கால இடைவெளியில் கொடுகடன் நிர்வாகமானது அரசாங்கத் திணைக்களங்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது. 1947 க்கு முன்னர் நிறுவன

ரீதியான கடன் கூட்டுறவுச் சங்கங்களினூடாக சிறிய அளவிலேயே காணப்பட்டது. 1947 இலிருந்து நில ஆணையாளர் திணைக்களமும் 1952 இலிருந்து உணவு உற்பத்தித் திணைக்களமும் பயிர்ச்செய்கைக்காக குறுங்காலக்கடன்களையும், விவசாய இயந்திரக் கொள்வனவுக்காக மத்திய காலக் கடன்களையும் கூட்டுறவு விவசாய உற்பத்திவிற் பனவுச் சங்கங்களினூடாக வழங்கின, அத்துடன் இச் சங்கங்களினூடாக வாகனக் கொள்வனவு, பண்டசாலை நிர்மாணம் ஆகியவற்றிற்கான கடன்களையும் வழங்கியது. இத் திட்டத்தின் கடன் நடவடிக்கை விரிவடைந்தது 1947 / 48 இல் ரூ 4.36 மில்லியன் ஆகவும் 1951 / 52 ல் ரூ. 8.35 மில்லியனாகவும் 1952/53 ல் ரூ 15.86 மில் லியனாகவும் கொடுகடன் அதிகரித்துச் சென்றது.

1956 ம் ஆண்டு பதவியேற்ற மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் உருவாக் கப்பட்ட விவசாய சேவைத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கிராமியக் கொடுகடன் நடவடிக்கை 1957 இலிருந்து மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இக்காலகட்டத்தில் கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் என்பன பல நோக்குக் கூட்டு றவுச் சங்கங்களாக மாற்றியமைக்கப் பட்டு அவற்றின் கடமைகளும் விரிவாக்கப்பட் டன. உரம்வழங்கல், சிறுநீர்ப்பாசன வேலைகளை அமுல் செய்தல், பயிர்காப்புறுதித் திட்டத்தை மேற்பார்வையிடல், உத்தரவாத விலைத்திட்டத்தை நடைமுறைப் படுத் தல், 1958 ன் நெற்காணிச்சட்டப் படி நெற் காணிகளின் குத்தகையை ஒழுங்கு படுத் தல் ஆகியவற்றையும் விவசாய சேவைத் திணைக்களம் மேற்கொண்டு வந்தது 1967 வரை இத் திணைக்களம் கொடுகடன் நடவடிக்கை மீது பொறுப்பாக இருந்து வந்தது.

விவசாயசேவைத் திணைக்களத்தின் பொறுப்பில் கிராமியக் கொடுகடன் நிர் வகிக்கப் பட்ட காலத்தில் கடன் கொடுக்கும் அளவு வருடா வருடம் வீழ்ச்சியடைந்து வந்தது. 1957 உடன் ஒப்பிடுகையில் 1963 ம் ஆண்டின் கடன் கொடுப்பனவு 50 வீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. எனினும் 1963 ன் புதிய விரிவாக்கப்பட்ட கொடு கடன் திட்டத்தின்கீழ் கடன் அதிகரித்தது. அத்துடன கடன் மீளப்பெறப்படா வீதமும் படிப்படியாக அதிகரித்து வந்தது. 1963 வரை வழங்கப்பட்ட கடனின் சுமார் 10 வீதம் மீளப்பெறப்பட வில்லை. 1964 / 1967 இல் இவ் வீதம் 56 ஆகக் காணப்பட்டது. விவசாய சேவைத் திணைக்களம் ஆனது கூட்டுறவுச்சங்கங்களினூ டாகவும், 1961 ம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியினூடாகவும், 1964 ஆம் ஆண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மக்கள் வங்கியினால் உருவாக்கப் பட்ட கிராமிய வங்கிகளினூடாகவும் கொடுகடனை நிர்வகித்து வந்தது.

1963 ம் ஆண்டின் விரிவாக்கப்பட்ட கொடுக்டன் திட்டத்தின் கீழ் கடன் கொடுப்பனவு இறுக்கமாக்கப் பட்டது. அத்துடன் 1954 தொடக்கம் கடன் கொடுப் பனவில் கடைப்பிடிக்கப்பட்ட 'கூட்டுப் பொறுப்புத் தத்துவம்' கைவிடப்பட்டு, 'தனி விவசாயி பொறுப்புக்கடன்' வழங்கும் முறை ஆரம்பிக்கப் பட்டது. இது கடன் மீளளிக் கப்படா நிலையை மேலும் அதிகரித்தது. கூட்டுப் பொறுப்புத் தத்துவம் கைவிடப் பட்டமைக்கு நவீன தொழில் நுட்பத்தை விவசாயத்தில் புகுத்தும் கொள்கையே காரணமாக இருந்தது.

1965 இல் பதவிக்கு வந்த தேசிய அரசாங்கம் விவசாய சேவைத் திணைக்களத் தின் கடன் நிர்வாகத்தில் நம்பிக்கையிழந்து 1966 ம் ஆண்டு குழுவொன்றை நிய மித்து ஆய்வு நடத்தியது, அக் குழுவின் ஆலோசனையின் பேரில் 1967 ல் 'புதிய விவ சாயக் கொடுகடன் திட்டம்' நடை முறைப் படுத்தப் பட்டது, இதன் படி விவசாயக் கடன் தொழிற்பாடு முழுவதும் மக்கள் வங்கியிடம் ஒப்படைக்கப் பட்டு 30 வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத் திணைக்கள கடன் முகாமைக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது, இது வரை கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்திணைக்களங்களிடமிருந்து நிதியைப் பெற்று அவற்றைத் திரும்ப விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தார்கள். ஆனால் இப் புதியதிட்டப் படி கடன் கொடுப்பனவில் இலங்கை மத்திய வங்கியும், மக்கள் வங்கியும் ஈடுபட்டன. மத்திய வங்கியானது மீளளிக்கப்படாத பயிர்ச்செய்கைக் கடனில் 75 வீதத்திற்கு உத்தரவாதமளித்தது. கடன் கொடுப்பனவு நிர்வாகம் மக்கள் வங்கியினால் மேற்கொள்ளப்பட்டது. எனினும் கூட்டுறவுச் சங்கங்களினையும் கிராமியவங்கிகளையும் கடன் கொடுப்பனவுக் காகப் பயன்படுத்திக்கொண்டது, இத் திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் கடன் கொடுப்பனவு அளவு அதிகரித்ததாயினும் தொடர்ந்து அவ்வாறு செயற்பட முடியாமல் படிப்படியாக குறைவடைந்தது. கடனை மீளப் பெறுதலில் தோல்வி அதிகரித்துச் சென்றது. 1964 ல் ஆரம்பிக்கப்பட்ட மத்தியகால, நீண்டகாலக் கடன் களுக்கு 1967 ன் புதிய விவசாயத்திட்டம் மேலும் முக்கியத்துவத்தை வழங்கியது.

1973 ம் ஆண்டு கிராமியக் கொடுகடன் கொள்கைமீளமைக்கப் பட்டது. விவசாய அமைச்சினால் நியமிக்கப்பட்ட விவசாயக்கடன் தொடர்பான செயற்குழு புதியவிவசாயக் கொடுகடன் திட்டத்தை ஆராய்ந்து அதற்குப் பதிலாக ‘யாவற்றையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்’ என்னும் புதிய வடிவிலான திட்டமொன்றினை முன்மொழிந்தது. இத் திட்டத்தின்படி, முந்திய மாதிரியே மக்கள் வங்கியின் கடன் நடவடிக்கை கூட்டுறவுச் சங்கங்களினூடாக தொடரப்பட்டதுடன், 1939 ம் ஆண்டு தொடங்கப் பெற்று இதுவரை நகரத்துறையில் மட்டுமே இயங்கி வந்த இலங்கை வங்கி விவசாயக் கடன் துறையை நோக்கி நகர்ந்தது. இலங்கை வங்கி தனது கிளையை சமத்தொழில் சேவை நிலையங்களில் ஆரம்பித்து நேரடியாக விவசாயக் கடன்களை வழங்கியது. 1974 ல் 438 கிளைகள் இயங்கின. 1977 ல் இவை 370 கிளைகளும் 1980 ல் 587 கிளைகளும் இயங்கின. ஆனால் பல உபஅலுவலகங்கள் இணைக்கப்பட்ட தன் காரணமாக இக் கிளைகளின் எண்ணிக்கை 1981 ல் 104 ஆகியது.

1973ம் ஆண்டுத் திட்டப்படி உற்பத்திக் கடன்கள் மட்டுமல்லாது நுகர்வு, வீட்டுவசதி, கடன்மீட்சி, அவசரத்தேவைக் கடன்களும் வழ்ங்கப்பட்டன. அத்துடன் சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்களைத் திரட்டும் நடவடிக்கைகளும் விரைவுபடுத்தப்பட்டன. 1972ல் ரூ 23,320,586 ஆக மொத்த கிராமிய வைப்புக்கள் 1975 ல் ரூ: 74,213,971 ஆகவும் 1930ல் ரூ 386,353,733 ஆகவும் விரிவடைந்தது. இத் திட்டமும் கொடுகடனை மீளப் பெறுதலில் தோல்வியையே கண்டது. 1977/78ல் மீளளிக்கப்படா வீதம் 49.5 ஆகவும் 1977/78ல் 81.1% ஆகவும் உயர்ந்து காணப்பட்டது.

1977ம் ஆண்டு பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கடன் கொடுப்பனவில் இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி பெருந்தொகையான கிராமிய கடனை வழங்கியது. 1976/77ல் ரூ 102 மில்லியன் ஆக இருந்த நெற்பயிர்ச் செய்கைக் கடன் 1977/78ல் ரூ447, மில்லியன் ஆக உயர்ந்தது. இவ்வாண்டு முன்னர் பெற்ற கடனைக் கட்டாதவர்களுக்கும், விவசாயக் காணியுண்டு என கிராம சேவகரின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றவர்கள் அனைவருக்கும் கடன் வழங்கப்பட்டது. 1977 இன் பொதுத்தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிராம மட்டத்தில் செல்வாக்கு அதிகரித்தமையே இதற்குக் காரணம் எனப்படுகின்றது. எனினும் இக் கொள்கையை அடுத்த ஆண்டுகளில் தொடர்ந்து செயற்படுவது சாத்தியமற்றதாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 ம் ஆண்டு நடுப்பகுதியில் கடன்கொள்கை மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது. 1977/78 ன் பெரும்போகத்தில் கடன் நிலைமையை அவதானித்த உலகவங்கியின் பொருளாதாரக்குழு, நிலவும் கடன் கொள்கையையும் நிலைமைகளையும் ஆராய்ந்து அரசாங்கமானது கிராமியக்கடன் தொடர்பாக ஒரு தெளிவான கொள்கை அறிக்கையை வெளியிடவேண்டுமென சிபார்சு செய்தது. 1978 ஜனவரியில் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் உருவாக்கப்பட்ட இணைப்புக்குழு கடன் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கையொன்றை அபிவிருத்திச் செயலாளர் குழுவுக்கு ஒப்படைத்தது. அக்குழு உடனடியாக அதனை ஒரு மகஜராக விவசாய, காணியமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்தது. இதேவேளை திட்ட அமுலாக்கல் அமைச்சும் ஓர் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. இவற்றின் விளைவாக மத்தியவங்கியின் 75 வீத உத்தரவாதம் 1978ன் நடுப்பகுதியிலிருந்து நீக்கப்பட்டது. அத்துடன் கடனைத் திருப்பக் கூடிய தகுதி வாய்ந்தோருக்கும். கடன் மீளளிப்பதில் தவறாத விவசாயிகளுக்குமே கடன் வழங்கப்படவேண்டுமென கடன் வழங்கும் நிறுவனங்கள் பணிக்கப்பட்டன.

இந்தக் கட்டுப்பாடான கடன் திட்டத்தின் விளைவாக கடன்வழங்கும் அளவு வீழ்ச்சியடைந்தது. 1978/79 ல் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நெசனல் வங்கி ஆகிய மூன்றும் வழங்கிய மொத்த விவசாயக் கடன் தொகை ரூ 65.7 மில்லியன் ஆகும். இது 1977/78 ன் கடன் கொடுப்பனவு அளவுடன் ஒப்பிடுகையில் மிகத் தாழ்வானதாகும். எனினும் 1978/80 ல் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடனிலும் 44 வீதம் மீளப்பெறப்படவில்லை.

கிராமியக் கொடுகடன் விடயத்தில் நிறுவனங்களின் வளர்ச்சியினைத் தொகுத்து அவதானிப்பின் கொடுகடன் மீளப் பெறப்படாப் பிரச்சினையும், அரசாங்க மாற்றங்களும் கொடுகடன் கொள்கை மாற்றங்களுக்கும் நிறுவனங்களின் விரிவாக்கத்துக்கு வழிவகுத்திருப்பதை வெளிப்படையாகக் காணலாம். எனினும் கிராமிய சமூக, பொருளாதார நெருக்கடிகள், அந்நிய செலாவணி நெருக்கடி, சர்வதேச நிதி நிறுவனங்களின் தலையீடு, புதிய தொழில் நுட்பங்களை விவசாயத்தில் புகுத்தல், மாறிவந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றினதும் மாறுபட்டபொருளாதாரக் கொள்கைகள் என்பன நிறுவன ரீதியான கிராமியக்கடன் விடயத்தின் பின்னணியில் தொழிற்பட்டுள்ளதையும் காணலாம்.

1981 ம் ஆண்டின் இறுதியில் மக்கள் வங்கி 290 கிளைகளைக் கொண்டிருந்தது. இவ் வங்கி கிராமியக் கடனைப் பிரதான நோக்கமாகக் கொண்டே 1961 ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. இதைவிட 1981 ன் இறுதிப்படி 746 கிராமியவங்கிக் கிளைகளும் கமநலசேவை நிலையங்களில் அமைந்துள்ள 104 இலங்கை வங்கிக் கிளைகளும் கிராமியக்கொடுகடன், கிராமிய மக்களிடமிருந்து சேமிப்புக்களைத் திரட்டல் நடவடிக்கைகளினைமேற் கொண்டு வருகின்றன. மேலும் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக நாடு முழுவதும் வலைப்பின்னலாக கிராமங்கள் ஒவ்வொன்றையும் ஊடுருவி வளர்ச்சியடைந்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்களும் இக்கடமையை ஆற்றிவருகின்றன. தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பானது கிராமியக் கடன் கொடுப்பனவை மேலும் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு நாடு முழுவதிலும் ஐக்கிய நாணயச் சங்கங்களை தாபித்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவன மூலங்களின் பங்கு

இலங்கையின் கிராமியக் கொடுகடன் அமைப்பில் இன்றும் நிறுவனரீதியற்ற கடன் மூலங்களின் பங்கே ஒப்பீட்டுரீதியில் அதிகமாக உள்ளது. எனினும் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக அக்கறை செலுத்திவருவதனால் நிறுவன ரீதியான மூலங்களின் செல்வாக்கு விகிதாசார ரீதியில் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நிறுவன ரீதியான மூலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக வங்கிகள், அரசாங்கத் திணைக்களங்கள் என்பனவும்; நிறுவனரீதியற்ற கடன் மூலங்கள் என்பதில் தொழில் ரீதியாகக் கடன் கொடுப்போர், உப தொழிலாகக் கடன் கொடுப்போர், கடைக்காரர்கள், வர்த்தகர்கள், தரகு முகவர்கள், நிலவுடைமையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியனவும் உள்ளடக்கப்படுகின்றன.

1957 ல் மொத்தக் கிராமியக் கடனில் 8 வீதத்தினை மட்டும் வழங்கிய நிறுவன அமைப்புக்கள் 1969 ல் 25 வீதப் பங்கினையளிக்கும் வகையில் விரிவடைந்தன. 1976 ம் ஆண்டின் மதிப்பீட்டின்படி விவசாயத்துறையின் நெற்கடனில் 55 வீதத்தினை நிறுவன ரீதியான மூலங்கள் வழங்கின. கிராமியக் கடன் அமைப்பில் மிக அடிப்படைத்தேவையான நெற்கடனில் நிறுவனரீதியற்ற மூலங்களினைவிட நிறுவனரீதியான கடன் மூலங்களின் பங்கு கூடியமையானது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் ஆகும்.

| மூலங்கள் | 1957 | 1961 | 1969 | 1976 * |
|---|---|---|---|---|
| நிறுவனரீதியானவை | 7.8 | 34.2 | 25.0 | 54.6 |
| நிறுவனரீதியற்றவை | 92.2 | 65 8 | 75 0 | 45.4 |
| | 100 0 | 100.0 | 100.0 | 100 0 |

* 1976 ல் நெற்கடன் மட்டுமே மதிப்பிடப்பட்டது.

1961 - 62 இன் ஆய்வுகளின்படி நிறுவன ரீதியான மூலங்களின் பங்கு 34.2 வீதமாக இருந்ததாகவும் அதில் கூட்டுறவின் பங்கு 33 வீதமெனவும் கூறப்படுகின்றது. இந்நிலைமையானது 1958 இன் நெற்காணிச் சட்டத்தின் விளைவு எனப்படுகின்றது. இச் சட்டம் நிறுவன ரீதியற்ற கடன்களின் உச்சமட்டத்தை நிர்ணயித்தது. அதேவேளை இக்காலகட்டத்தில் விதைகள் மற்றும் மூலதன உள்ளீடுகளான எருமை, டிரக்டர், விவசாய உபகரணங்கள் ஆகியவற்றிற்கான கடன்களை அரசாங்கம் அதிகரித்தது, ஆனால் நெற்காணிச் சட்டத்தின் தோல்வியினால் மேற்கண்ட நிலைமை தொடர்ந்து செயற்படமுடியாமல் மீண்டும் நிறுவனரீதியற்ற மூலங்களின் பங்கு அதிகரித்தது. எனினும் 1967 ல் கொண்டுவரப்பட்ட புதிய விவசாயக் கொடுகடன் திட்டம் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் ஆகியவற்றினால் நிறுவனரீதியான மூலங்களின் பங்கு ஓரளவு பராமரிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில், கொடுகடன் மூலங்களில் உள்ள ஒவ்வொருவகை நிறுவனமும் ஆற்றிவரும் பங்கினை அவதானிக்கும்போது வர்த்தகவங்கிகளின் விகிதாசார ரீதியான பங்கு தொடர்ச்சியாக அதிகரித்து வருவதையும், கூட்டுறவுகளின் பங்கு வீழ்ச்சியடைந்து வருவதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிராமியத் துறையின் நிறுவன ரீதியான கடன் மூலங்கள்

| மூலங்கள் | மொத்த நிறுவனக் கடனின் விதாசாரம் 1957 | 1969 | 1976 * |
|---|---|---|---|
| அரசாங்கம் | 33.3 | 10.8 | 13.4 |
| வர்த்தக வங்கிகள் | 14.1 | 26.8 | 67.6 |
| கூட்டுறவுகள் | 52.6 | 38.8 | 9.3 |
| கிராமிய வங்கிகள் | — | — | 9.7 |
| ஏனைய நிதி நிறுவனங்கள் | — | 23.6 | — |
| | 100.0 | 100.0 | 100.0 |

* 1976 ல் நெற்கடன் மட்டுமே மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

நிறுவனரீதியற்ற மூலகங்களைப் பொறுத்தவரையில் தொழில்ரீதியாகக் கடன் கொடுப்போர், கடைக்காரர் ஆகியோரின் பங்கு அதிகரித்து வருகின்றது. இவற்றின் பங்கு 1957 ல் 22,7 விதமாக இருந்து 1969 ல் 43.1 விதமாக அதிகரித்தது இதே வேளை 1957 ம் ஆண்டு 52.2 விதமாக இருந்த நிலச்சுவான்தர், உறவினர், நண்பர்களிடமிருந்து பெற்றகடன் 1969 ல் 26.5 விதமாகியது.

| மூலங்கள் | மொத்தக் கடனில் சதவீதம் 1957 | | | 1969 |
|---|---|---|---|---|
| 1. நிறுவனரீதியானவை | | 7.8 | | 25.0 |
| அரசாங்கம் | 2.6 | | 2.7 | |
| கூட்டுறவு | 4.1 | | 9.7 | |
| வர்த்தக வங்கிகள் | 1.1 | | 6.7 | |
| ஏனையவை | — | | 5.9 | |
| 2. நிறுவனரீதியற்றவை | | 92.2 | | 75.0 |
| தொழில்ரீதியாகக் கடன் கொடுப்போர் | 15.2 | | 11.0 | |
| உபதொழில்ரீதியாக கடன் கொடுப்போர் | — | | 17.8 | |
| கடைக்காரர்கள் | 7.4 | | 14.3 | |
| வர்த்தகர்கள், தரகுமுகவர்கள் | 4.1 | | 1.5 | |
| நிலச்சுவான்தர்கள் | 8.0 | | 0.7 | |
| உறவினர், நண்பர் | 44.2 | | 25.8 | |
| ஏனையோர் | 13.0 | | 3.9 | |
| | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

முடிவாக கடன் மூலங்களின் பங்கைத் தொகுத்து நோக்கின், 1947 தொடக்கம் 1967 வரையான 20 வருடங்கள் அரசாங்கத்திணைக்களங்களினூல் கடன் நடவடிக்கை ஒழுங்குபடுத்தப்பட்டும், 1967 — 77 வரையான ஆண்டுகளில் மிகப்பரந்த வகையிலான திட்டங்களின் மூலம் கூட்டுறவு அமைப்புக்களினூடாக கடனைச் செலுத்தியும் கூட 75 விதக் கடன் வழங்கலை நிறுவன ரீதியற்ற மூலங்களே கொண்டிருக்கின்றன 1969 ன் நிறுவன மூலங்களின் பங்காகிய 25 வீதத்தை விட 1970 க்குப் பின்னர் இதன் பங்கு அதிகரித்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. 1973 / 74 — 1977 / 78 வரை நிலவிய தாராளக் கடன் வழங்கும் கொள்கை'யானது சில மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பினும் 1978 ன் நடுப்பகுதியில் தொடங்கிய 'கட்டுப்படுத்தப்பட்ட கடன் வழங்கும் கொள்கை'யானது நிறுவன மூலத்தின் கடன் வழங்கும், பங்கை 1970 ஐ விடக் குறைந்திருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள்:

கிராமியக் கொடுகடன் விடயத்தில் உள்ள பிரச்சினைகள் யாவற்றினையும் இக் கட்டுரையில் உள்ளடக்குவதில் உள்ள சாத்தியமின்மை கருதி இங்கு சில அடிப்படையான பிரச்சினைகள் மட்டும் குறிப்பிடப்படுகின்றன.

முதலாவதாக, கடந்த 75 ஆண்டுகளாக குறிப்பாக கடந்த 35 ஆண்டுகளாக கிராமிய மக்களின் கடன் சுமை அதனால் எழும் ஏனைய சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் என்பன குறித்து தொடர்ந்து அரசாங்கங்கள் அனைத்தும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளன. இந் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளையும், திட்டங்களையும், உதவிகளையும் உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் வழங்கி வந்துள்ளன. 1950 களின் சமூக அபிவிருத்தித்திட்டம், 1960 களின் விவசாய அபிவிருத்தித் திட்டம், கிராமிய அபிவிருத்தித் திட்டம், 1970 களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம் ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் கிராமிய மக்களின் கடன் சுமை உட்பட்ட சகல அடிப்படையான சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் பொருட்டுமேற் கொள்ளப்பட்டவையாகும். அதிலும் கிராமியக் கடன் பிரச்சினையை நேரடியாகக் குறித்த வகையில் கூட்டுறவு அமைப்புக்கள், வங்கியமைப்புக்கள் ஆகியன ஏற்படுத்தப்பட்டன விரிவு படுத்தப்பட்டன. இவ்வாறான பல நடவடிக்கைகள் இடம் பெற்ற போதிலும் கிராமிய மக்களின் கடன் சுமை மேலும் மேலும் அதிகரித்து வந்துள்ளதே தவிர குறைவடைவதாக இல்லை. 1950 ல் 30 வீதமான கிராமியக் குடும்பங்களே கடன் சுமையில் இருந்தன. ஆனால் 1957 இல் குடிசன புள்ளி விபர திணைக்களம் மேற்கொண்ட கிராமிய கடன் படுநிலை பற்றிய ஆய்வின்படி 54 சதவீதமான கிராமியக் குடும்பங்களும், 60 சதவீதமான விவசாயக் குடும்பங்களும் கடன்பட்டவையாக இருந்தன. சராசரியாக இக்கடன் தொகையானது தலா கிராமிய குடும்பமொன்றுக்கு 790 ரூபாவாகவும், தலா விவசாயக் குடும்பமொன்றுக்கு 753 ரூபாவாகவும் இருந்தது. 1969 ம் ஆண்டின் ஆய்வுகளின் படியும் 54 வீதமான கிராமியக் குடும்பங்கள் கடன் படு நிலையிலேயே வாழ்ந்து வந்தன.

இரண்டாவதாக, கடந்த காலத்தில் நிறுவன ரீதியான கொடுகடன் திட்டங்கள் பல்வேறு வடிவங்களில் விரிவாக்கப்பட்ட போதிலும், புதுப்பிக்கப்பட்ட போதிலும் இக் கடன் சேவையானது சாதாரண சிறு நில விவசாயிகளை அல்லது கிராமிய வறிய மக்களைச் சென்றடையக் கூடியதாக இருந்துள்ளதா என்பது கேள்விக் குறியாகும். 1965 - 66 ல் சுமார் 8 லட்சம் நெற்செய்கை பண்ணும் சனத்தொகையில் 5,60,000 பேர் கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவராக இருந்தனர். அவர்களில் 78,501 பேர் மட்டுமே கூட்டுறவு அமைப்பினால் கடன் வழங்கப்பட்டனர். மேலும் 1967 ல் புதிய விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்பு வழங்கிய ரூ 61.4 மில்லியன் கடனானது 138,943 விவசாயிகளுக்கே பகிரப்பட்டது. இத் தொகையினை இக்கால கட்டத்தில் 2 ஏக்கருக்கு மேலதிகமான விவசாய நிலத்தினை உடைமையாகக் கொண்டிருந்த 142,460 நெற் பயிர்ச்செய்கையாளரின் தொகையுடன் தொடர்புபடுத்தி நோக்குவது பொருத்தமானதாகும்.

மேலும் 2 ஏக்கருக்கு உட்பட்ட நிலவுடைமையைக் கொண்டிருக்கும் நெற்பயிர்ச் செய்கையாளர்கள் தமது விவசாய நடவடிக்கையின் 31 வீதத்தினையே பயிர்ச் செய்கைக் கடன்கள் மூலம் மேற்கொள்கின்றனர். ஆனால் 6 ஏக்கருக்கும் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் பயிர்ச்செய்கை பண்ணும் வர்க்கமானது 89 வீதத்தினைக் கடன்மூலம் மேற்கொள்கின்றது. எனவே யாருக்கு நிறுவனரீதியான கடன்கள் கூடுதலாகப் பயன்படுகின்றன என்பதனையும் நிறுவனரீதியான கடன்களில் பெரும்பங்கு எவ்வகையினரால் பெறப்படுகின்றது என்பதையும் இப் புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

1954-63 காலத்தில் கூட்டுறவு அமைப்புக்களினூடாக அரசாங்கம் 'கூட்டுப் பொறுப்பு' அடிப்படையிலான கடன்களையே வழங்கியது. சிறு விவசாயிகள் பெற்ற கடனைத் திருப்பமுடியாதபோது மத்தியதர வர்க்க. பணக்கார விவசாயிகள் கடன் பெறுதலை இம் முறைமையானது பாதித்தது. இதனால் விவசாய நவீனமயமாக்கத்தை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட புதிய விரிவாக்கப்பட்ட கடன் திட்டம் 1963 ல் நடைமுறைப்படுத்தப்பட்ட போது மத்தியதர வர்க்க, பணக்கார விவசாயிகளும், நிலச் சுவாந்தர்களும் கடன் பெறுவதில் இருந்த சிறு தடைகளையும் நீக்கும்பொருட்டு 'தனியாள் பொறுப்பு' அடிப்படையில் கடன் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் விவசாயிகள் கடன் பெறுவதற்கான நிபந்தனைகள் அதிகரிக்கப்பட்டன. இதனால் பெற்றகடனைத் திருப்பமுடியாத சிற்றுடைமை விவசாயிகள் பலர் கூட்டுறவுச்சங்க அங்கத்துவத்தை இழந்து கடன்பெறும் தகுதிகளைப் பறிகொடுத்தனர். நிறுவனங்கள் பணக்கார, கடன் திருப்பும் ஆற்றல் வாய்ந்த, இலாபம் உழைக்கும் விவசாயிகளுக்கே கடன்வழங்கத் தயாராக இருந்தமையினால் குடியான விவசாயிகள் நிறுவன ரீதியான கடனை நெருங்கமுடியாமல் நிறுவனரீதியற்ற கடன் மூலங்களை நாடுகின்ற நிலைமைகளே அதிகரிக்கப்பட்டன.

கிராமியக் கொடுகடன் நடவடிக்கையானது வர்த்தக வங்கிகளின் பொறுப்பில் வந்ததற்குப்பின் மத்தியகால, நீண்டகாலக் கடன்கள் கூடிய முக்கியத்துவத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். 1980-81 ம் ஆண்டுகளில் வர்த்தக வங்கிகள் வழங்கிய கிராமியக் கடனில் சுமார் 40 சதவீதத்தை மட்டுமே நெற்பயிர்ச்செய்கைக் கடன் பெறுகிறது. ஏனையவை உபஉணவுப் பயிர்ச்செய்கை, மிருகவளர்ப்பு, சிறுகைத்தொழில், இயந்திர உபகரணக் கொள்வனவு, கடன் மீட்சி, நுகர்வு, வீடமைத்தல், மின்மயப்படுத்தல், நீர் வசதியேற்படுத்தல், வர்த்தகம் போன்றவற்றிற்காக வழங்கப்பட்டவையாகும். இவ்வகைக் கடன்களைக் குடியான விவசாயிகள் பெறுவது சாத்தியமில்லை. எனவே கிராமியக்கடன் நோக்குப்பற்றி அதிகளவில் உரையாடுகின்ற வர்த்தகவங்கிகள் பாமர விவசாயிகளுக்கு உதவும் வகையில் இயங்குபவையாக நடைமுறையில் இல்லையென்பதே உண்மையாகும்.

இவ்வகையில், நிறுவனரீதியான கடன் மூலங்களின் அமைப்பினையும், கடன் வழங்கலில் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கைகளையும் நிபந்தனைகளையும் மொத்த ரீதியில் அவதானிக்கும்போது அவை நிறுவனரீதியற்ற கடன் மூலங்களாகிய நிலச் சுவாந்தர்கள், கடைக்காரர்கள், தொழில் ரீதியில் கடன் கொடுப்போர் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குகின்ற நிறுவனங்களாகவே காணப்படுகின்றன,

மூன்றாவதாக, நிறுவனரீதியான கடன் அமைப்பில் வழங்கப்பட்ட விவசாயக் கடனை மீளப்பெறுவதில் தொடர்ச்சியான பிரச்சினைகள் காணப்படுகின்றன. 1967-68 ல் 14% மும், 1972-73 ல் 86% மும் 1973-74 ல் 50% மும், 1977-78 ல் 81% மும், 1980-81 ல் 57% மும் வழங்கப்பட்ட விவசாயக் கடனில் மீளப்பெறப்படா வீதங்கள் ஆகும். கடன் கொள்கைகள் ஒவ்வொன்றும் குற்றம் சாட்டப்படுகையில் மீளப்பெறப்படா வீதமே சுட்டிக்காட்டப்பட்டு மாற்றாக புதிய கொள்கைகள் முன் வைக்கப்பட்டன. ஒவ்வொரு தடவையும் கடன் கொள்கை மாற்றப்பட்ட ஆண்டுகளில் கடனை அதிக அளவில் வழங்குவதும் பின்னர் குறைப்பதுமான சுழற்சி நடவடிக்கையாக அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற விவசாயக் கடனைத் தொகுத்து நோக்குகையில் அவதானிக்க முடிகின்றது. ஆனால் கடன் மீளப்பெறப்படா வீதம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. 1967-68 ல் வழங்கப்பட்ட விவசாயக்கடன் ரூ 78 மில்லியன்; 1980-81 ல் வழங்கப் பட்ட தொகை ரூ. 67 மில்லியன் ஆகும். ஆனால் கடன் மீளப்பெறப்படா வீதமா னது இவ்வாண்டுகளில் 14 ல் இருந்து 57 ஆகியுள்ளது. எனவே கடன் கொள்கை மாற்றங்களோ அல்லது கடன் கொடுப்பனவில் கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான நிபந்தனைகளோ மீளப்பெறப்படா வீதத்தில் எந்தக் குறைப்பினையும் செய்ததாக இல்லை.

கடன் மீளப்பெறப்பட்டாமை தொடர்ந்து நிலவிவருவதற்குத் தொடர்ச்சியான ஒரே கடன் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டாமையானது ஒரு பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது. மேலும் 1-9.67 — 31-12-1970 க்குமிடைப்பட்ட காலத்தில் புதிய விவசாயக்கடன் திட்டப்படி வழங்கப்பட்ட கடன்கள் திருப்பப்படாமைக்குக் காரணங்களை 1972 ல் ஆய்வு செய்த மத்திய வங்கியின் ஆய்வறிக்கையின்படி பதி னேழு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதில் முக்கியமானவையும் ஒவ்வொன் றினது வீதாசாரரீதியான பங்கும் பின்வருமாறு.

| | |
|---|---|
| பயிர் விளையாமை | 26.4% |
| தாழ்ந்த வருமானம் | 17.2% |
| திருப்பிக் கட்டும் நோக்கமின்மை | 12.0% |
| சுகவீனம்/இறப்பு | 9.0% |
| அதிகாரிகளின் அக்கறையின்மை | 9 0% |
| கூட்டுறவு ஊழல் | 8.0% |

இதேபோல, இலங்கையில் கூட்டுறவு இயக்கம் பற்றிய மாதிரி ஆய்வொன்றினை மக் கள் வங்கி 1977 ல் நடாத்தியபோது விவசாயக்கடன்கள் செலுத்தப்படாமைக்கான பிரதான காரணங்களை பின்வருமாறு அட்டவணைப்படுத்தியது.

| | |
|---|---|
| பயிர் நாசம் | 65 78% |
| விஸ்தரிப்புச் சேவைக் குறைபாடு | 7 11% |
| வேறு துறைகளில் முதலீடு | 8.0% |
| கடன்களை அரச உதவியாகக் கருதியமை | 5.77% |
| ஏனைய கடன்களை முதலில் செலுத்தியமை | 6.67% |
| ஏனைய காரணங்கள் | 6.67% |
| | 100.00 |

மேற்கண்ட இரு ஆய்வுகளும் கடன் திருப்பப்படாமையில் தவிர்க்கமுடியாத கார ணமாக பயிர்நாசம் முக்கியமாகச் செயற்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. இவ்வாறான தவிர்க்கமுடியாமைகளின் காரணமாக சிறு விவசாயிகள் கடன் திருப்பாமற்போகின்ற வேளைகளிலும் அவர்கள் கடன்பெறத் தகுதியற்றவர்களாக்கப்படுவதினால் தொடர்ந்து வரும் காலங்களில் தமது தொழிற்படு மூலதனத்துக்காக நிறுவனரீதியற்ற மூலங் களை நாடும் நிலையேற்படுத்தப்படுகின்றது.

நான்காவதாக நிறுவன ரீதியான கடன்கொடு அமைப்பானது பயிர்ச் செய் கைக்குத் தேவையான முழுக்கடனையும் சிற்றுடைமை விவசாயிகள் அனைவருக்கும் வழங்கினாலும் கூட அவர்களை எவ்வகையிலும் வறுமைக் கோட்டுக்கு மேலாகத்

7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளிவிட முடியாது. உதாரணமாக 1979 இன் நெற்பயிர்ச்செய்கைக் கணக்கொன்றை நோக்கலாம். இவ்வாண்டின் சராசரி நெல்விளைச்சல் ஏக்கருக்கு 53 புசல் சராசரி நில வுடைமை 2 ஏக்கர், எனவே பயிர்ச்செய்கையால் கிடைக்கக்கூடிய வருமானம் ரூபா 6760. வேறுவகை வருமானங்களையும் உள்ளடக்கிய வகையில் ரூ. 7500 எனக்கொள் ளலாம். இரு ஏக்கருக்குமான உற்பத்திச்செலவு மொத்தம் ரூ. 3200 எனின் மிகுதி ரூ. 4300. எனவே சராசரி மாதாந்த வருமானம் சுமார் ரூ. 360 ஆகின்றது. இதே வேளை உணவு முத்திரையின் அடிப்படையில் நாட்டின் வறுமைக்கோட்டெல்லை ரூ. 300 ஆக உள்ளது. நாட்டின் சராசரிப்படி 6 பேரைக்கொண்ட குடும்பம் என விவ சாயிகள் குடும்பத்தினைக் கொள்ளின் விவசாய அமைப்பில் வருடாந்த தலாநபர் வரு மானம் சுமார் 40 டொலர்களாகவே காணப்படுகின்றது.

எனவே, நாட்டின் விவசாயக் குடும்பங்கள் 80 சத வீதமானவற்றைப் பொறுத்தவரையில் அரசாங்கமானது அவ்விவசாய மக்களின் உயிர்வாழ்வு நிலையைப் பராமரிக்க வேண்டுமாயின் எவ்வித தடையுமில்லாது அவர்களுக்குத் தேவையான கடனை தொடர்ந்து வழங்கிக்கொண்டிருப்பதுவும் அதற்கும் மேலாக ஒரு தொகை மானியத்தை வழங்கிக்கொண்டிருப்பதுவும் அவசியமாகக் காணப்படுகின்றது.

பணப் பொருளாதாரத்துக்கும் நவீன தொழில் நுட்பத்துக்கும் உட்படுத்தப் பட்ட விவசாயியின் உற்பத்திப் பொருட்களின் விலைகள் நெகிழ்வற்றதாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனாலும், விவசாய உள்ளீட்டுப் பொருட்களினதும் விவசாயியின் ஏனைய அடிப்படைத் தேவைப் பொருட்களினதும் விலைகள் தொடர்ச்சியாக அதிக ரித்துச் செல்வதும் ஆனது நிலச்சுவாந்தர்கள், வர்த்தகர்கள், நகரப்புற நிறுவனங்கள் போன்றவற்றிடம் விவசாயிகள் கையேந்திநிற்கும் நிலையை மேலும் மேலும் விரி வாக்கி வருகின்றன. இதற்கு நிறுவன ரீதியான கடன் நிறுவனங்களின் விரிவாக் கம் தீர்வினைத் தரமாட்டாதவையாக இருப்பது மட்டுமல்லாது அப் பிரச்சினையை ஆழமாக்குபவையாக இந் நிறுவனங்களே உள்ளன எனலாம்.

இறுதியாக, நிறுவனரீதியான கொடுகடன் மூலங்கள் கிராமியரீதியில் விரிவ டைவதானது வெளியிலுள்ள வளங்களை கிராமங்களுக்குட்பாய்ச்சுவதற்காகவா? அல் லது கிராமியவளங்களை வெளியில் எடுத்துச்சென்று விடுவதற்காகவா? என்னும் கேள்விக ளுக்கு விடைகாண்பது அவசியமாகவுள்ளது. ஏனெனில் இதுவரை காலமும் கிராமிய அபிவிருத்திக்கென்றே பெருமளவான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் கிராமங்கள் மேலும் மேலும் குறைவிருத்தி நிலையையே விருத்திசெய்துள்ளன.

கிராமங்கட்கு வெளியேயிருந்து கிராமங்கட்குள் மூலவளங்கள் பாய்ந்துள்ளன என்று சொல்வதற்கில்லை. மாறாக, கிராமங்களின் மூலவளங்கள் பெருமளவு வெளியே எடுத்துச்செல்லப்பட்டுள்ளன — இன்றும் வெளியே எடுத்துச்செல்லப்படுகின்றன. இது ஒருபுறம் கிராம உற்பத்திப் பொருட்களுக்கும் நகர உற்பத்திப் பொருட்களுக்குமி டையேயான சமனற்ற பரிமாற்றத்தினூடாக வெளியே செல்லப்படுகின்றன; மறுபு றம் கிராமிய சேமிப்புக்கள் நிறுவன அமைப்புக்களினூடாக திரட்டப்பட்டு அவற் றில் பெரும்பகுதி வெளியே எடுத்துச்செல்லப்படுகின்றன எனலாம். நகர உற்பத்திப் பொருட்களின் விலைகள், கிராம உற்பத்திப் பொருட்களின் விலைகளை விட வேகமாக தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. இதனால் கிராமிய உற்பத்திப் பொருட் களின் வர்த்தக மாற்று விகிதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கிராமங்களில் ஊடுருவி விரிவடைந்துவரும் வங்கியமைப்புக்கள் கிராமிய முதலீடுகளை கிராமிய சேமிப்பினூடாகவே நடைமுறைப்படுத்தி வருவது மட்டுமல்லாது, மேலதிக சேமிப்புக்களை நகரத்துக்கு இடம் பெயர்த்தும் ஆற்றலுடன் வளர்ச்சியடைந்து வருகின்றன. கிராமிய வங்கியின் தரவுகளை அவதானிப்பின் 1970 ன் பின் மொத்த கிராமிய வைப்புக்களுக்கும் முற்பணக் கொடுப்பனவுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி நேர்க் கணியமானதாக தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. 1981 ல் இவ் இடைவெளி ரூ 170 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. இதேபோல் கமநல சேவை நிலையங்களில் இயங்கிவரும் இலங்கை வங்கிக் கிளைகளின் தரவுகளை அவதானிக்கையில் அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இவ் இடைவெளி நேர்க்கணியமான முறையில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

எனவே, இதுவரை அவதானிக்கப்பட்ட விடயங்கள் யாவற்றையும் ஒட்டு மொத்தமாக தொகுத்து நோக்குப்போது. இதுகாலவரை மேற்கொள்ளப்பட்ட நிறுவனரீதியான அமைப்புக்களின் விரிவாக்கமானது கிராமங்களின் அபிவிருத்தியை — கிராமிய மக்களின் அபிவிருத்தியை எதிர்க்கணியமான ரீதியில் இயச்குவித்திருக்கின்றன என்றே கூற இடமளிக்கின்றன.


# SELVAS

140, Main Street,
JAFFNA.

## FOR SPORT'S GOODS

We Under Take

Repairing All Types of
Lacless
Foot Ball
Volley Ball
Net Ball
&
Basket Ball

Restring
Tennis Rackets
&
Badmenton Rackets,

With the best Compliments of

# VICKNA
# விக்ன
# VICKNA

கலை, வர்த்தகத்திற்கு யாழ்நகரில் தனித்துவமான நிறுவனம்

Vickna tuition Center
52, Stanley Road
Jaffna.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின்
வருடாந்த வெளியீடான

"வணிக ஜோதி"க்கு

எமது நல்லாசியும் அன்பளிப்பும்

# ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்

(பாடசாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான உபகரணங்கள், காகிதாதிகள் ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் விநியோகிக்கும் நிறுவனம்)

61, பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் உல்லாசப் பிரயாணத்துறையின் பங்கு

தி. நந்தகுமாரன் 11 B

இக் கட்டுரையை வரைந்த

செல்வன். தி. நந்தகுமாரன் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கழகங்களுக்கிடையே, 8-4-1983 அன்று ''செல்வா விளையாட்டு அரங்கில்'' நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியின் போது 10,000 மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்து,

அதனையே தனது இறுதி மூச்சாக்கிக் கொண்டார்.

உல்லாசப் பயணத்துறை இன்று ஓர் அகிலம் பரந்த கைத்தொழிலாக மாறியிருக்கின்றது, உலக வர்த்தகத்தின் வளர்ச்சியை விடவும் கூடிய வேகத்தில் அது வளர்ச்சியடைந்துள்ளது. இது ஓர் சேவைத்துறைக் கைத்தொழிலாகும். ஒரு நாட்டின் இயற்கைக் காட்சிகளையும் வளப்புகளையும் பயன்படுத்தி அது இயங்கிவருகிறது. இப்பொழுது வளர்முகநாடுகளில் பெருந்தொகையான நாடுகள் இத்தொழிலின் விருத்தியில் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றன. அந்நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். இலங்கைக்கு அந்நியச்செலாவணியைப் பெற்றுத்தரும் நடவடிக்கையில் முக்கிய பங்கினைப் பெறுவது உல்லாசப்பயணத்துறைக் கைத்தொழிலாகும்.

உலகரீதியிலான இத்துறை 1960 ம் ஆண்டுகளின் பின் ஆரம்பத்தில் மேற்கத்தைய நாடுகளுள் செழிப்புறத் தொடங்கியது. 1961 ம் ஆண்டிலிருந்து 1976 வரையுமுள்ள (1961 — 1976) காலப்பகுதி. அதாவது 15 வருடங்களில் சர்வதேச ரீதியில் சுற்றுலாப் பயணத்துறை மும்மடங்காக அதிகரித்ததுடன் இத்துறை, மூலமான சம்பாத்தியம் 5 மடங்காக அதிகரித்தது. இந்த வருமானத்தில் வளர்முக நாடுகளின் பங்கு 10 — 20 % மாக இருந்துவந்துள்ளது. ஆனல் அண்மைக் காலத்தில் இது அதிகரிக்கத்தொடங்கியுள்ளது; இந்த 10 — 20 % கூட உலக மொத்த ஏற்றுமதியில் வளர்முகநாடுகளின் பங்கினைவிடக் கூடியதாகும். சர்வதேச உல்லாசத்துறை அல்லது சுற்றுலாத்துறை மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் தோற்றம் பெறுகின்றது. ஆனல் இப்பொழுது யப்பான், அவுஸ்திரேலியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்பனவற்றிலிருந்தும் பெருந்தொகையான உல்லாசப் பிரயாணிகள் பிரயாணங்களை மேற்கொண்டு வருகின்றனர். பெரும்பாலும் சுற்றுலாத்துறை செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளை நோக்கிச் செல்வதாக இருந்து வருகின்றது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தே பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். 1978 ல் எமது நாட்டில் 1,92,592 சுற்றுப்பயணிகள் வந்திருக்கின்றனர். இவர்களில் 68 % மானோர் மே. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் 18.7 % ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுமாவர். வட அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலிருந்து முறையே 6.5%, 3.2%, 3.4% பயணிகள் வருகை தந்தனர். பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகைதந்தோர் தொகை பின்வரும் அட்டவணையில் அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மேற்கு ஜேர்மனி | 37,030 |
| பிரான்ஸ் | 23,812 |
| ஐக்கிய ராட்சியம் | 14,274 |
| யப்பான் | 8,730 |
| சுவீடன் | 16,864 |
| வட அமெரிக்கா | 12,426 |

ஐரோப்பிய நாடுகளிலிருந்து நேரடியாக இலங்கைக்கு வந்தோர் 45.2% சுமார் 30% இந்திய உபகண்டத்தில் இறங்கி இலங்கைக்கு வருகின்றனர்.

நிக்காமன், டுவர்யுரோபா, சார்னே ஹோட்டல், பிளான், விங்ரெஸ்ஸர் போன்ற சர்வதேச நிறுவனங்களே பெருமளவிலான சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கின்றன. சுற்றுலாத் துறையின் தரவுகளின் பிரகாரம் 1978ல் நாட்டுக்கு வந்த பிரயாணிகளின் தொழில் ரீதியான தொகை பற்றிய விபரம் பின்வருமாறு:

| வகை | சதவீதம் |
|---|---|
| வர்த்தகர்கள் | 8.8 |
| தொழில் சார்ந்தோர் | 8.7 |
| நிர்வாக அதிகாரிகள் | 18.7 |
| விஞ்ஞான தொழில் நுட்பர்கள் | 13.3 |
| கல்வியாளர்கள் | 7.0 |
| ஏனைய தொழிலர்கள் | 29.1 |
| ஓய்வு பெற்றோர் | 2.3 |

இருபாலாரினதும் பால், வயது அடிப்படையில் இலங்கைக்கு வந்தோர் தொகையை நோக்கின்

| | | |
|---|---|---|
| ஆண்கள் | → | 60.5% |
| பெண்கள் | → | 39.5% |

| வயதுப் பிரிவு | | சதவீதம் |
|---|---|---|
| 3 — 19 | → | 5.2 |
| 20 — 29 | → | 30.6 |
| 30 — 39 | → | 27.5 |
| 40 — 49 | → | 16.0 |
| 50 — 59 | → | 12.9 |
| 60 மேல் | → | 6.6 |

மூன்றாவது உலகநாடுகள் இன்று வளங்கிவரும் சுற்றுலாச் சேவைகள் முற்று முழுதாக ஒரு வர்த்தக நடவடிக்கையாகவே இருந்து வருகின்றன. இலங்கைக்கும் செல்வந்த கைத்தொழில் நாடுகளுக்குமிடையே நிலவும் வருமான வேறுபாடு காரணமாகவே சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதில்லை. மேலும் அவர்கள் இலங்கையை இஷ்டபூர்வமாகவும் மன விருப்புடனும் தெரிவுசெய்து வருவதுமில்லை. அந்நாடுகளில் நிலவும் சலிப்பூட்டும் சமூக உளவியல் ரீதியான பின்னணி எமது நாட்டைப் பற்றி அவர்களிடையே உருவாக்கப்பட்டிருக்கும் பிம்பம் என்பன காரணமாகவே அவர்கள் இங்கு வருகின்றனர். இலங்கை சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையிலும் ''பிம்பம்'' மிக முக்கியமானதாகும். ஏனெனில் இந்த பிம்பத்தை நாடியே பயணிகள் இங்கு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரும் சுற்றுலாப்பயணிகள் எழிலார்ந்த கடற்கரைகள், இயற்கைக் காட்சிகள், எளிதில் புரிந்துகொண்டு நடப்புடன் பழகக்கூடிய உள்ளூர் மக்கள் போன்ற அம்சங்களில் கூடிய நம்பிக்கை வைத்துள்ளனர். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகள், விநோதமான பழக்க வழக்கங்கள், பண்பாடு. வரலாற்றுப் புகழ் வாய்ந்த மண்டபங்கள், கோயில்கள் இவை யாவும் வனப்பும் வசீகரமும் ஒன்றோடொன்று கொஞ்சி விளையாடும் இவ் வெப்பமான தீவின் உல்லாசப் பயணத் தொழிலுக்கு சாதகமானவையாக விளங்குகின்றன. இவை யாவும் சுற்றுலாப் பயணிகளின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

இந்தச் சுற்றுலாத்துறை இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வாறு ஆரம்பித்து வளர்ந்து வருகின்றது என்பதை சிறிது நோக்குவோம். இத்துறை 1966 ம் ஆண்டுக்கு முன் எவ்வகையிலும் விருத்தியடைந்திருக்கவில்லை, 1965 — 1970 காலப் பகுதியிலே சுற்றுலாத்துறை விருத்தியில் நிறுவன ரீதியிலான மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. இதனால் ஹோட்டல் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. 1967 – 1975 ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையில் ஹோட்டல் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்தது. இதற்குக் காரணம் உல்லாசத்துறை 1967 ல் உரிய அமைப்புமுறையுடன் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் 1972 ல் தேசிய அபிவிருத்தி ஐந்தாண்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது முற்றுமுழுதாக உல்லாசப் பயணத்துறையை அடிப்படையாகக் கொண்டதாகும். இத் திட்டமானது சுற்றுலாத் துறையை விருத்திசெய்யும் நோக்குடன் பிரதேசரீதியான முறையில் ஐந்துவகையாக வகுத்தது. அவையாவன:

1. கொழும்பு வாசஸ்தலப் பிராந்தியம்: நீர்கொழும்பு தொடக்கம் கல்கிசை வரையிலுள்ள பகுதிகளின் கவர்ச்சியம்சமும், நகரமும், கடற்கரையும்.

2. தென்கரை வாசஸ்தலப் பிராந்தியம்: பெந்தோட்டையிலிருந்து யால வரை இங்கு கவர்ச்சியம்சமான கடற்கரை.

3. கிழக்குக்கரை வாசஸ்தலப் பிராந்தியம்: திருகோணமலையிலிருந்து பாசிக்குடா வரை, இங்கு கவர்ச்சியான அம்சம் கடற்கரை.

4. புராதன நகரங்கள் பிராந்தியம்: அனுராதபுரம், கண்டி, பொலநறுவை ஆகியன. இங்கு வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஓவியங்கள், சிற்பங்கள். கட்டிடங்கள் என்பன கவர்ச்சியம்சமாக விளங்குகிறது.

5. மலைநாட்டுப் பிராந்தியம்: இங்கு கவர்ச்சியம்சங்களாக இயற்கைக் காட்சிகள், தேயிலைத் தோட்டங்கள் என்பன.

இவ்வாறாக வகுப்பதற்கு 1972 ல் அமுல்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் காரணமெனலாம். இத் திட்டத்தின் ஊக்கத்தினால் 1976 ல் உல்லாசத்துறையின் அந்நியச் செலாவணி வருமானமாக 12 கோடி ரூபா கிடைத்தது. 1978 ல் 1,72,000 உல்லாசப்பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். 1978 இன் சுற்றுலாக்கமிட்டி 1984 ம் ஆண்டளவில் நாட்டுக்குள் 460,800 உல்லாசப் பயணிகள் வருகை தருவார்களென மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 1966 — 1978 க்கு இடையில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியை ஹோட்டல் அறைகளின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்தும் காணமுடியும். 1966 ல் 770 ஹோட்டல் அறைகள் 12 வருடங்களின் பின் 4846 அறைகளாக அதிகரித்தது. 1975 வரை இத் துறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பட்ட மொத்த மூலதனம் 40 கோடி ரூபா. இத் துறைக்காக மேற்கொள்ளப்பட்ட சமூக பொது முதலீட்டுச் செலவுகள் 20 கோடி ரூபாவாகும். மொத்தச் செலவீடு 60 கோடி ரூபாவாகும். இத் தரவுகளின் பிரகாரம் ஒரு சுற்றுலாப் பயணிக்கு சுமார் 5,000/- செலவீடு ஆகும். 1985 ல் எதிர்பார்க்கப்படும் 5,00,000 பயணிகளுக்கான செலவு ரூபா 250 கோடியாகும்.

1967 ம் ஆண்டிலிருந்து 1977 வரையுள்ள 10 வருட காலப்பகுதியில் அன்னியச் செலாவணியாக 106.3 கோடி ரூபா கிடைத்தது. இதில் கிடைத்த மிகை 83 கோடி ரூபாவாகும். சுற்றுலாத்துறை அதிவேகமாக வளர்ச்சியடைந்தாலும் அது மொத்த தேசிய உற்பத்தியில் 0.7% குறைவான பங்களிப்பாகவேயுள்ளது, 1972 ல் மொத்த தேசிய உற்பத்தியில் 0.23%. 1977 ல் மொத்த தேசிய உற்பத்தியில் 0.71% ஆகும்.

மேலும் இக் கைத்தொழிலின் மூலம் தொழில் வாய்ப்பை குறைந்தளவில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது, 1977 ல் 32,000 பேருக்கு தொழில்வாய்ப்பளித்தனர். இக் கைத்தொழிலை மதிப்பீடு செய்யும் பிறிதொரு அளவுகோலாக விளங்கிய தொழிலின் 13.7 சதவீதத்தினர் நேரடியாகவும் 18.5 சதவீதத்தினர் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்பைப் பெற்றிருந்தனர். மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர் இலங்கை உல்லாசப்பிரயாணத்துறை பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டார். 1972 ல் வந்த சுற்றுலாப்பயணிகள் இங்கு 17.3 கோடி ரூபா செலவு செய்திருக்கிறார்கள். இதில் 8 கோடி ரூபா அந்நியச்செலாவணியாக இலங்கைக்குக் கிடைத்துள்ளது. ஆனால் வேலைவாய்ப்பை எடுத்துக்கொண்டால் சேவைத்துறையில் நேரடித் தொழில் வாய்ப்பு 13,716 ஆகவும், வளங்கல் துறையில் மறைமுகத்தொழில் வாய்ப்பு 18,517 ஆகவுமுள்ளது. ஆகவே 1972 ல் சுற்றுலாத்துறையில் மொத்த வேலைவாய்ப்பு 32,233 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பை இத்துறை அளித்தாலும் கலாச்சாரத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. உல்லாசப்பயணிகள் தத்தம் பழக்கவழக்கங்களைத் தாங்கள் உல்லாசப் பயணத்தை மேற்கொள்ளும் நாடுகளிலும் கடைப்பிடிப்பதனுல் அந்நாட்டு மக்களும் அப் பழக்கவழக்கங்களைப் பழகி வருகின்றனர். இதனுல் அவர்கள் நம்நாட்டுப் பாரம்பரியக் கொள்கைகளை மறந்து அவர்களுடன் தாங்களும் பழகி, ஈடுபட்டு நமது பண்பாட்டை மாற்றுகின்றனர். ஆயினும் அண்மைக்காலத்தில் நம்நாட்டில் உல்லாசப்பயணிகளின் வரவு சிறிது குறைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த உல்லாசப்பிரயாணத்துறையானது, நம்நாட்டுப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆயினும் சில குறைபாடுகளும் இத்துறையின் மூலம் ஏற்படுகின்றதென்றுல் அது மிகையாகாது.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வர்ண, கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும்
மங்கள வைபவங்களை வீடியோ படப்பிடிப்பு செய்திடவும்
மற்றும் புகைப்படத் தேவை அனைத்திற்கும்

**பாரத் ஸ்ருடியோ**
82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 22152

நவீன சந்தையில்
**"பாரத் சென்ரர்"**
178, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
☎ 24265

வீடியோ திரைப்படங்கள்
வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்



நவீன வேலைப்பாடுள்ள
**தங்க, வைர நகைகள்**
விரும்பிய டிசைன்களில்
உத்தரவாதத்துடன் கிடைக்கும்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்

# புதிய தங்கமாளிகை

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் காசுத்தாள் போல் பெறுமதி வாய்ந்தவை. அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்,

★ பெரிய கட்டில் விரிப்பு
★ அழகிய பொலித்தீன் பை
★ காந்தி படமுள்ள கதர் பை
★ காந்தியின் சிலை
★ பாரதியாரின் சிலை
★ அறிவு நூல்கள்
★ நீதிநூற் கொத்து
★ ஆத்திசூடி ஆங்கில உரை
★ கொன்றைவேந்தன் ஆங்கில உரை
★ அழகிய துவாய்
★ சுவாமிப் படங்கள்
★ நால்வர் படங்கள்
★ பெரியவர்களின் படங்கள்
★ அப்பியாசக் கொப்பி
★ நீதிக் குரங்கு பொம்மை
★ பனை ஓலைத் தொப்பி
★ யோகாசனப் புத்தகம்
★ யோகாசன விளக்கப்படம்

மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23233

FINE FIT

FORE SALE

சேட்டிங் சூட்டிங் துணிவகைகளை இங்கு மலிவாகப் பெற்றுக்கொள்ளவும் உங்கள் ஆடைகளை நவநாகரீக முறையில் அமைத்துக்கொள்ளவும் இன்றே விஜயம் செய்யுங்கள்

(F) பைன் (F) பிற் ரெயிலர்ஸ்

FINE FIT TAILORING

No. 16, Bazaar Lane,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார முறைமைகளின் வளர்ச்சியும் பொருளாதாரப் பிரச்சினைகளும்

இ. இரஞ்ஜனி 12 B

ஆரம்ப காலத்தில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மனிதன் பின் பல கூட்டங்கள் ஒரு சமுதாயமாகவும், பல சமுதாயங்கள் ஒரு கிராமமாகவும், பல கிராமங்கள் ஒரு நகரமாகவும், பல நகரங்கள் ஒரு அரசாகவும் இருந்தன. இவை எல்லாவற்றையும் ஆரம்பத்தில் அரசன் என்பவன் ஆண்டு வந்தான். இவன் தனது ஆட்சியின் கீழ் வேலை செய்தோருக்கு சம்பளமாக நிலத்தையே கொடுத்தான். ஆகவே இங்கு நிலத்தை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

பின்பு முடிக்குரிய நிலங்களை அரசன் நிர்வகிப்பதற்காக நிலப்பிரபுக்களை நியமித்தான். இந் நிலப்பிரபுவின் கீழ் உள்ள நிலங்களை விவசாயத்தில் ஈடுபடுத்துவதற்காக நிலப்பிரபுவினுல் தொழிலாளர்களை கூலிக்கமர்த்தப்பட்டு உற்பத்தியில் ஈடுபடுத்தப் பட்டனர். இவ்வுற்பத்தியில் ஒரு சிறு பகுதி தொழிலாளர்களுக்கும் வேறு ஒரு சிறு பகுதி மன்னனுக்கும் செலுத்தப்பட்டு மிகுதி பெரும் பகுதியும் நிலப்பிரபுவினுல் அனுபவிக்கப் பட்டது. இதனுல் நிலப்பிரபு என்ற பெயரின் கீழ் முதலாளிகள் வளர்ந்தனர். இவர்களின் ஆதிக்கம் அக் காலத்தில் மேலோங்கி நின்றது. ஆகவே நிலப்பிரபுத்துவத்தின் அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இவ்வாறுக நிலப்பிரபுக்கள் பெரும் செல்வந்தர்களாகக் காணப்பட்டதால் இவர்களது கவனம் ஏனைய நாடுகள் மீது திரும்பியது. ஆகவே இவர்கள் நாடுகாண் வீரர்களின் உதவியுடன் ஏனைய நாடுகளைக் கைப்பற்றி அங்குள்ள பொருட்களை சூறையாடி தமது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றினுர்கள். இவ் வாறுக வணிகத்தின் அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டதால் இது வணிகவாதப் பொருளாதாரம் என அழைக்கப்பட்டது.

இவ்வாறுக ஆரம்பத்தில் இருந்து பொருளாதாரம் வளர்ந்து சென்றது. இம் மூன்று பொருளாதாரக் கொள்கைகளும் ஆரம்பத்தில் காணப்பட்டவையாகும். இவற்றின் விளைவாகவே ஒன்றுடொன்று தொடர்புற்றதாக வளர்ச்சி அடைந்து வந்தது. அடுத்ததாக முதலாளித்துவ, திட்டமிட்ட, கலப்புப் பொருளாதார அமைப்புக்கள் தோன்றின.

நிலப்பிரபுக்களால் கைப்பற்றப்பட்ட ஐக்கிய அமெரிக்கா அந் நாட்டு சுதேசிகளின் போராட்டத்தால் சுதந்திரம் காணப்பட்ட பொழுது அந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்ற நிலையாக முதலாளித்துவப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாளித்துவப் பொருளாதாரம் பற்றி முதன் முதலாக அடம்ஸ் ஸ்மித் என்பவரால் „தேசங்களின் செல்வம் எனும் புத்தகத்தில் கூறப்பட்டதிற்கமைய வளர்த்துச் செல்லப்பட்டது. இப் பொருளாதாரம் நிலப்பிரபுத்துவத்தின் ஒரு படியான வளர்ச்சி நிலையே எனக் கூறலாம். ஆகவே இது ஆரம்பத்தில் ரஸ்யாவிலேயே வளர்ச்சி அடைந்தது எனலாம். முதலாளித்துவப் பொருளா



UNIVERSAL LIBRARY SERVICE
KANTHARMADAM - JAFFNA
Acc. No..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரம் என்பது 'பணம் படைத்த முதலாளிகளினுல் கூலிக்கமர்த்தப்பட்ட தொழிலாளரை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்படாத முறையில் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதைக் குறிக்கும்.'' இது நிலப்பிரபுத்துவம், வணிக வாதத்துடன் தொடர்புடையது. ஆரம்பத்தில் அடிமை வியாபாரத்தை மேற்கொண்டார்கள். நாளடைவில் அது தடை செய்யப்பட்டதால் வணிக வாதத்திலும் அதன் பிரதி பலனுக முதலாளித்துவமும் வளர்ச்சி அடைந்தது,

இவ்வமைப்பில் காணப்பட்ட தீமைகளே திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்கு உதவின. முதலாளிகள் தொழிலாளரை சுரண்டியதால் கூலிச் சுரண்டல், நிறை தொழில் மட்டமின்மை, வேலையின்மை, பதுக்கல், வர்க்க பேதம் என்பவற்ருல் ஏற்பட்ட எதிர்விளைவே சமதர்மப் பொருளாதாரத்திற்கு வழிவகுத்தது.

சமதர்ம பொருளாதார அமைப்புக்கு சாதகமாக முதன் முதலில் ரஸ்யாவில் இருந்து குரல் கொடுக்கப்பட்டது. இது முதலாளித்துவம் தோன்றிய நாட்டிலேயே குரல் எழுப்பப்பட்டதால் வெற்றியளிக்கவில்லை. ஆனுல் காலப்போக்கில் தொழிலாளர்கள் தொடர்ந்து சுரண்டப்படுவார்களேயானுல் தொழிலாளர் சமுதாயமே அழிந்துவிடும் எனவும், நாட்டின் சொத்துகள் அனைத்துக்கும் தொழிலாளியே உரிமையாளனே ஆவான் என்றும் தொழிலாளியின் தியாகத்தினுல் ஏற்பட்டதே சொத்துக்கள் ஆகும் என்றும், அதன் காரணமாக அவனே நாட்டின் சொத்துகளுக்கு உரிமையாளன் என்றும் கூறப்பட்டது. இது தொழிலாளர் மத்தியில் மிகத் தெட்டத் தெளிவாக கால்மாக்ஸ், லெனின் ஆகிய இரு அறிஞர்களாலும் எடுத்துரைக்கப்பட்டது. ஆகவே தொழிலாளர்கள் லெனின் தலைமையில் கீழ் இயங்கி தொழிலாளர் புரட்சி மேற்கொள்ளப்பட்டு, இது அவர்களுக்குச்சாதகமாக வெற்றியைக் கொடுத்தது. அப்போது சார் மன்னர்கள் ரஷ்யாவை ஆண்டார்கள், அவர்கள் தொழிலாளர் புரட்சியின் மூலம் சார் மன்னரின் பதவியைக் கவிழ்த்தார்கள். இதன் அடிப்படையில் தோன்றியது தான் சமதர்மப் பொருளாதார அமைப்பாகும். நாட்டின் சொத்துக்கள் யாவும் பொது உடமையாக்கப் பட்டு திட்டமிட்ட அடிப்படையில் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே சமதர்ம பொருளாதார அமைப்பாகும்.

பொதுவாக முதலாளித்துவ நாடுகளும், சமதர்ம நாடுகளும் வளர்ச்சியடைந்த நாடுகளாகக் காணப்படுகின்றன. இவை முறையே முதலாம் மண்டல நாடுகள் எனவும் இரண்டாம் மண்டல நாடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. கலப்புப் பொருளாதார நாடென்பது சமதர்ம பொருளாதாரத்தில் சிலவற்றையும் முதலாளித்துவ பொருளாதாரத்தில் சில அம்சங்களையும் கொண்டு இயங்குவதால் இதில் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தனியாரும், அரசாங்கமும் கூட்டாகத் தீர்வு காண்கின்றன.

இலங்கையை எடுத்துக்கொண்டால் இது ஓர் கலப்புப் பொருளாதார நாடாகும். இது ஆரம்பத்தில் குடியேற்றநாடாக இருந்தது. இங்கு சோஷலிசம் வளராமைக்குரிய காரணங்களாக தனியாக அரசோ அல்லது தனியாரோ போதிய முதலீட்டு வசதியைக் கொண்டிருக்கவில்லை, அதுமட்டுமல்லாது ரஸ்யா போன்று இவர்களுக்கு சமதர்மத்தின் தன்மையோ அல்லது அதன் வளர்ச்சியில் அக்கறையோ ஏற்படவில்லை. நேரடியாகச் சுரண்டியவர்கள் இவர்களுக்கு அரசியல் சுதந்திரத்தை வழங்கியவர்களே ஒழிய பொருளாதார சுதந்திரத்தை வழங்கவில்லை. தொடர்ந்து இலங்கை அவர்களின் மூலப்பொருட்களை எடுக்கும் இடமாகவும் இருந்தது. ஆரம்பத்தில் காலனித்துவ நாடாகவும் இறுதியில் நவ காலனித்துவ நாடாகவும் இருந்து 1972 லேயே குடியரசாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பொருளாதார முறைமைகள் வேறுபட அவை முதன்மைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்ட முறையே காரணமாகும். முதன்மைப் பொருளாதாரப் பிரச்சனைகளாவன: எதனை உற்பத்துசெய்தல். எவ்வாறு உற்பத்தி செய்தல், யாருக்காக உற்பத்தி செய்தல் என்பனவாகும்.

எதனை உற்பத்தி செய்தல் என்னும் பிரச்சனையின் கருத்தினைப் பின்வருமாறு குறிப்பிடலாம். பற்றாக்குறையான மூலவளங்களைப் பயன்படுத்தி வரையறுக்கப்படாத தேவைகளைப் பூர்த்திசெய்ய எவற்றை உற்பத்தி செய்யவேண்டும், எவற்றை உற்பத்தியாக்காமல் விடவேண்டும் என்ற பிரச்சனையைக் குறிக்கும். உற்பத்திசெய்யத் தீர்மானித்த பொருள்களில் என்ன என்ன அளவுகளை உற்பத்தியாக்க வேண்டும் எனத் தீர்மானிப்பதையும் குறிக்கும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் எதனை உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை விலை முறைமையினால் தீர்த்துவைக்கப்படுகிறது. (சந்தை சக்தியினால்) இங்கு விலைகூடிய பொருள்களே உற்பத்தி ஆக்கப்படுகின்றது. ஏனெனில் உற்பத்தியாளர் உச்ச இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டவராக இருப்பதே ஆகும். எனவே பொருள் சந்தையில் கேள்வி கூடிய பொருள்களுக்கே விலை உயர்வாக இருப்பதால் நுகர்வோர் அதிகம் விரும்புகின்ற பொருள்களையே உற்பத்தியாக்குகின்றனர். சமதர்மப் பொருளாதாரத்தில் திட்டமிடும் குழுவினரின் தீர்மானத்திற்கு ஏற்பவே இப் பிரச்சினை தீர்த்துவைக்கப்படுகின்றது. சமூகநலனைப் பேணும் நோக்குடனேயே இப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படுகின்றது. எனவே எந்தப் பொருளின் உற்பத்தியினால் சமூக நலன் அதிகரிக்கின்றதோ அப்பொருளையே உற்பத்தியாக்குவர். கலப்புப் பொருளாதாரத்தில் ஒரு பகுதி விலை முறைமையினாலும் மறுபகுதி திட்டமிடும் குழுவின் தீர்மானத்தினாலும் தீர்க்கப்படுகின்றது.

எவ்வாறு உற்பத்திசெய்தல் என்னும் பிரச்சனையின் கருத்தினைப் பின்வருமாறு குறிப்பிடலாம். பற்றாக்குறையான உற்பத்திக்காரணிகளில் ஒவ்வொன்றையும் என்ன என்ன அளவில் பயன்படுத்தி உற்பத்தியாக்கவேண்டும் என்ற தொழில்நுட்ப ரீதியான தெரிவுப் பிரச்சனையைக் குறிக்கின்றது. இப் பிரச்சனையானது வெவ்வேறு பொருளாதாரங்களில் வெவ்வேறு முறையில் தீர்த்துவைக்கப்படுகின்றது. சில பொருளாதாரங்களில் ஊழியச்செறிவு முறையிலும் வேறு சில பொருளாதாரங்கள்ல் மூலதனச்செறிவு முறையிலும் தீர்த்துவைக்கப்படுகின்றது. இவ்வாறு வேறுபடுவதற்குக் காரணம் ஒவ்வொரு பொருளாதாரங்களிலும் உற்பத்திக் காரணிகளின் கிடைப்பனவு வேறுபடுவதே. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா போன்ற பொருளாதாரங்களில் மூலதனம் அதிகமாகக் கிடைப்பதால் அங்கு மூலதனச் செறிவு முறை பின்பற்றப்படுகின்றது. சீனா, இலங்கை, இந்தியா போன்ற பொருளாதாரங்களில் ஊழியம் அதிகமாகக் காணப்படுவதால் ஊழியச்செறிவு முறை பின்பற்றப்படுகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் விலை முறைமையினால் தீர்த்து வைக்கப்படுகிறது. காரணிச் சந்தையில் எந்த உற்பத்திக்காரணி குறைந்த விலையைப்பெறுகின்றதோ அந்த ஆக்கக்காரணியையே அதிகமாகப் பயன்படுத்தி உற்பத்தியாக்குவர். ஏனெனில் உற்பத்திச்செலவைக் குறைப்பதன் மூலம் இலாபத்தை உச்சப்படுத்தமுடிவதேயாகும். காரணிச்சந்தையில் எந்த உற்பத்திக் காரணி அதிகமாக இருக்கின்றதோ அந்த உற்பத்திக் காரணியை அதிகமாகப் பயன்படுத்தி உற்பத்தியாக்குவர்.

யாருக்காக என்ற பிரச்சனையின் கருத்தினைப் பின்வருமாறு வரையறுக்கலாம். தேசிய உற்பத்தியில் ஈடுபட்ட பிரிவினர் இடையே உற்பத்தியாக்கப்பட்ட பொருட்களும் சேவைகளும் எவ்வாறு பங்கிடு செய்யப்பட்டுள்ளன என்ற பங்கீட்டியல் பிரச்சனையைக் குறிக்கும் எனலாம். அல்லது காரணிகளின் விலை நிர்ணயம்பற்றிய பிரச்சனை எனலாம். ஏனெனில் தேசிய உற்பத்தியின் பங்கீடானது ஒவ்வொருவரினதும் கொள்வனவு வலுவிற்கும் ஏற்பவே நிர்ணயிக்கப்படுவதால் உற்பத்திக் காரணிகளின் உடமையாளர்களின் வருமானத்தினுல் இது நிர்ணயிக்கப்படும். இவர்களின் வருமானம் ஆக்கக்காரணிகளுக்குக் கிடைக்கின்ற விலைகளினுல் தீர்மானிக்கப்படும். (வாடகை, கூலி, வட்டி, இலாபம்) எனவேதான் யாருக்காக என்ற பிரச்சனை காரணிகளின் விலைகள் தொடர்பான பிரச்சனை எனக் கருதலாம்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் விலை முறைமையினுலேயே தீர்த்துவைக்கப்படுகிறது. இதன் கருத்து ஒவ்வொருவரினதும் கொள்வனவு ஆற்றலுக்கு ஏற்பவே பங்கிடு இடம்பெறுகிறது என்பதே. எனவே முதலாளித்துவப் பொருளாதாரத்தில் யார் கூடிய வருமானம் பெறுகின்றனரோ அவர்களே கூடியவிலை கொடுக்கும் ஆற்றல் உடையவராக இருப்பர். எனவே கூடிய வருமானம் பெறுபவரே தேசிய உற்பத்தியில் அதிகமான பங்கைப் பெற்றிருப்பர். இதனுல் தேசிய உற்பத்தியானது சமனற்ற முறையிலேயே பங்கிடு செய்யப்பட்டு இருக்கும். சமதர்மப் பொருளாதாரத்தில் திட்டமிடும் குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப தீர்த்துவைக்கப்படுகின்றது. இக் குழுவினரின் தீர்மானத்திற்கு ஏற்ப பங்கீட்டு முறைமையின் அடிப்படையிலேயே இப் பிரச்சினை தீர்க்கப்படும். எனவே ஏறக்குறைய சமனன அடிப்படையிலேயே தேசிய உற்பத்தி பங்கிடு செய்யப்பட்டு இருக்கும். சமூக நலனைப் பேணிக்கொள்ளும் நோக்குடனேயே திட்டமிடும் குழு இத் தீர்மானத்தை மேற்கொள்ளும். கலப்புப் பொருளாதாரத்தில் ஒரு பகுதி விலை முறைமையினுலும், வேறு ஒரு பகுதி திட்டமிடும் குழுவினரின் தீர்மானத்தினுலும் தீர்த்து வைக்கப்படுகின்றது.

* * *


With the Best Compliments
From

# JAFFNA PHARMACY

Wholesale & Retail Dealers
**DISPENSING CHEMIST, DRUGGIST & GROCERIES.**

**12. (38) Clock Tower Road,**
**JAFFNA.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூ விக்ரேஸ்
# எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

## விசேட சலுகை

| | | |
|---|---|---|
| மக்சல், ரி டி. கே. கசற் | C 60 | 33/- |
| பாடல் பதிவுக் கட்டணம் | ,, | 15/- |
| வீடியோ பட வாடகை | | 10/- |
| வீடியோ பட பதிவு | | 100/- |
| ரீ. வீ. கேம்ஸ் | | 50 சதம் |

மலிவு விலையில் ✵ மின்சார எலெக்ரோனிக் பொருட்கள்
✵ அழகுசாதனப் பொருட்கள்

பயிற்றப்பட்ட எலெக்ரோனிக் தொழில்நுட்ப வல்லுநர் மூலம்
எலெக்ரோனிக் கல்குலேற்றர், கைக்கடிகாரம், சகல எலெக்ரோனிக்
பொருட்களையும் சீர்படுத்திக்கொள்ள

முற்றும் குளிரூட்டிய

**நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்**

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். ☎ 23532

## தொழில் முறைப் பயிற்சிகள்

- **Computer Programming**
- **Diploma in Draughtsmanship**
- **ரெலிவிசன் - வீடியோ டெக் றிப்பியறிங்**
- **எலக்றிக்கல் வயறிங்**
- **Hotel Management**

விபரத்திற்கு:

# The School of Computer Studies

52/1, KANAGARATHINAM BUILDING,

Stanley Road, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BALENTHIRAS

170, Model Market, Jaffna.

திருமண வைபவங்களுக்கேற்ற கூறைச்சாறிகள், இந்தியா, சிங்கப்பூர் சாறிவகைகள், சூட்டிங், பேபி சூட்டுகள் மற்றும் சகலவிதமான சாறிகளுக்கும் ஏற்ப பிளவ்ஸ் துணிகளும் ஒரே இடத்திலும் மலிவாக பெற்றுக்கொள்ள

பாலேந்திராஸ்

170, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

போன்: 23071

சிறந்த ரகம் ! நிதான விலை !

சையிக்கிள்கள், சையிக்கிள் உதிரிப் பாகங்கள், இங்கிலாந்து, ஜேர்மன், சீனு, யப்பான் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் கட்டிடத்திற்குத் தேவையான சகல பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

வாஹினி

இரும்புக்கடை

கண்டி றோட், கிளிநொச்சி.

'நாளுக்கோர் புதுமை

நாடுவது உண்மை'

இவற்றை அளிப்பது தான்

சீமாட்டி

ஜவுளி சமுத்திரம்

Wear A colour - Wear a Design
Visit

SEEMATI
TEXTILE'S OCEAN

122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
போன்: 24413

கிளை:
158, நவீனசந்தை,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்,
போன்: 24096

ரெக்நோ

சிறந்த கடைச்சல் வேலைகளுக்கு
உகந்த இடம்

ஸ்ரான்லி வீதியில்
ஒரே ஒரு ஸ்தாபனம்

ரெக்நோ

252, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமிய விவசாயமும் அதன் பொருளாதார முக்கியத்துவமும்

K. இராஜகோபால் 12 C

இலங்கையின் மொத்த குடித்தொகையில் ஏறக்குறைய 75 வீதமானோர் விவசாயத்துறையிலே தங்கியுள்ளார்கள். இவர்களின் வாழ்க்கைத்தரம் வளர்ச்சி ஆகியன அனைத்தும் இக்கிராமிய விவசாயத்தையே அடிப்படையாக கொண்டுள்ளது. கிராமிய விவசாயம் எனும்போது உணவு உற்பத்தித் துறை என்பவற்றை அடக்கியதாக காணப்படுகின்றது. கடந்த நூற்றாண்டில் இலங்கையின் பொருளாதாரத்தின் உன்னத நிலைக்கு காரணமாக அமைவது கிராமிய விவசாயம் என்று கூறலாம்.

ஐரோப்பியரின் வருகையாலும் பெருந் தோட்ட பயிர் செய்கையினாலும் கிராமிய விவசாயத்துறை புறக்கணிக்கப்பட்டும் அதன் வளர்ச்சி பின்தள்ளப்பட்டும் ஒரு பிழைப்பு பட்ட பொருளாதாரமாக காணப்பட்டது. அத்துடன் உணவு உற்பத்தியிலும், உப உணவு உற்பத்தியிலும் தன்னிறைவு அற்ற நாடாகவும் பெருந் தொகையான உணவுப்பொருட்களை இறக்குமதி செய்யும் நாடாகவும் காணப்பட்டது. இவ்வாறு காணப்படுவதற்கு இக்கிராமிய விவசாயமானது நிலங்கள் சிறு சிறு துண்டுகளாக காணப்பட்டமை, தனிப்பட்ட முதலாளிகள் விவசாயிகளைச் சிக்க வைக்கும் கடன் ஒப்பந்தம், புதிய மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது தடுக்கும் குத்தகை ஒப்பந்தங்கள், பண்டைய மரபு ரீதியான தொழில் நுட்பத்தினை கொண்டுள்ளமை போன்ற அடிப்படை பண்புகளை கொண்டுள்ளது. இக் கிராமிய விவசாயம் அபிவிருத்தி அற்ற துறையாக காணப்படுவதற்கு இவ் விவசாயத்துறையில் காணப்பட்ட குறைபாடுகளே காரணமாகும். இக் காரணங்களை விரிவாக நோக்குவோம்.

## கால நிலை சீர் இன்மை

கிராமிய விவசாயமானது பெரும்பாலும் இயற்கையை நம்பியே செயல் படுகின்றது. இக் காலநிலை அடிக்கடி பொய்த்து விடுகின்றமையால் விவசாய உற்பத்தியில் பெருமளவில் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. உதாரணமாக 1972 ம் ஆண்டு தொடக்கம் 1976 ம் ஆண்டு வரை நெல் உற்பத்தியில் வீழ்ச்சி யடைந்த மைக்கு நாட்டில் ஏற்பட்ட வறட்சியும், சூருவளியும் மூல காரணமாக அமைகின்றன. ஆகவே இக்கிராமிய விவசாயம் பின்தள்ளப்பட்டமைக்கு காலநிலை சீர் இன்மை ஒரு காரணியாகும்.

## சிக்கனமற்ற உடமைகள்

சிக்கனமற்ற உடமை எனும்போது ஒரு விவசாயக்குடும்பம் தான் வாழ்க்கை நடாத்துவதற்கு தேவையான வருமானத்தைத் தரக்கூடிய நிலத்தின் அளவைக் குறிக்கும். இலங்கையில் ஏறக்குறைய 80 சத வீதமானோர் இத்தகைய வருமானத்தை தரக்கூடிய சிக்கனமற்ற உடமையுடையோராவர், பெரும்பாலும் இவர்கள் கடன்பட்டு முதலீடு செய்வதினால் முதலீடு குறைவாகவும் அதனால் உற்பத்தி குறைவாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீழ் உழைப்பும் பருவகால வேலை இன்மையும்

கீழ் உழைப்பு எனும்போது அரை குறை வேலை வாய்ப்பினைக்குறிக்கும். அதாவது ஒருவரினால் செய்யக்கூடிய வேலையை பலர் பகிர்ந்து செய்வதைக் குறிக்கும். உதாரணமாக ஒரு விவசாய நிலத்தில் ஒரு குடும்ப அங்கத்தவர்களில் 3 பேர் வேலை செய்வதன் மூலம் 200 புசல் நெல்லினை உற்பத்தி செய்கின்றார்கள். அக் குடும்பத்தில் 5 பேர் வேலை செய்தும் 200 புசல் நெல்லினை உற்பத்தி செய்கின்றனர். ஆகவே மேலதிகமாக உள்ள இரண்டு அங்கத்தினரது உழைப்பு கீழ் உழைப்பு எனப்படும். தேவைக்கு மேலாக சனத்தொகை அதிகரிக்க வேலை வாய்ப்பற்ற காரணத்தினால் சேமிப்பு மட்டம் வீழ்ச்சியடையவும் உற்பத்தி பாதிப்படையவும் அடிப்படையாக அமைகின்றது.

## விவசாயம் பற்றிய போதிய அறிவின்மை

விவசாயத்துறையிலே ஈடுபட்டுள்ளோரில் பெரும்பாலோர் பூரண விவசாய அறிவு அற்றவராவர். நவீன முறைகளை கையாளவோ புதிய முயற்சிகளை மேற்கொள்ளவோ இவர்கள் முன்வருவதில்லை. இதனால் விவசாயத்துறை பின்தங்கிய துறையாக காணப்படுகின்றது.

## ஏக்கருக்குரிய விளைச்சல் குறைவாக காணப்படுகின்றமை

இலங்கையின் விவசாயத்துறை மரபு ரீதியான தொழில் நுட்பத்தை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. விதைத்தல், அறுவடை செய்தல் போன்றவற்றில் மிகப்பழைய முறையே பின்பற்றப் படுவதினால் ஏக்கருக்குரிய விளைச்சல் குறைவாக காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட காரணிகளை விட நீர் பற்றாக்குறை பின்தங்கிய பயிர் செய்கை ஆகியனவும் கிராமிய விவசாயத்துறையை வளர்ச்சியடையச் செய்யாமைக்கு அடிப்படையாகும். இக் குறைபாடுகள் 1930 ஆண்டுவரை காணப்பட்டவையாகும்; 1930 ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் கிராமிய விவசாயத்தினை வளர்ச்சியடையச் செய்ய அரசாங்கம் குடியேற்ற திட்டங்கள் உத்தரவாத விலைத்திட்டம், உரமானியமும், பயிர் காப்புறுதியும், கிராமிய மக்களுக்கு கடன் வசதியளித்தல், பிரதேச அபிவிருத்தி சபைகளை ஏற்படுத்தல் போன்ற திட்டங்களை அமுல்படுத்தியதன் மூலம் இன்று நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.

இக் கிராமிய விவசாயமானது ஒரு நாட்டின் தேசிய வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இலங்கையின் தேசிய வருமானத்தில் 20 சதவீதம் கிராமிய விவசாயத்திலே தங்கியுள்ளது. ஆகவே இலங்கையில் முக்கியமான துறையாக இத்துறை விளங்குகின்றது. அத்தோடு தேசிய உற்பத்தியினை பெருக்கமடைய செய்தலின் மூலம் தலா வருமானம் அதிகரித்து நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதோடு நாட்டின் வருமான ஏற்றத்தாழ்வுகளின் நிலை காணப்பட இக் கிராமிய விவசாயத்தின் பங்கு முக்கியமானதாகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பின் காரணத்தால் அவற்றினை சமாளிப்பதற்கு அரசாங்கம் முன்னையஅளவிலும் விட அதிக அளவு உணவுப்பண்டங்களை இறக்குமதி செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்படலாம். இந் நிலையில் இக்கிராமிய விவசாயத்தின் மூலம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யப்படின் இறக்குமதிக்காக செலவிடப்படும். அன்னிய செலாவணி மீதப்படுத்தப்பட்டு கைத்தொழில் முயற்சிகளில் முதலிட முடியுமாகையால் இக் கிராமிய விவசாயத்தின் பொருளாதார முக்கியத்துவம் முதன்மை பெறுகின்றது.

ஒரு நாட்டில் பெருகி வரும் சனத்தொகைக்கு வேலை வாய்ப்பு அதிகரிப்பதற்காக அரசாங்கம் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. இதனால் அந் நாட்டில் சூழல் மாசுபடுதல் போன்றவை நிகழ இடமுண்டு. குடிசைக் கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, காட்டுத்தொழில்கள் போன்றவற்றை விருத்தி செய்வதினால் சூழலை பாதிக்காத வண்ணம், தொழிலாளர்களை பாதிக்காத வண்ணம், நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க இக்கிராமிய பொருளாதார விருத்தி முக்கியமான தாகும்.

கிராமிய பொருளாதாரத்தை விருத்தியடைய செய்வதினால் கிராமிய மக்களின் வருமானம் அதிகரித்து காணப்படுகின்றன. ஆனால் கிராமியமக்களின் வாழ்க்கைச்செலவு குறைந்து காணப்படுகின்றன. எனவே இவர்களிடம் சேமிப்பு பழக்கத்தை உண்டு படுத்தி இச்சேமிப்புக்கள்மூலம் பாரியகைத்தொழில் ஆக்கங்களுக்கு முதலிடவும் வாய்ப்பு உண்டு. இன்றும் கூட ஜப்பான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளின் கைத்தொழிலாக்கத்துக்கு கிராமிய விவசாயத் துறையிலிருந்தே மூலதனத்தை பெறுகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மக்களின் வருமானங்கள் குறைவடைந்து காணப்படுகின்றன. இதனால் இங்கு உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் பொருட்களுக்கு கேள்வி குறைவடைந்து காணப்படுகின்றன. கிராமிய விவசாய விருத்தியின் மூலம் அவர்களின் வருமானம் அதிகரிக்க இக் கைத்தொழில் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பதோடு கைத்தொழில் வளர்ச்சியடையச் செய்கின்றது. எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் துரிதமாக பொருளாதார வளர்ச்சியடைய கிராமிய விவசாயமே முக்கியமான தொன்றாகும்.

இன்று அபிவிருத்திப் பாதையிலே முன்னேக்கிச் செல்லும் மூன்றும் மண்டல நாடுகளுக்கு எமது நாடாகிய இலங்கை உதாரணமாக விளங்குகின்றது என சர்வ தேச ரீதியாக அங்கீகாரம் பெற்றுள்ளது.

எனவே ஒரு நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் அதன் விவசாயத் துறையில் தங்கியுள்ளது என்பதற்கு இலங்கையிலுள்ள 24000 இராமங்களின் பங்கு சான்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rio Enterprise

**Wholesale** **Retail**

Dealers in Tailoring Requisites and Fancy Goods

64, New west market Jaffna.

எங்களிடம் உள்நாட்டு, வெளிநாட்டு நூல்வகைகள், கொலர் ஸ்டிப் வகைகள், பென்ஸி பட்டன், லேஸ் வகைகள் மற்றும் தையல் வேலைகளுக்குத் தேவையான பொருட்கள் யாவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

## 'றியோ என்டபிறைஸ்'

64, புதிய மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம்.
(பெரியகடை உட்புறம்)

யாழ் நகரில்

அஸ்ரா நூல், சன் நூல் வகைகள் விநியோகஸ்தர்கள்

---

'வணிகஜோதி' தொடர்ந்து மலர்ந்து அதன் நறுமணம்'
வணிக உலகைக் கவர எமது நல்லாசிகள் பல.

# IDEAL AGENCY

'ESSENCE CANAL'

சகல விதமான எசன்ஸ் வகைகளுக்கும், பழரச குளிர் பானங்கள், கேக், இனிப்பு வகைகள் தயாரிக்கத் தேவையான சகல மூலப்பொருள்களுக்கும், சிறுகைத்தொழிலாளர்களுக்குத் தேவையான கடதாசி வகைகள், பொலித்தீன் தினிசுகள் போன்றவற்றிற்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## 'ஐடியல் ஏஜன்சி'

239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23648

# சரக்குமுதல் கைமாற்று அமைப்பு

**Mr. R. LANKATHURAI,**
Senior Instructor,
Poly Technical Institute, Jaffna.

சுலபமாகக் குறைந்த செலவில் நியாயமான விலையில் பங்குகளையும் ஏனைய கடன் பத்திரங்களையும் விற்பனை செய்து நிதியைச் சேர்க்கக்கூடிய வசதியை அளிக்கும் ஓர் அமைப்பே சரக்குமுதல் கைமாற்று அமைப்பாகும். கம்பனி அமைப்பு பெருமளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கும் நாடுகளில் கம்பனிகள் சுலபமாக, துரிதமாக பங்குப்பத்திரங்களையும் ஏனைய கடன்பத்திரங்களையும் விற்பனைசெய்து நிதியைச் சேர்ப்பதற்கு உதவும் முகமாக சரக்குமுதல் கைமாற்று அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் சரக்குமுதல் கைமாற்று அமைப்பு நடைமுறையில் செயற்படுத்தப்படுகின்றது. இலங்கையில் பங்குகள், தொகுதிக் கடன்பத்திரங்கள் போன்றவற்றை கம்பனிகள் விற்பனைசெய்து நிதியைச் சேர்ப்பதற்கு 1904 ம் ஆண்டிலிருந்து இதுவரை காலம் கொழும்பு தரகர் சங்கமும் அதன் அங்கத்துவ நிறுவனங்களுமே செயற்பட்டு வந்தன. ஆனால் அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைய கம்பனிகளுக்கு உதவும் நோக்குடன் சரக்குமுதல் கைமாற்று அமைப்பு ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது 1969 ம் ஆண்டில் பதவியிலிருந்த அரசாங்கம் சரக்குமுதல் கைமாற்று அமைப்பை உருவாக்குவது தொடர்பாக ஆரம்ப நடபடிக்கைகளை மேற்கொண்டு, இது தொடர்பாக சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக இலங்கையிலிருந்து ஓர் குழு இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1970 ம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக அவ்வமைப்பு தாபிக்கப்படுவது தொடர்பான நடவடிக்கைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன. 1977 ம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்பு 1969 ல் மேற்கொள்ளப்படட நடவடிக்கை தொடர்ந்தும். மேற்கொள்ளப்பட்டது. சரக்குமுதல் கைமாற்று அமைப்பு தாபிப்பது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக வர்த்தக அமைச்சரினால் ஒரு குழுவும், நிதி அமைச்சரினால் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டன. இவற்றின் சிபார்சின் பிரகாரம் சரக்குமுதல் கைமாற்று அமைப்பு தாபிக்கப்படுவது வலியுறுத்தப்பட்டது, இச் சிபார்சுகளுக்கு அமைய, 1981 ல் பிரகடனம் செய்யப்பட்டு 1982 ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட புதிய கம்பனிச்சட்டத்தின் ஊடாக, சரக்குமுதல் கைமாற்று அமைப்பைத் தாபிப்பதற்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் செயற்படும் சரக்குமுதல் கைமாற்று அமைப்பினைப் பின்பற்றியே இலங்கையிலும் சரக்குமுதல் கைமாற்று அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்நாடுகளில் செயற்படும் சரக்குமுதல் கைமாற்று அமைப்புக்களுடன் இலங்கையில் செயற்படும் சரக்குமுதல் கைமாற்று அமைப்பு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திச் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1982 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ம் திகதி சரக்குமுதல் கைமாற்று அமைப்பு தாபிக்கப்பட்டது தொடர்பான உத்தியோகபூர்வமான அரசாங்க அறிக்கை வெளியிடப்பட்டது. இதனை வழிநடத்தும் பொறுப்பு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு இருக்கும் பத்து இயக்குநர்களைக் கொண்ட ஓர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, கலாநிதி டசரின் குணசேகரா இதன் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் செயற்பாடு, பங்குச் சந்தையின் அமைப்பின் ஊடாக ஆவணங்களை விற்பனைசெய்தல். நிதி சேர்த்தல் ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளை பெருமளவிற்கு நிவர்த்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ச்சியான ஆவண விற்பனைக்கான வசதிகள் அளிக்கப்படாதது பங்குச் சந்தை அமைப்பில் காணப்படும் பிரதான குறைபாடாகக் கருதப்படுகின்றது. சரக்குமுதல் கைமாற்று அமைப்பு தொடர்ச்சியாகச் செயற்படும் ஓர் அமைப்பாக இருக்கின்றதினால் பங்குச் சந்தையில் காணப்படும் இக் குறைபாடு பெருமளவிற்கு இதன் ஊடாக நிவர்த்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் பங்குச்சந்தை நடவடிக்கைகளைப் போல் அல்லாமல், திட்டவட்டமான நிபந்தனைகளுக்கு அமைய ஆவண வியாபார நடவடிக்லைககளை மேற்கொள்ளும் வசதியும் இவ்வமைப்பினால் அளிக்கபபடும். கொழும்புத் தரகர் சங்கம் பங்குச் சந்தையின் ஊடாக இதுவரை செயற்பட்டும் பரவலாக நாட்டின் பொதுமக்கள் மத்தியில் பங்கு விற்பனை தொடர்பான விளக்கமும், கம்பனி அமைப்புத் தொடர்பான விளக்கமும் மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது, ஆனால் சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் திறமையான செயற்பாட்டின் ஊடாக, பொதுமக்களுக்கு அந்நடவடிக்கைகள் தொடர்பாகவும் கம்பனி அமைப்புத் தொடர்பாகவும் கூடுதலான விளக்கம் ஏற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆவண விற்பனையில் ஈடுபடுவதற்குப் பயிற்றப்பட்டவர்களின் எண்ணிக்கையும் குறைவாகக் காணப்படுகின்றது, இது தொடர்பான திட்டவட்டமான நடவடிக்கைகள் தரகு வியாபார அமைப்பின் ஊடாக ஏற்படுத்தப்படவில்லை. சரக்குமுதல் கைமாற்று அமைப்பு தனது திறமையான செயற்பாட்டின் ஊடாக ஆவண நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குக் கூடுதலான பயிற்றப்பட்டவர்களை குறுகியகாலத்தில் உருவாக்குமென நம்பப்படுகின்றது.

சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் திறமையான செயற்பாட்டிற்கு அத்தியாவசியமான ஆக்கக் காரணிகளாகவும். முன்னோடிகளாகவும் கருதப்படும் சில பிரதான சூழ்நிலைகள் 1977 ல் தற்கால அரசாங்கம் பதவிக்கு வந்தபின்பு நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. 1982 ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட புதிய கம்பனிச் சட்டத்தின் மாற்றங்களும் சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் தாபிப்பு அங்கீகரிக்கப்பட்டதும் இவ்வமைப்பின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. தனியார்துறை முதலீட்டுக்காரர்கள் சுதந்திரமாக தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உரிமையை அனுபவிப்பது சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் திறமையான செயற்பாட்டிற்கு ஆரம்ப அத்திவாரமாக்க் கருதப்படுகின்றது. தற்போது பதவியிலிருக்கும் அரசாங்கத்தின் தனியார்துறை தொடர்பான தாராளக் கொள்கை இதற்கேற்ற வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. கம்பனிகள் பெரும்ளவில் செயற்படுவதும் சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் செயற்பாட்டுக்கு அத்தியாவசியமாக அமைகின்றது. இந்நிலைமை 1977 க்குப் பின் பெருமளவில் தாபிக்கப்பட்ட கம்பனிகளின் பிரதிபலனாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆவணங்களைக் கொள்வனவு செய்கின்றவர்களும் பெருமளவில் காணப்படுவதும், மாற்று ஆவணங்கள் பெருமளவில் இருப்பதும், வருமானம் அளிக்கக்கூடிய மாற்று முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்புக்களும், வங்கிகள், நிதிக்கம்பனிகள் போன்ற ஏனைய நிதியமைப்புக்களின் வளர்ச்சி பெருமளவில் ஏற்படுத்துவதும் சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமாக அமைகின்றன. இத்தகைய சூழ்நிலைகள் யாவும் 1977 ம் ஆண்டில் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் தாராளக்கொள்கையின் பிரதிபலனாக நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதால் சரக்குமுதல் கைமாற்று அமைப்பு திறமையாகச் செயற்படுமென நம்பிக்கையும் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்குமுதல் கைமாற்று அமைப்பின் செயற்பாட்டின் ஊடாக பலதரப்பட்ட பலாபலன்களும் நாட்டுக்கு ஏற்படுமெனத் திட்டவட்டமாக எதிர்பார்க்கலாம். முதலீடுகளை மேற்கொள்ளும் கம்பனிகள். ஆவணங்களைச் சுலபமாக விற்பனை செய்து வேண்டிய நிதியைப் பொதுமக்களிடமிருந்து துரிதமாகச் சேகரித்து, பெரும் முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படும். இதன் பிரதிபலனாக நாட்டில் கம்பனி அமைப்பின் வளர்ச்சி பரவலாக ஏற்படுவதற்கு வழிவகுக்கப்படுவதுடன் முதலீட்டு வளர்ச்சிக்கும் சாதகமான சூழ்நிலை நாட்டில் உருவாக்கப்படும். பொதுமக்கள் தம்வசமிருக்கும் மேலதிக பணத்தைக் கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்து முதலீடு செய்வதற்குத் தகுந்த வாய்ப்புகள் இவ்வமைப்பின் ஊடாக அளிக்கப்படும். இதன் பிரதிபலனாக பொதுமக்களிடமிருக்கும் பணம் விரையமாக முடங்கி நிற்காது முதலீடுகளில் ஈடுசெய்யத்தகுந்த வாய்ப்புக்கள் நாட்டில் உருவாக்கப்படும். ஆவண தொழிற்பாட்டின் ஊடாக சரக்குமுதல் கைமாற்று அமைப்பு நாட்டில் நிதி தொழிற்பாட்டை அதிகரிக்கின்றதனால் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிதி நிறுவனங்கள் இலங்கையில் உருவாக்கப்பட சாதகமான சூழ்நிலை பெருமளவில் ஏற்படும். சரக்குமுதல் கைமாற்று அமைப்பு ஆவண விற்பனையின் ஊடாகக் கம்பனிகளுக்கு நீண்டகால நிதிவசதியை அளிப்பதனாலும் இதன் நிதித்தொழிற்பாட்டின் தாக்கவிளைவாக நீண்டகால நிதி நிறுவனங்கள் உருவாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதனாலும் நாட்டில் மூலதன சந்தையின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்படும். நாட்டில் பரவலாகப் பொதுமக்கள் கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவுசெய்து முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு இதன் ஊடாக அளிக்கப்படுகின்றதனால் கம்பனி அமைப்புக்களின் உடமை பரவலாக்கப்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை இதன் செயற்பாட்டின் ஊடாக நாட்டில் உருவாக்கப்படும். இவ்வமைப்பின் முயற்சிகளின் பிரதிபலனாகக் கம்பனி அமைப்பு பெருமளவிற்கு வளர்ச்சியடைவதினால் நாட்டை நகரமயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்குத் தகுந்த வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும். கம்பனிகளின் ஆவணங்களை விற்பனை செய்வதில் ஈடுபடுவதுமன்றி அரசாங்கக்கடன் ஆவணங்களின் தொழிற்பாட்டிலும் இவ்வமைப்பு ஈடுபடக்கூடியவாறே இதன் தொழிற்பாடு பரவலாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இதன் ஊடாக அரசாங்கக்கடன் பத்திரங்களும் சுலபமாக விற்பனை செய்யப்பட்டு நிதி சேர்க்கப்படும். எனவே இவ்வமைப்பின் செயற்பாட்டினால் ஏனைய நாடுகள் அனுபவிக்கும் பலாபலனை இலங்கையும் வெகுவிரைவில், பெருமளவில் அனுபவிக்கக்கூடியதாக இருக்குமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

* * *

"வெளிநாட்டுத் தானியம் மீது காப்புச் சுங்கவரிகளைப் போடுவது பழி கேடானதாகும். அது மக்களின் பஞ்சத்தை வைத்துப் பணம் பண்ணுவதாகும்."

காரல் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வணிகஜோதி” மலர் இன்னும் பல ஆண்டுகள் மலர்ந்து இனிய மணம் பரப்ப எமது நல்லாசிகள்

# சந்திராஸ்

பிரபல பாதணி விற்பனை நிறுவனம்

# CHANDRAS

LEADING FOOTWEAR MERCHANTS

62 — 63, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

62 – 63, New Market,
JAFFNA.

# நொதேண் கல்வி நிலையம்

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**G. C. E.**

**A/L**

**84, 85**

**கலை - வர்த்தகம்**

| | |
|---|---|
| பொருளியல் | இராமநாதன் |
| கணக்கியல் | மரியதாஸ் |
| வர்த்தகம் | செல்வா |
| இந்துநாகரீகம் | அருள் நங்கை |
| தமிழ் | சரவணன் |
| புவியியல் | சண் |
| அரசியல் வரலாறு | மஃறுப் |
| அளவையியல் | யுகன் (யுகபாலசிங்கம்) |

G.C. E. O/L காலை, மாலை நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஏற்றுமதி கடன் வசதிகளும் சேவைகளும் காப்புறுதி கூட்டுத்தாபனம்

**ம. தனபாலன் 12 B**

இக் கூட்டுத்தாபனம் வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் கீழ் இயங்குகின்றது. இது 1979 பெப்ரவரி 8ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு நியதிச் சட்டசபை ஆகும். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், மத்திய வங்கியும் இதில் மூல தனத்தை பங்களிப்பு செய்து இருக்கின்றன.

## முக்கிய பணிகள்

இக் கூட்டுத்தாபனத்தின் பணிகளை 2 பகுதிகளாக தொகுக்கலாம்.

1) கொள்வனவாளர்களுக்கு கடன் அடிப்படையில் விற்கப்படும் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் அவர்களின் பணம் செலுத்தல், தவறுதல்கள் அன்றேல் தாமதித்த பணக் கொடுப்பனவு போன்ற அபாயங்களுக்கு எதிராக ஏற்றுமதியாளர்களுக்கு காப்புறுதிப் பத்திரங்கள் வழங்குகிறது.

2) ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதித் தொழிலோடு தொடர்புடையனவற்றுக்கு கடன் வசதிகளை விஸ்தரிப்பதற்கு வர்த்தக வங்கிகளுக்கு உத்தரவாதம் வழங்கி வசதி அளிக்கின்றது.

## காப்புறுதித் திட்டம்

பின்வரும் காப்புறுதித் திட்டங்கள் இ. ஏ. க. கா. கூ. தாபனத்தால் வழங்கப்படுகின்றது.

1) ஏற்றுமதி கொடுப்பனவுகள் காப்புறுதி பத்திரம்.

இதுவே இக் கூட்டுத்தாபனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் காப்புறுதி திட்டமாகும். வர்த்தகம் சம்பந்தமான அபாயங்களினாலும் வர்த்தகம் சம்பந்தமில்லா அபாயங்களினாலும் ஏற்றுமதி வசூல்கள் பெற்றுக்கொள்ளப் படாமைக்கும் தாமதித்த கொடுப்பனவுக்கும் எதிராக ஏற்றுமதியாளர்களை இத் திட்டம் நட்ட உத்தரவாதம் அளிக்கின்றது. கொள்வனவு செய்பவரின் பணமுறிவு, காலம் கடந்த கொடுப்பனவு, தவறுதல்கள், கப்பலேற்றிய பின் பண்டங்களை ஒப்புக் கொள்ளாமை ஆகிய வர்த்தக அபாயங்களுக்கு உத்தரவாதம் வழங்குகின்றது. யுத்தம், உள்நாட்டு கலவரம், கொள்வனவாளரின் நாட்டில் குழப்பங்கள், நாணய இறக்குமதி கட்டுப் பாடுகள், கொள்வனவு தாமதங்கள், வெளிநாட்டு கடன்களில் முடக்கல்கள் ஆகியன முக்கியமான வர்த்தகம் சம்பந்தமில்லாத (அரசியல்) அபாயங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) நட்ட உத்தரவாத எல்லை:

வர்த்தகம் சம்பந்தமான அபாயங்களுக்கு எதிராக 80% உத்தரவாதமும், வர்த்தகமல்லா அபாயங்களுக்கு எதிராக 85% உத்தரவாதமும் வழங்கப்படுகிறது.

3) தவணைக் கட்டுப்பணம்:

கொள்வனவாளரின் நாட்டுக்கு வழங்கப்பட்ட மதிப்பீடு, கடனின் கால எல்லை, கொடுப்பனவு நியதிகளுக்கேற்ப வேறுபடும். இக் கட்டுப்பணம் 0.15% த்திலிருந்து 0.5% வரை அண்ணளவான சராசரியாக அமையும்.

4) இதர காப்புறுதி வசதிகள்:

இ. ஏ. க. கா. கூ. பின்வரும் இதர காப்புறுதித் திட்டங்களையும் வழங்குகின்றது,

சேவைகள் சார் காப்புறுதி;

கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட சேவைகளுக்கு கொடுப்பனவு செய்யப் படாமைக்கு எதிராக ஏற்றுமதியாளர்களுக்கு இக் காப்புறுதித் திட்டம் பாதுகாப்பு வழங்குகின்றது. உல்லாசப் பயணிகளின் விடுதிகள், சுற்றுப்பயண ஏற்பாட்டாளர் கள், பயண முகவர்கள், கப்பல் உணவு வழங்குநர்கள், பேரளவு வகுதியினரால், வழங் கப் படும் சேவைகள் இதில் அடங்கும்.

கடல் கடந்த முதலீட்டுப் பாதுகாப்பு;

வெளிநாடுகளில் இலங்கையர் செய்யும் முதலீடுகளுக்கு அந்நாடுகளில் அவற் றின் அபகரிப்பு, நாட்டுடைமை அபாயங்களுக்கு எதிராக இக் கூட்டுத்தாபனம் கடல் கடந்த பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நட்ட உத்தரவாதம் வழங்குகிறது.

வெளிநாட்டுக் குடிசார் நிர்மாண வேலைகள் காப்புறுதி:

வெளிநாடுகளில் குடிசார் நிர்மாண வேலைகளையும் அவற்றோடு இயைபான வேலைகளையும் மேற் கொள்ளும் உள்ளூர் பொறியியல் நிறுவனங்களுக்கும் வேலை ஒப் பந்தக்காரர்களுக்கும் உதவும் முகமாக இக் காப்புறுதி வழங்கப்படுகிறது.

சுதந்திர வர்த்தக வலைய ஏற்றுமதிகள்:

இவ்வலையங்களிலிருந்து ஏற்றுமதிகளுக்கான கொடுப்பனவுகளைப் பாதிக்கும் வழமையான வர்த்தக அரசியல் அபாயங்களுக்கு எதிராக சுதந்திர வர்த்தக வலையத் தில் அமைந்துள்ள கம்பனிகளுக்கு இக் கூட்டுத்தாபனம் நட்ட உத்தரவாத வசதிகள் வழங்குகின்றது.

ஏற்றுமதிக் கிராமத் திட்டம்-

மாதிரி ஏற்றுமதிக் கிராமங்களின் விளைபொருட்களின் உற்பத்தி ஏற்றுமதியை உள்ளடக்கும் விசேட ஊக்குவிப்புத் திட்டமொன்றினை இக் கூட்டுத்தாபனம் நடை முறைப்படுத்துகிறது. கிராமப் பகுதிகளில் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு சிறப்பாக அரச வங்கிகள் இவ்வுத்தரவாதத்தை பயன் படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதிப்பத்திரம் பெறுவதெப்படி?

காப்புறுதிப் பத்திரம் ஏற்றுமதியாளருக்கும் இக் கூட்டுத்தாபனத்திற்குமிடையே யுள்ள ஒப்பந்தத்தினைக் கூறுகின்றது. தமது கடன் அபாயத்துக்கு நட்ட உத்தர வாதம் செய்ய அக்கறையுள்ளோர் கூட்டுத்தாபனத்தின் அலுவலகத்தில் அல்லது ஏதே னும் வர்த்தக வங்கியின் அலுவலகத்தில் இந் நோக்கத்திற்காக வழங்கப்படும் படி வத்தில் இக் கூட்டுத்தாபனத்துக்கு தமது யோசனையைத் தெரிவிக்கலாம்.

மேலதிக நன்மைகள்:

இக் கூட்டுத்தாபனத்தின் நட்ட உத்தரவாதம் பாதுகாப்புப் பத்திரதாரர்கள் தங்கள் பாதுகாப்புப் பத்திரங்களின் பேரில் வங்கிகளிலிருந்து உண்டியல் கொள்வனவு (அல்லது சரக்குக் கப்பலிலேற்றிய பின்) வசதிகள் பெறலாம். ஏனெனில் இதன் கீழ் செலுத்தற் பிரதான உரிமைக் கோரிக்கைகள் யாவும் இயல்பாக ஏற்றுமதி உண்டியலை கழிவுடன் மாற்றிய வங்கியினூடாகத்தான் அனுப்பப்படும். இக் காப்புறுதிப் பாதுகாப்பு ஏற்றுமதியாளர்களிடையே போட்டியை வலுவடையச் செய்வதுடன் பிறநாடுகளில் கொள்ளனவு செய்வோருக்கு பொருத்தமான கொடுப் பனவு நியதிகள் அளித்து விற்பனைகளை விஸ்தரிப்பதற்கு வகை செய்கின்றது.

வங்கி உத்தரவாதத் திட்டம்:

ஏற்றுமதியாளர்கள் தங்கள் ஏற்றுமதிக்கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு வங்கி களில் இருந்து கடன்வசதிகள் பெறும் முகமாக வங்கி உத்தரவாதங்கள் வழங்கப்படு கின்றன. கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதத்துடன் வழங்கப்பட்ட பிணையுடன் வங்கிகள் தாராள அடிப்படையில் ஏற்றுமதியாளர்களுக்குக் கடன் வழங்குகின்றன. உத்தரவாதங்கள் புதிய ஏற்றுமதியாளர்களுக்கு கூடிய தொகைகளைக் கடனாகப் பெறு வதற்கும் வகை செய்கின்றன.

உத்தர வாதங்களின் வகைகள்:

கப்பலேற்றுமுன் கடன் உத்தரவாதம்:

ஏற்றுமதியாளர்களுக்கு கப்பலேற்றுமுன் வழங்கப்பட்ட கடன்களின் செலுத் தாமைக்கெதிரே இது வங்கிகளுக்கு உத்தரவாதமளிக்கிறது. (வருடமொன்றுக்கு 1.2%) அல்லது மாதமொன்றுக்கு ஒவ்வொரு ரூபா 100/- க்கும் 10 சத ஒப்பப்பணத் துடன் செலுத்தப்படாத தொகையின் 66 $^{2}/_{3}$% உத்தரவாதமளிக்கப்படுகிறது. மொத் தப் புரள்வு உத்தரவாதத்தின் கீழ் (அதாவது கப்பலேற்று முன் வங்கியின் முழு கடன் உத்தரவாதம்) ஒவ்வொரு ரூபா 100/- க்கும் 25 சத ஒப்பப் பணத்துடன் 75% க்கு உத்தரவாத மளிக்கப்படுகிறது.

இலங்கை வர்த்தக சங்கத்தினால் நடாத்தப்படும் ஏலங்களில் இரத்தினக்கற்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு உத்தரவாதத் திட்டமும் இரத்தினக்கற்கள் தோண்டு பவர்களுக்கும் கொள்வனவு செய்வோருக்கும் வங்கிக் கடன் உடனடியாகவும் சுலப மாகவும் பெறுவதற்கு பிறிதொரு விசேட வங்கி உத்தரவாதத்திட்டமும் இக் கூட்டுத் தாபனம் நடைமுறைப்படுத்தியுள்ளது. பின் கூறப்பட்டதிட்டத்தின் தொழிற்பாடு தற்பொழுது இலங்கை வங்கி, மக்கள் வங்கி மாத்திரம் இரத்தினபுரிக்கிளைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கப்பலேற்றியபின் கடன் உத்தரவாதம்:**

கப்பலேற்று முன் கடன் உத்தரவாதத்தின் கீழ் வங்கிகளுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பினை இவ்வுத்தரவாதம் நிறைவு செய்து வங்கிகளால் வழங்கப்பட்ட கப்ப லேற்றிய பின் கடன்களின் தவறுதல்களுக்கு (அன்றேல் உண்டியல் கொள்வனவு வச திகளுக்கு) எதிராக வங்கிகளை பாதுகாக்கின்றது. எனவே இவ்வுத்தரவாதத்தின் கீழ் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பிணையுடன் கூடிய இக் கூட்டுத்தாபனத்தின் காப்புறு திப் பத்திரம் ஏற்றுமதியாளருக்கு கப்பலேற்றியபின் நிதியளிப்பதனை விஸ்தரிப்பதை இலகு படுத்துகிறது. இவ்வுத்தரவாதத்தின் கீழ் வழங்கப்படும் பாதுகாப்பு வங்கியின் நட்டத்தின் 75% ஆகும். இதற்காக செலுத்தவேண்டிய ஒப்பப்பணம் ஒவ்வொரு 100/-க்கு 05 சதமாகும், (அன்றேல் ஆண்மடான்றுக்கு 0,6%)

**ஏற்றுமதிச்சாதனை உத்தரவாதம்:**

ஏற்றுமதியாளர்கள் சார்பில் வங்கிகளால் வழங்கப்பட்ட பிணைப்பத்திரங்கள் உத்தரவாதங்களுக்கெதிரே வங்கிகளுக்கு வழங்கப்படும் மாற்றுவுத்தரவாதமாகும். வங் கியின் நட்டத்தின் 75% க்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதற்காக செலுத்த தவணைப்பணம் ஆண்டொன்றுக்கு வழங்கப்பட்ட பிணை அல்லது உத்தரவாதத்தின் பெறுமதியில் 1% ஆகும். இக் கூட்டுத்தாபனத்தின் மாற்றுவுத்தரவாதத்தின் துணையுடன் ஏற்றுமதியாளர்கள் தங்கள் வங்கிகளிலிருந்து பிரதம சுங்க சேகரிப்பாளர் சார்பில் இறக்குமதி ஏற்றுமதித் தீர்வை உத்தரவாதங்களையும் பிறநாட்டு கொள்வன வாளர்சார்பில் உத்தரவாதங்களையும் (அதாவது கோருவிலைகள் சாதனைப் பத்திரங்கள்) ஏற்றுமதி வியாபார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை உள்ளடக்கும், உத்தர வாதங்களையும் நாணயக் கட்டுப்பாட்டாளர், தொழில் ஆணையாளர் சார்பில் பெற முடியும். பணத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்வுத்தரவாதம் அமையாதபோதும் இக் கூட்டுத்தாபனத்தின் மாற்றுவுத்தரவாதம் வங்கிகள் ரொக்கப்பண வைப்புக்களை குறைக்கவும் அன்றேல் விட்டுக்கொடுக்கவும் வகைசெய்து அதன்மூலம் ஏற்றுமதியாள ரின் தொழிற்படு மூலதனங்களைப் பெருக்குகின்றது.

**இ. ஏ. க. கா. கூ. உத்தரவாதத்தைப் பெறுவது எங்ஙனம்?**

வங்கிகள் எல்லாவற்றிலும் கிடைக்கப்பெறும் படிவங்களில் யோசனையைத் தெரி வித்து உத்தரவாதங்களைப் பெறமுடியும். இக் கூட்டுத்தாபனத்தின் உதவியைத் தங்கள் வங்கிகளிலிருந்து கடன் வசதிகள், ஏற்றுமதியாளர்கள் வேண்டிய பணத்துக்கு அவ் வங்கிகளுடன் முதலில் தொடர்பு கொள்ளவேண்டும். வங்கிகள் முறைறயே தங்கள் யோசனைகளை இக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிப்பர்.

* * *

"மதிப்புகள் என்ற முறையில், எல்லாப் பண்டங்களுமே
உறைந்து கெட்டியான உழைப்பு நேரத்தின்
குறிப்பிட்ட திரள்களே ஆகும்."

— காரல் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ காவேரி ரெக்ஸ் சென்ரர் ★

181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்:

நவநாகரீகத்திற் கேற்ற

★ இந்தியன் - சிங்கப்பூர் சாறி வகைகளும்

★ றெடிமேட் உடுப்புக்களும்

★ பிளவ்ஸ் துண்டுகளும்

★ கால்சட்டை துணிவகைகளும்

மலிவாகக் கிடைக்கும்

விஜயம் செய்யுங்கள்!

**CAVEERY TEXS CENTRE**

181, Model Market, JAFFNA.

---

யாழ்நகரில் சுவையான ஐஸ்கிறீம், குளிர்பானங்களுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்!

**Kalyani Cream House**

திருமண வைபவங்கள் பிறந்த தின வைபவங்கள்

விழாக்கள், களியாட்டங்கள்

அனைத்திற்கும் தேவையான கேக், பற்றிஸ்

பீடா, ஐஸ்கிறீம் முதலியவற்றை ஓடர் செய்து

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள

சிறந்த இடம்

கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24077

கல்விக் கடலின் கலங்கரை விளக்கம்!

மாணவ உலகின் மாபெரும் சக்தி !!

வட இலங்கையின் முன்னணி நிறுவனம்!!!

# "நொதேண் பெஸ்ட் இன்ஸ்ரிரியூட்"

(சென் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

## G. C. E. O/L, A/L

கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்கள்

பட்டதாரி ஆசிரியர்களினாலும் பயிற்றப்பட்ட திறமைமிக்க ஆசிரியர்களாலும் கற்பிக்கப்படுகின்றன.

**A/L**

பொருளியல்: கிருஷ்ணனந்தன்
வர்த்தகம்: இலங்கா
கணக்கியல்: மரியதாஸ்
அளவையியல்: பிரபல ஆசிரியர்
புவியியல்: சண்
தமிழ்: சரவணன்
இ. நாகரீகம்: காரை சுந்தரம்பிள்ளை
அரசியல், வரலாறு: மஃறூப்
கிறிஸ்தவம்: யேசுரட்ணம்

**O/L**

கணிதம்: V. T. இராஜேந்திரா, P. ஜெயக்குமார்
விஞ்ஞானம்: பஞ்சரட்ணம், பாபு மகேந்திரன்
ஆங்கிலம்: மகாலிங்கம், முத்துலிங்கம்
தமிழ்: சரவணன், சிவதாஸ்
சமூகக் கல்வி: மஃறூப்
சுகாதாரம்: ஸ்ரீ நாதன்

6ம், 7ம், 8ம், 9ம் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

# நொதேண் பெஸ்ட் இன்ஸ்ரிரியூட்

(சென் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

408, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSAL
LIBRARY SERVICE

# விளம்பரம்

செல்வி. K. சுபாங்கி 11 C

ஒரு பொருள் அல்லது சேவை சம்பந்தமாக அப்பொருளின் உபயோகம் அதனைப் பாவிக்கும் முறை, விலை, என்பவை தொடர்பான தகவல்களை நுகர்வோருக்குத் தெரியப்படுத்தும் ஒருவகை முறையே விளம்பரம் ஆகும். இவ் விளம்பரம் பின்வரும் சந்தர்ப்பங்களில் முக்கியமாகச் செய்யப்படுகிறது

1. புதிதாக ஒரு பொருளையோ அல்லது ஒரு சேவையையோ சந்தையில் அறிமுகப்படுத்தும் போதும்.

2. ஏற்கனவே சந்தைப்படுத்தப்பட்ட பொருட்களுக்கோ அல்லது சேவைக்கோ கேள்வியானது சந்தையில் குறைவடைகிறது என நிறுவனம் அறியும்போதும் அல்லது விற்பனை மட்டத்தினை அதிகரிக்க எண்ணும்போதும்.

3. குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு அல்லது சேவைக்குப் போட்டியாக புதியபொருள் அறிமுகப்படுத்தப்படும்போது விளம்பரம் முக்கியமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கைத்தொழில் புரட்சிக்கு முன் உற்பத்திகள் அனைத்தும் சிறிய அளவிலேயே நடைபெற்று வந்தன. இதனால் உற்பத்தியாளனும் நுகர்வோனும் நேரடியாகவே தொடர்புகொள்ள முடிந்தது. ஆனால் கைத்தொழில் புரட்சியின் பின் உற்பத்திகள் யாவும் பாரியமுறையில் நடைபெற ஆரம்பித்தன. இந்நிலையில் இப் பொருட்கள் அனைத்தும் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பொருட்கள் யாவும் வெளிநாட்டுச் சந்தைக்கு அனுப்பப்பட்டன. இதனால் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் இடையில் இருந்த நேரடித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதன் காரணமாக உற்பத்தியாளன் தனது உற்பத்திப்பொருட்களை நுகர்வோருக்கு அறியப்படுத்தும் வகையில் விளம்பரத்தில் கூடிய நாட்டம் காட்டினான், எனவேதான் கைத்தொழில் புரட்சியின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

விளம்பரத்தில் பல நன்மைகள் காணப்படடன.

1. ஒவ்வொரு நிறுவனத்தினதும் உற்பத்திப் பொருட்களின் சந்தை வாய்ப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன.

2. நிறுவனங்களின் விற்பனை மட்டம் அதிகரிப்பதனால் அவற்றின் உற்பத்தி அதிகரித்து உற்பத்திச் செலவு குறைவடைய அதன் காரணமாகப் பொருளின் விலை குறைவடையும்.

3. புதிய பொருள் அல்லது சேவை உற்பத்தி ஆக்கப் பொருட்களைப்பற்றி அறிந்து கொள்ளலாம்.

4. தகுதியான பதவிகளில் தகுதிமிக்கோர்களைத் தெரிவுசெய்ய விளம்பரம் பேருதவி புரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSAL LIBRARY

5. மக்கள் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி போன்றவற்றை மக்கள் மலிவான விலையில் பயன்படுத்த இவ் விளம்பரம் உதவும்.

இவ்வாறு பல நன்மைகள் காணப்பட்ட போதும் ஒரு சில தீமைகளும் காணப்பட்டன.

1. விளம்பரச் செலவு ஏற்படுவதனுல் பொருட்களது ஆக்கவிலை அதிகரித்துள்ளது

2. நுகர்வோரது வாழ்க்கைத்தரம் உயர்வதனுல் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கிறது

3. நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்யும் சக்தியை இழக்கின்றூர்கள்.

4. மக்கள் போலிப் பொருட்களையே பாவிக்கக்கூடிய நிலை ஏற்படும்.

இந்த விளம்பரத்தின் பொருட்டு செய்யப்படும் செலவு பொருளின் விலையினை பாதிக்கின்றது என்று கூறப்படுகின்றது. விளம்பரம் செய்யும்போது ஏற்படும் செலவானது பொருளின் விலையை உயர்த்துவது என ஒருசாராரும் விளம்பரச் செலவானது பொருளின் விலையை உயர்த்தாது என இன்னொரு சாராரும் வாதிக்கின்றனர். இவ் விளம்பரச் செலவானது பொருளின் நெகிழ்ச்சியில் தங்கியுள்ளது. விளம்பரம் செய்யும்போது விற்பனை மட்டம் அதிகரிக்கும். ஆனுல் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உற்பத்திச் செலவு குறைகின்றபோது அதன் விளைவாக விலை அதிகரிக்கப்படமாட்டாது. விளம்பரம் செய்யும்போது விற்பனைமட்டம் அதிகரிக்க முடியவில்லை எனின் இவ் விளம்பரச் செலவானது பொருளின் விலையில் சேர்க்கப்படுவதினுல் விலை உயர்கின்றது. எனவே விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது நிறுவனங்கள் பொருளின் நெகிழ்ச்சி பற்றி நன்கு அறிந்துகொள்ளல் வேண்டும்.

தற்காலத்தில் விளம்பரம் ஒரு வீண் செலவு என சிலரால் எடுத்துச் சொல்லப்படுகின்ற போதிலும் நாம் அதனை வீண் செலவு எனச் சொல்லிவிடமுடியாது. ஒரு ஒரு தரமற்ற போலிப்பொருட்களின்மீது செய்யப்படும் விளம்பரங்கள் வீண் செலவாக அதாவது பொருட்களது ஆக்கச் செலவினைக் கூட்டி விற்பனை விலையைக் கூட்டுவதாக இருக்கமுடியும். ஆனுலும் தரமான உண்மைப் பொருட்களின் மீது செய்யப்படும் விளம்பரங்கள் ஒருபோதும் வீண்செலவாகப் போவதில்லை. அதனுல்தான் தற்கால உலகில் விளம்பரம் என்பது மிகமுக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. ஆகவே விளம்பரம் ஒரு வீண் செலவு அல்ல என்பதற்கு நாம் மூன்று காரணங்களை முன் வைக்க முடியும்.

அ) விளம்பரம் விற்பனையை அதிகரித்து உற்பத்தியை உயர்த்துவதனுல் ஓர் அலகுக்கான ஆக்கச்செலவினைக் குறைத்துக்கொள்ள உதவுகிறது. அதாவது உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆக்கச் சிக்கனங்களை கடைப்பிடிக்க உதவுவதனுல் அது பொருட்களின் ஆக்கச்செலவினை உயர்த்துவதில்லை எனவும் பதிலாகக் குறைப்பதற்கே உதவுவது எனக் கூறிக்கொள்ளமுடியும்.

ஆ) ஆக்கச்செலவில் ஏற்பட்ட குறைவு விற்பனை விலையினைக் குறைத்து நுகர்வோரது வாழ்க்கைச்செலவு குறைவடைய வழி வகுப்பதாகக் காணப்படுகின்றது. இவ் வாழ்க்கைச்செலவில் ஏற்பட்ட குறைவு நுகர்வோரது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவுவதனுல் விளம்பரம் வீண்செலவு அல்ல என்பதை நிரூபிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) விளம்பரம் என்பது ஒரு வீண் செலவென்று கொள்ளாமல் பதிலாக நன்மதிப்பு என்ற அருவச்சொத்தின் மீது செய்யப்படுகின்ற முதலீடு என்று நாம் கூறிக் கொள்ளமுடியும். விளம்பரத்தின் மூலம் பொருளுக்கும் குறிப்பிட்ட வியாபார நிறுவனத்திற்கும் மக்களிடையே ஏற்படும் பெருமதிப்பு, நன்மதிப்பு எங்கின்ற உருவம் இல்லாத அதேநேரம் பெறுமானம் உடைய சொத்துக்களை உருவாக்கிறது எனலாம்,

இத்தனையும் நடைமுறைப்படுத்தும் ஒரு விளம்பர முகாமையாளர் அவதானிக்க வேண்டிய அம்சங்கள்;-

விளம்பர முகாமையாளர் தனது நிறுவனத்தின் சார்பில் விளம்பரம் செய்வதற்கு முன்னர் அவர் அவதானிக்கவேண்டிய அம்சங்கள்

1. நுகர்வோரின் இயல்பு:

பல்வேறுபட்ட தரப்பட்ட நுகர்வோர் காணப்படுகின்றார்கள். சில நுகர்வோர் கல்வி அறிவுள்ளவர்களாகவும் சிலர் கல்வி அறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இவ்வகையான நுகர்வோரது இயல்பை நன்கு அவதானித்தே நுகர்வோரின் தன்மைக்கேற்றவாறு விளம்பர சாதனங்கள் தெரிவுசெய்யப்படவேண்டும்.

2. பொருட்களின் தன்மை:-

விளம்பர சாதனத்தைத் தெரிவுசெய்யும் முன்னர் பொருளின் தன்மையையும் நுகர்வோர் அறிதல் வேண்டும். எனவே அதற்கேற்றவாறு விளம்பர சாதனங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

3. விளம்பரத்திற்கான செலவு:-

விளம்பரச் செலவானது பொருட்களின் விலையை அதிகரிக்கும் என்பதனால் குறைந்தளவு செலவில் விளம்பரம் செய்தல்வேண்டும், உதாரணமாக வானொலிமூலம் விளம்பரம் செய்கின்றபோது அவ் வானொலி விளம்பரத்திற்கெனப் பெருந்தொகையான செலவு செய்யப்படுகின்ற போதும் அவ் விளம்பரமானது ஒரே நேரத்தில் பலரைச் சென்றடைகின்றதென்பதனால் ஒவ்வொரு நுகர்வோருக்குமாகச் சென்றடைகின்ற செலவு குறைவாகவே காணப்படுகின்றது.

4. விளம்பர சாதனத்தை தெரிவு செய்வதில் ஏற்படுகின்ற அனுபவம்:

விளம்பர சாதனங்களாக பல சாதனங்கள் காணப்படுகின்ற போதும் ஒவ்வொரு வியாபாரிகளும் தமது பொருட்களுக்கான அல்லது சேவைக்கான விளம்பர சாதனத்தை தெரிவு செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக காணப்படுகின்றார்கள்.

5. விளம்பர சாதனங்கள்:

ஒரு பொருளை அல்லது சேவையை விளம்பரம் செய்கின்ற போது பின்வரும் சாதனங்களுடாக செய்யக்கூடியதாக இருக்கின்றது. இவையே விளம்பர சாதனங்கள் எனப்படுகின்றது.



UNIVERSAL LIBRARY SERVICE
KANTHARMADAM - JAFFNA
Acc. No.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பர சாதனங்களாவன:

1) துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள்
2) பத்திரிகைகள், சஞ்சிகைகள்
3) வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்
4) மின்சார அலங்காரங்கள், காட்சியறைகள்
5) கண்காட்சிகளும், பொருட்காட்சிகளும்
6) பாவனைக்கு வழங்குவதன் மூலம்,

இவ்வாறு பலவழிகளில் விளம்பர செயல்முறையை நடைமுறைப்படுத்தி தற்கால வர்த்தக உலகில் விளம்பரம் தன் அதியுன்னத சேவையை அளிக்கின்றது என்றால் மிகையாகாது.

* * *


வணிகத்தின் மணம் பரப்பி, மங்களகரமாக வணிகஜோதி
தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றோம்

# J. E. C.

( THE JAFFNA ENGINEERING COLLEGE )

J. E. C., 33, Point Pedro Road, JAFFNA.

(யாழ். நகரில் பல்வேறுதுறை வகுப்புக்களையும் கொண்ட ஒரே ஒரு நிறுவனம்)

- G. C. E. O/L & A/L (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்)
- G. A. Q., B. A., L. L. B.
- C. E. I. LONDON (Engineering)
- CITY & GUILDS
- MOTOR MECHANISM
- ELECTRIC WIRING., WELDING
- SPOKEN ENGLISH
- FRENCH

Director: K. S. Muthulinkam




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான சுவையான

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ குளிர்பானங்கள்
★ சிற்றுண்டி வகைகள்
★ சொக்லெட் கிறிப்ஸ்
★ ராஜா பீடா
★ ஐஸ்பழம்
★ ஐஸ்சொக்
★ ஐஸ்ஜொலி ஸ்பெஷல்
★ ஸ்ரோபறி கிறீம்

மற்றும்

விழாக்கள், களியாட்டங்கள் அனைத்துக்கும் தேவையான
வற்றை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

# ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 23430

வணிகஜோதி தொடர்ந்தும் மணம் பரப்ப
எமது நல்லாசிகள்

சிறந்த மரக்கடைச்சல் வேலைகளுக்கு

# றஞ்சி கலைக்கூடம்
## RANJI KALAI KODHAM

87, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: வவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தேவையான

- உணவுப் பொருள்கள்
- குளிர்பானங்கள்
- புடவைகள்
- மின்சார உபகரணங்கள்
- மருந்துவகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்
- பாத அணிகள்
- துவிச்சக்கரம் மற்றும் உதிரிப் பாகங்கள்

மற்றும் பலவும் நிதான விலையில் பெற்றுக் கொள்ள
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

150, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

☎:- 22438, 22537 & 22370 - யாழ்.

# ஸ்ரீதரன் மரக்காலை

# SRITHARAN TIMBER DEPOT

கட்டிடங்களுக்குரிய மரங்கள், கதவு யன்னல்,
தளபாடங்கள் முதலியன சகாய விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்: N. ஸ்ரீதரன்

438, Hospital Road,
Jaffna.

438, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுத் தத்துவங்கள்

செல்வி. ப. இராகினி 10 B

மக்கள் ஒன்று சேர்ந்து கூட்டு முயற்சிகளில் ஈடுபடுதல் என்ற பொருளில் கூட்டுறவு தொன்மை வாய்ந்தது. இது சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படையாகும். கூட்டுறவு என்ற சொல்லைப் பலர் பலவாறாக விளக்கிக் கூறியுள்ளனர். வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு சூழ்நிலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றியதால் அவ்வவ் நிலமைகளுக்கேற்ப பலவகையான இலக்கணங்கள் எழுந்துள்ளன. கூட்டுறவு ஒரு கோட்பாடாக முதலில் வகுக்கப் பெற்றுப் பின்னர் நடைமுறையில் செயற்படுத்தப் படவில்லை. எனவே, இதற்குத் தெளிவான இலக்கணம் கூறுவது எளிதன்று. சில இலக்கணங்களை ஆராய்ந்தால் இச் சிக்கல்கள் தெளிவாகும்.

ஒரு தொழில் முயற்சிக்குச் சம்பந்தப்பட்டவர்கள் சம ஈடுபாடு, கட்டுப்பாட்டுரிமை ஆகியவைகளின் அடிப்படையில் தாமே ஒன்று சேர்தல் கூட்டுறவு என்று ஷால்பேக் என்பவர் விளக்கியுள்ளார்.

மக்கள் தம் ஆற்றல்கள் வளங்கள் இவைகளை ஒன்று சேர்த்து பொது இலாப நட்டத்துக்காகக் கூட்டாக தாமே விரும்பிச் சேர்தல் கூட்டுறவு என்று ஹெரிக் என்பவர் கூறியுள்ளார்,

பே என்பவர் கூட்டுறவுச் சங்கம் கூட்டு வாணிகத்திற்காக எளியவர்களிடையே தோன்றும் சங்கம், பொதுநல உணர்வுடன் நடத்தப்படுவது, உறுப்பினர்கள் தாம் சங்கத்தைப் பயன்படுத்திய விகிதப்படி அதன் பயன்களை பகிர்ந்து கொள்வர், என்று விளக்கியுள்ளார்.

சுவிட்சர்லாந்து விளக்கம் வருமாறு "கூட்டுறவுச் சங்கம் என்பது கூட்டு முயற்சியின் மூலம் தம் உறுப்பினரின் பொருளாதார முன்னேற்றத்தை நாடும் நோக்குடன் பலர் ஒன்றுகச் சேர்ந்து அமைக்கும் சங்கமாகும்."

இவ்வாறு கூட்டுறவுக்குப் பலவாறாக இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. பொதுவாக இவ் விளக்கங்கள் கூட்டுறவுச் சங்கத்தின் உண்மையான முழு இயல்பைத் தெளிவாகக் காட்டவில்லை. எனினும், கூட்டுறவின் சில இயல்புகளைப் புலப்படுத்துகின்றன. இக் கருத்துக்களையும் இராச்டேல் முன்னோடிகள் தம் கூட்டுறவுச் சங்கத்தில் கையாண்ட தத்துவங்களையும் திரட்டிக் கூட்டுறவுக்குத் தெளிவான இலக்கணம் ஒன்று வரைய முற்படுவோமாக.

கூட்டுறவு என்பது மக்கள் தாம் உற்பத்தியாளர் அல்லது நுகர்வோர் என்ற முறையில் தம் பொது நலனைப் பேணுவதற்காகச் சமத்துவம், சமதர்மம், அன்னியோன்னியம் ஆகியவைகளின் அடிப்படையில் தாமே விரும்பி ஒன்று சேர்ந்து அமைக்கும் ஜனநாயகச் சங்கமாகும்.

இங்கிலாந்தில் தொழில் புரட்சியின் விளைவாக தொழிற்சாலை முறை தோன்றியது. முதல் படைத்தவர்கள் தொழிற்சாலைகளை நிறுவித் தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்தி பண்டங்களை உற்பத்தி செய்து வாணிகம் செய்தனர். இலாப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கல் தூண்டப் பெற்று இவர்கள் தொழிலாளர்களைச் சுரண்டினர்; மிகுந்த வேலைக்குக் குறைந்த கூலி கொடுத்தனர். தொழிலாளர்களை வியாபாரிகளும் சுரண்டினர். தரம் குறைந்த பொருட்களை அதிக விலைக்கு விற்றனர். தொழிலாளர்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கும் வறுமைக்கும் ஆளாக்கின்றது. முதலாளிகளாலும் வாணிகர்களாலும் சுரண்டப்படுவதிலிருந்து விடுதலை பெறத் துடித்தனர். ஒன்று சேர்ந்து கூட்டு முயற்சிகளில் ஈடுபடலாயினர். ராபர்டு ஓவன், டாக்டர் கிங் போன்ற சமூகச் சீர்திருத்த வாதிகள் கூட்டுறவுக் கருத்தை பரப்பி வந்தனர். சிறிய பண்டகசாலைகள் நிறுவப் பட்டன. இவை தம் உறுப்பினர்களுக்கு கொள்விலையில் பண்டங்களை விற்றன. ஆனால் இத்தகைய முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இறுதியாக 1844 இல் இராச்டேல் என்ற இடத்தில் 28 தொழிலாளர்கள் வெற்றிகரமான முதல் கூட்டுறவுப் பண்டகசாலையை நிறுவினர்; இதுவே வெற்றிகரமான முதல் கூட்டுறவுச் சங்கமாகும். ஒருவருக்கு ஒரு வாக்கு, சந்தை விலைக்கு விற்பனை செய்தல், இலாபத்தை கொள் முதல் விகிதப்படி பகிர்ந்து கொள்வது முதலிய கொள்கைகளை ஒன்றாகக் கையாண்டது இவர்களுடைய வெற்றிக்கு காரணமாகும். அடுத்த சில ஆண்டுகளில் ஜெர்மனியில் கூட்டுறவு நாணய இயக்கம் தோன்றியது. 1850 ல் பெலிட்ஜ் என்ற நகரத்தைச் சேர்ந்த ஹர்சூல்ஷ் என்பவர் முதல் நகரக் கூட்டுறவு வங்கியையும், 1862 இல் ரெய்பீசன் என்பவர் முதல் கிராம கூட்டுறவு நாணய சங்கத்தையும் நிறுவினர். இதன் பின்னர்க் கூட்டுறவு இயக்கம் வேறுபல நாடுகளில் தோன்றியது. மக்களின் தேவைகளுக்கேற்பப் பல்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றலாயின.

கூட்டுறவின் தத்துவங்கள்:

1) உறுப்பினர்கள் தடையின்றித் தாமே விரும்பிச் சேர்தல்
2) ஜனநாயக நிர்வாகம்
3) முதலுக்குக் குறிப்பிட்ட வட்டி வழங்குதல்
4) சமதர்ம இலாபப் பகிர்வு அல்லது ஆதரவு இலாபம்
5) கூட்டுறவுக் கல்வியை வளர்த்தல்
6) கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு

1. உறுப்பினர் சேர்தல்:

கூட்டுறவுச் சங்கத்தில் அதனால் பயன் பெறக்கூடிய எவரும் உறுப்பினராகச் சேரலாம். எத்தகைய வலுக்கட்டாயமுமின்றித் தாமே விரும்பிச் சேரலாம். உறுப்பினர் சாதி, சமய பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி சமத்துவமாக ஒன்று சேர்தல்

2. ஜனநாயகக் கட்டுப் பாடு!

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு சமவாக்குரிமை உண்டு. ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற கொள்கைப்படி உறுப்பினர் வாக்களித்து முடிவுகளைச் செய்வர். இச் சமவாக்குரிமை சொந்த உரிமை, இதற்கும் உறுப்பினர் செலுத்திய முதலுக்கும், உறுப்பினர் சங்கத்துடன் செய்யும் வாணிகத்தின் அளவுக்கும் எத்தகைய தொடர்பும் இடையாது. உறுப்பினர்கள் செலுத்தும் பங்குத் தொகை வேறுபடும், உறுப்பினர் சங்கத்துடன் செய்யும் வாணிகத்தின் அளவு வேறுபடும். ஆனால் வாக்குரிமை வேறு படாது, ஒருவருக்கு ஒரு வாக்கே. ஒருவர் முதல் மூலம் சங்கத்தைக் கட்டுப்படுத்துவதை இது நீக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற விதி பொறுப்புப் பகிர்வு, பெரும் பான்மை வாக்குவிதி ஆகியவை ஜனநாயகக் கட்டுப்பாட்டின் இயல்பாகும். சங்கம் என்றும் உறுப்பு வகிக்கும் வாடிக்கையாளர் கட்டுப்பாட்டிலேயே இருக்க வைப்பதும், என்றும் அதை அவர்களின் சேவைக்காக அர்ப்பணிக்க வைப்பதும் ஜன நாயகக் கட்டுப்பாட்டின் நோக்கமாகும்.

3. முதலுக்கு வட்டி:

முதலுக்கு வட்டி கொடுக்கவேண்டும் என்பது கட்டாயமன்று, கட்டாய மாக வட்டி செலுத்தவேண்டும் என்ற கூட்டுறவுத் தத்துவம் எதுவும் கிடையாது. முதலின் பேரில் வட்டி செலுத்துவதாக இருந்தால் வட்டிவீதம் குறிப்பிட்ட அளவினதாக இருக்கவேண்டும் என்பது தத்துவமாகும். ஆனால் முதலானது ஊழியனாக விளங்கவேண்டுமேயல்லாமல் ஆள்பவனாக இருக்கக்கூடாது. முதலாளித்துவ நிறுவனத்தில் அதிகாரமும் இலாபப் பகிர்வும் முதல் விகிதத்தின்படி பகிர்ந்தளிக்கப் படும். எனவே முதல் அதிகாரத்துக்கும் இலாபத்திற்கும் தோற்றுவாயாக விளங்கும்.

4. இலாபப்பகிர்வு:

உபரித் தொகையிலிருந்து வாடிக்கையாளருக்கு இலாபப்பகிர்வு வழங்கியாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உறுப்பினர் விரும்பினால் உபரித் தொகையைப் பொதுச்சேவைக்காகவோ சங்கத்தின் வளர்ச்சிக்கோ பயன் படுத்திக் கொள்ளலாம். ஆனால் உபரித் தொகையைத் தம்மிடையே பகிர்ந்து கொள்ள உறுப்பினர் விரும் பினால் அவரவருடைய வாடிக்கையின் (ஆதரவின்) அளவிற்கேற்பவே அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

5. கூட்டுறவுக் கல்வி:

கூட்டுறவுக் கல்வி கூட்டுறவுக்கு அடிப்படையாகும். இது கூட்டுறவின் பிற தத் துவங்களை முறையாகக் கடைப்பிடிக்க அடிகோலும். கூட்டுறவு இயக்கமானது உறுப் பினர்கள், இயக்குநர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் ஆகிய நான்கு வகையினருக் கும் கூட்டுறவுக் கல்வியை அளிக்கவேண்டும். இதற்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் உபரித் தொகையிலிருந்து குறிப்பிட்ட நூற்றுவீதத்தைக் கல்வி நிதிக்காக ஒதுக்கவேண்டும்.

6. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு:

மனிதர்களுக்குச் சுதந்திரம் இருக்கின்றது ஆனால் திறமையான நிருவாகத்தை முன்னிட்டு மிகப்பெரிய அமைப்புக்களில் இணைக்கப்படுகின்றனர். அவைகளில் தனி மனிதனுக்கு வெகு தொலைவிலே முடிவுகள் செய்யப்படுகின்றன. அவனுடைய விருப் பங்களைக் கவனிப்பாரில்லை. இத்தகைய போக்கு நீடித்தால் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவைகள் பொருளற்றுப் போய்விடும். கூட்டுறவு முறை இப்போக்கினை மாற்றும். மனிதனை மனிதனாகப் போற்றும் கூட்டுறவு பரவலான உடைமை, ஜனநாயகக் கட் டுப்பாடு ஆகியவைகளின் மூலம் தனிமனிதனின் சிறப்பையும் சுதந்திரத்தையும் நிலை நாட்டும். ஆனால் இதை வெறும் சுலோகத்தால் அடையமுடியாது. கூட்டுறவுச் சங் கங்கள் ஒன்றிணைந்து முயற்சிகளில் ஈடுபட்டால் தான் இதை அடையமுடியும். கூட் டுறவுச் சங்கங்கள் ஒன்றுடன் ஒன்று உறவுகொண்டு ஒன்றிணைந்த இயக்கமாக இணைந்து செயல்படத்தூண்டும் பெரிய தனி நிறுவனங்கள், ஏக உரிமை நிறுவனங் கள் ஆகியவைகளின் கடும் போட்டியை எதிர்த்து நிற்கவேண்டும் என்றால் கூட்டுற வுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு வளர்ந்தாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

மலிவாகப் பெற்றுக்கொள்ளச் சிறந்த தாபனம்

* * *

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்

140, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தி,

யாழ்ப்பாணம்.

With the Best Compliments from

LATEST TAILORING

&

READYMADE STORES

113, Power House Road, JAFFNA.

&

CEY TEX

24 B, Model Market, JAFFNA.

☎ 24287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடில்லா வாணிபமும் கட்டுப்பாடுள்ள வாணிபமும்

செல்வி கா. சந்திரகுமாரி 9 B

எந்த அரசும் நாட்டிடை வியாபாரத்தில் சுங்கத்தீர்வை, இறக்குமதி தடைகள், கட்டுப்பாடுகள் முதலியவற்றை வையாது, முயற்சியாளர் தம் வசதிக்கும் நன்மைக்கும் ஏற்றவாறுமுயற்சியில் ஈடுபடுவதே கட்டுப்பாடில்லா வாணிபமாகும், இதனாலன்றோ ஆடம் ஸ்மித் தமது நூலில் ஒருநாடு தன்னைவிட மலிவாக உற்பத்தி செய்கின்ற ஒரு பண்டத்தினை வெளிநாடொன்று தனக்கு அளித்திடுமாயின் அதனை விலைக்கு வாங்கி, அதற்கு ஈடாக தான் அனுகூலமாக உற்பத்தி செய்திடும் பண்டத்தை அந் நாட்டிற்கு விற்றிடலாம் என விளக்கியுள்ளார்.

வெளிநாட்டுப் பண்டங்களை வேற்றுமைப் படுத்தி, சுங்கவரி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், தடைகள் என்பவற்றை விதிப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தங்கள் பண்டங்களை உள்நாட்டுச் சந்தையிலே வெளிநாட்டாரின் போட்டியின்றிச் சாதகமான முறையில் விற்பதுவே கட்டுப்பாடுள்ள வாணிபமாகும்.

கட்டுப்பாடுள்ள வாணிபத்தில் சுங்க வரிகள், கோட்டாக்கள். இறக்குமதிக்குரிய வாணிப இணக்க ஆணை, இறக்குமதித் தடைகள், நாணய மாற்றுக் கட்டுப்பாடு வாங்குதலில் அரசின் விருப்பத் தேர்வு, உள்நாட்டு உற்பத்தியாளருக்கு உதவிக் கொடைகள், விலை வேறு படுத்தல், பண்டங்களை விற்பதில் உடன்பாடு காணல், அரசு வாணிப மேற்றல் ஆகிய பல்வேறு கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

எல்லா நாடுகளும். உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் ஒரே மாதிரியாக வைத்திருக்கவில்லை. ஒரு நாட்டில் உற்பத்தியாவது மற்றைய நாட்டில் கிடைப்பதில்லை. ஆகையால் கூடிய உற்பத்தி செய்யும் நாட்டில் இருந்து குறைந்த செலவில் பண்டத்தைப் பெற்றுக் கட்டுப்பாடில்லா வாணிபம் செய்வோமானால் எல்லா நாடுகளும் மெய் வருமானத்தால் உயரலாம்.

கட்டுப்பாடில்லா வாணிபம் ஆக்கம் பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆற்றல் படைத்தது? வெளி நாட்டுப் போட்டியின் மோதுதலின் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள், உற்பத்தி முறைகளை மேலும் செப்பனிடவும், புதுப்பிக்கவும், புதுமைகளை ஏற்றுக்கொள்ளவும் துணிந்து முன்வருகிறார்கள். வெளிநாட்டு உற்பத்தியாளருக்கு இணையாகத்திறமை பெற முனைகின்றனர். போட்டியின் அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடில்லா வாணிபம் சர்வாதீனவளர்ச்சிக்கு இடமளிக்காது. கட்டுப்பாடுள்ள வாணிபச் சூழ்நிலையில், சுங்கச் சுவர்கள் எழுப்பப்பட்ட சிறிய நாடுகளில் தொழில்களெல்லாம் உற்பத்தியில் உத்தம அளவினை அடைய மாட்டா. கட்டுப்பாடில்லா வாணிபம் போட்டியைக் காத்துச் சந்தையினை விரிவாக்கிப், பெருமளவு உற்பத்தியினைத் தூண்டி, சிக்கனத்தை உருவாக்கிக், குறைந்த பட்சம் செலவினைக் கொண்ட உத்தம உற்பத்தியாளனை நடைமுறைப் படுத்துகிறது. கட்டுப்பாடில்லா வாணிபத்தில் போட்டியின் காரணமாக விலைகள் குறைந்து விடுவதோடுமட்டுமல்லாமல் உற்பத்திக் காரணிகளும் மிகுதியான வருமானம் தேடி வேறு பகுதிகளுக்குப் பெயர்ந்து செல்லும் திறமை வாய்ந்த பொருளாதார போக்கிற்கும், நடவடிக்கைகளுக்கும் கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப் பாடில்லா வாணிபமே ஆதாரமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது பின் தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படுகின்ற மூலதனப் பெயர்ச்சியானது கட்டுப் பாடில்லா வாணிபத்தில் மிகவும் எளிதாக நடைபெறுகிறது. ஏனெனில், கட்டுப்பாடில்லா வாணிபத்தில் பன்னாட்டுரீதியாகக் கடனளித்தலும் கடன்பெறுதலும் எளிதாக நடைபெறமுடியும் என்பதே. இன்னும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு தேவைப்படும் தொழில் நுண்ணறிவினை வளர்ச்சியுற்ற நாடுகளிலிருந்து உடனுக்குடன் எளிதாகப் பெறுவதற்குக் கட்டுப்பாடில்லா வாணிபம் வழிவகுக்கிறது.

கட்டுப்பாடில்லா வாணிபம் உத்தம நிலையை அடைவதற்கு சில நிபந்தனைகள் உண்டு. அவையாவன, எல்லாச் சந்தைகளிலும் போட்டி நிலவ வேண்டும். மூல வளங்கள் அனைத்தும் பயன் படுத்தப் பெற்று வேலை நிறைவு நிலவ வேண்டும். பண்டங்களின் விலைகள் இறுதிநிலைச் செலவுகளுக்குச் சமமாக இருத்தல் வேண்டும். தேவையின் மாற்றங்களுக்கேற்ப உற்பத்திச் சாதனங்களில் ஏற்படும் மாற்றங்களின் தற்காலிக விளைவுகளை இங்கு நாம் கருத்திற் கொள்வதில்லை. நிறைவில் போட்டியின் விளைவுகளின் காரணமாக திறமையின் உத்தம நிலைக்குக் குந்தகம் ஏற்படுகிறது. திறமைக் குறைவுடன் இயங்கும் விலையமைப்பு கட்டுப்பாடில்லா வாணிபத்தில் குறைகள் மலிந்திடக் காரணமாகி விடுகிறது.

கட்டுப்பாட்டு வாணிபம் எந்த வகையைச் சார்ந்ததாக இருப்பினும் அதன் விளைவுகள் ஏறத்தாழ ஒரே மாதிரியானவையே. கட்டுப்பாடில்லா வாணிபம் இரு சாராருக்கும் சாதகமாக இருப்பது போல கட்டுப்பாட்டு வாணிபம் இல்லை. திறமை மிக்க வெளிநாட்டு உற்பத்தியாளர்களுடைய போட்டிக்குத் தடையாகக் கட்டுப்பாட்டு வாணிபம் அமைந்து விடுவதால், திறமை குறைந்த உள்நாட்டு உற்பத்தியாளருக்கு வாய்ப்பு கிட்டுகிறது. திறமையின்மையைப் பாதுகாத்து வளர்ப்பதே கட்டுப்பாட்டு வாணிபம் தான். கட்டுப்பாடில்லா வாணிபத்தில் போட்டி நிலவுவதால் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பண்டங்களின் தரத்தை உயர்த்தவும், உற்பத்திச் செலவினைக் குறைத்திடவும் முன்வருகின்றனர். போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் இக் காரியங்களை அவர்கள் செய்கின்றனர். ஆனால் கட்டுப்பாட்டு வாணிபம் இப் போட்டியைத் தடுத்து விடுவதால் உற்பத்தியில் புதிய முறைகள் தோன்றுவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது.

கட்டுப்பாட்டு வாணிபத்தை விட கட்டுப்பாடில்லா வாணிபம் பல நாடுகளுடன் தொடர்புற்று பல பண்டங்களை நுகரும் வாய்ப்பை ஏற்படுத்துவதனால் இது சிறந்ததாக விளங்குகிறது.

* * *

"பணம், பொருட்கள் கைமாறுவதற்குரிய சாதாரண கருவியாக இருப்பதற்குப் பதில் இந்த வடிவ மாற்றமே இறுதி லட்சியம் ஆகிவிடுகிறது. பணம் சேமிப்பாக இறுகிவிடுகிறது."

— கார்ல் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிகஜோதி"க்கு எமது மனமார்ந்த
வாழ்த்துக்கள்

# சிவஞானம் ஸ்டோர்ஸ்

இல. 221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் குழந்தைகளின்
மழலைச் சிரிப்பை என்றும்
கண்டு மகிழ

# 'செல்லம்ஸ்'

94 - 96, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 22436

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகஜோதியின் தொண்டு தொடர, சேவை மலர
வாழ்த்துகிறோம்

கணாஸ் அக்கடெமி
**GANAS ACADEMY**
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

6ம் வகுப்பு முதல் A/L (விஞ்ஞானம், வர்த்தகம், கலை)
வகுப்பு வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

&

சயன்ஸ் அக்கடமி
**SCIENCE ACADEMY**
310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

★ ★ காலை மாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன ★ ★

"வணிகஜோதி" மலருக்கு
எமது மலர் அஞ்சலிகள்

சுகி இன்டஸ்ரீஸ்
(தரமான அப்பியாசப் புத்தகங்களின் உற்பத்தி நிறுவனம்)

அரசடி லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியல் விமர்சனங்களின் ஓர் நோக்கு

**Mr S. Puvanendirarajah,**
Asst. Lecturer, Dept, of Com. & Management Studies.
University of Jaffna,

மாணவர்கள் பெருமளவிற்குக் கணக்கியல் கோட்பாடுகளை மையமாக வைத்து நிதிக்கூற்றுக்களையும் அதனோடு இணைவான கணக்கியல் முறைகளையுமே தேர்ந்து கொள்வது வழக்கம். ஆனால் நவீன இன்றைய உலகம் கணக்கியலின் விமர்சனங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது. இதனால் ஒவ்வொரு மாணவனும் தாம் தயாரிக்கின்ற அல்லது சமர்ப்பிக்கின்ற கணக்கியல் கருத்துக்களை விமர்சனம் செய்து அதில் பொதிந்து கிடக்கின்ற உண்மையான விளக்கங்களைத் தேர்ந்துகொள்வதாலேயே ஒரு நிறுவனத்தின் நிலையையும்; அந் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களும் ஏனைய கணக்குகளும் எத்தகைய முக்கியத்துவம் உடையன என்பதும்; அவற்றின் சில குறுகிய இல விளக்கங்களுமே இக் கட்டுரையில் இடம்பெறுகின்றன,

கணக்கியல் விமர்சனப் பகுப்பாய்வின் சில முக்கிய நோக்குகள்!

1) நிதிக்கூற்றுக்களின் மொழிகளையும் அதன் உறுப்புக்களையும் விளக்கிக்கொள்ளல்
2) மற்றைய நிதிக்கூற்று இலக்கங்களின் தொடர்பைக் காட்டல்.
3) நிறுவனத்தின் நிகழ்வுக்கும் அதன் எதிர்பார்க்கைக்கும் இடையிலான இணைப்பு.
4) நீண்டகால ஒட்டத்தில் நிறுவனத்தின் இயக்கம் எத்தகைய பங்கும் தொடர்பும்
5) இலக்குகளினதும் முடிவுகளின் திருப்தியை நிலைநிறுத்துவதற்கு.
6) கழிவுகள் அனுமதிகளை (Allowance) செய்வதற்கு (Making deductions)
7) அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் முகாமைத் தீர்மானத்திற்கும்
8) நிதியின் ஓட்டப்பாச்சல்களையும் சொத்துக்களின் இணைப்பினை உருவாக்கவும்

கணக்கியல் பகுப்பாய்வின் முக்கியத்துவம் இலங்கையைப் பொறுத்தமட்டில் 1978 ம் ஆண்டின் பின்பே முக்கிய இடம்பெற்றன. காரணம் அரசின் தாராள வர்த்தகக்கொள்கை நாட்டின் வியாபாரத் தொழில் துறைகளில் கம்பனிகளின் முக்கியத்துவத்தை அதிகரித்து இருந்தன. அத்துடன் 1982 ம் ஆண்டு 17 ம் இலக்க கம்பனிச் சட்ட உருவாக்கமும் நாட்டின் பல்வேறுவிதமான கம்பனிகளின் ஸ்தாபிப்பையும் விஸ்தரிப்பையும் அதிகரித்துள்ளன. அத்துடன் வங்கிகளின் நிதி முதலீட்டுத் திட்டமும் கணக்கீட்டின் பகுப்பாய்வினை மேலும் மெருகூட்டியுள்ளன.

இத்தகைய பகுப்பாய்வினைப் பிரதானமாகக் கம்பனி ஒன்றில் வேண்டிக்கொள்பவர்கள்;

1) பங்குதாரர்கள்
2) இயக்குநர்கள்
3) தொகுதிக் கடன்காரர்கள்
4) வியாபாரக் கடன் கொடுத்தோர்
5) வங்கியாளர்கள்
6) உடமைக் கம்பனிக்காரர் அல்லது ஒன்று சேர்பவர் (Take over bidder)
7) சிறு கைத்தொழில் முதலீட்டாளர்கள்
8) ஊழியர்கள்
9) கம்பனிப் பதிவாளர்
10) உள்நாட்டு இறைவரி இலாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்கள்

# பகுப்பாய்வும் விமர்சித்தலும்

### அக்கறையுள்ளவர்கள்

**உடமையற்ற வெளியாளர்கள்**

- தொகுதிக் கடன்காரர்
- வியாபாரக்கடன் கொடுத்தோர்
- சேர்க்கையாளர்கள்
- முதலீட்டாளர்கள்
  - சிறிய முதலீட்டாளர்
  - பெரிய முதலீட்டாளர்
- வருமானவரி இலாகா
- போட்டியாளர்கள்
- தொழிற்சங்கம்
- நகர பத்திராதிபர்
- கம்பனி அறிக்கை சேவையாளர்
- கம்பனி பதிவாளர்
- வாடிக்கையாளர்கள்

**உள்வாரி உடமையாளர்களும் வேலையாளர்களும்**

- பங்குதாரர்கள்
  - சிறிய பங்குதாரர்கள்
  - பெரிய பங்குதாரர்கள்
  - இயக்குனர்கள்
- ஊழியர்கள்
- விசேட அக்கறை உடையவர்கள்
  1) கைத்தொழில் வர்த்தக நிதிக் கூட்டுத்தாபனம்
  2) தொழில் நுட்ப அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
  3) நம்பிக்கை நிதி அமைப்பு

**தகவல் மூலங்கள்**

- வெளியிடப்பட்ட ஐந்தொகை
- வெளியிடப்பட்ட இலாபநட்டக் க/கு
- தலைவர் கருத்துக்கள்
- கம்பனி பதிவாளர்
- பத்திரிகை கர்த்தாக்கள்
- கம்பனி அறிக்கை சேவை (Company Reporting Service)
- சரக்குமுதல் வருடாந்த புத்தகம்
- நாளேட்டு நிபுணர்
- விசாரணை முகவர்

**இயக்குனர்க்குரிய மேலதிக தகவல்கள்**

- இயக்குனர் இலாபநட்டக் க/கு ஐந்தொகை
- உள்வாரி புள்ளி விபரங்கள்
- விபரமான பேரேட்டுக் கணக்குகள்
- நீண்டகால குறுகியகால பாதீடுகள்

மேற்கூறிய பகுப்பாய்வினை வேண்டிய ஒவ்வொருவரும் கணக்கியல் கோட்பாடுகள் எத்தகைய விமர்சனங்களின் தேவைகளை கொண்டிருக்கின்றன என்பதை தனித்துவமாக நோக்கிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. தொகுதிக் கடன்காரர்கள்

1) தொகுதிக்கடன் வட்டியை கம்பனி சீராக செலுத்திக்கொள்ளுமா?

2) நீண்ட காலத்தில் கம்பனி தொகுதிக்கடனை மீளச் செலுத்தக் கூடியதாக இருக்குமா?

3) கம்பனிப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டால் நிதி சார்ந்த கஷ்டங்களை அனுபவிக்குமா?

உதாரணமாக;- அடமானச் சொத்துக்கள் போன்றவற்றை இவர்கள் சிந்திப்பர்.

## 2. வியாபாரக் கடன் கொடுத்தோர்

1) நடைமுறைச் சொத்து நடைமுறை பொறுப்புக்களை செலுத்தக் கூடியதாக இருக்குமா?

2) கடன்களை தீர்க்கக் கூடியதாக நடைமுறைச் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப் பட்டுள்ளனவா?

3) கம்பனி வீழ்ச்சியுறும் பொழுது முன்னுரிமை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக உண்டா?

4) உழைப்பு திறன்கள் எதிர்கால விஸ்தரிப்புக்கு சாத்தியம் உண்டா?

5) முகாமைக் கொள்கை எவ்வளவு தூரம் ஏற்கக் கூடியது.

6) தொடர்ச்சியான சுற்றுமுறையில் நிறுவனம் செயல் படுகிறதா?

7) கடன் கொள்முதல் விகிதாசாரம்

8) தொழிற்படுமுதல் தேவை திருப்தியானதா?

## 3. வங்கியாளர்கள்

1) என்ன நோக்கத்திற்கு கடன் தேவை

2) எவ்வளவு காலத்திற்கு கடன் தேவை

3) எவ்வாறு கடனை திருப்பிச் செலுத்தக் கூடியதாக இருக்கும்

4) கடந்தகால வருட சில இலாப நட்டங்கள் கொண்ட இணைப்பு இதன் மூலம் நிறுவனத்தின் போக்கை பகுப்பாய்வு செய்யலாமா?

5) கம்பனி வீழ்ச்சியுறும் வேளை கம்பனியின் நிலை என்ன அல்லது யார் இதற்கு பொறுப்பு கலைப்பின்போது

6) முகாமை சார்பாக வெளியிடக்கூடிய முகாமைத்துவ கொள்கைகளின் விமர்சனம் போன்ற விபரங்களையே எதிர்பார்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒன்று சேர்பவர் (Take Over Bidder)

1) பல ஐந்தொகைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டு ஒப்பீடு செய்யப்படுகிறது.
2) நிறுவனங்களின் நிதிபங்குலாபக் கொள்கைகள் பற்றிய விமர்சனம்
3) சரக்குமுதல்களின் சந்தைவிலைகளையும் வர்த்தகவிலைகளையும் ஒப்பிடுதல்
4) பெறுமதி கூடிய சொத்துக்கள் விற்பனை செய்தால் கிடைக்கக்கூடிய இலாபங்களை கருதுதல்,
5) பாவிக்கப்படாத அல்லது வளப்பிரயோகங்கள் அவற்றின் பொறுப்புத் தன்மைகள்.

5. முதலீட்டாளர்கள்

1) கடந்தகால இலாபப் போக்கு அவதானிப்பு
2) குறித்த தொழிலின் விஸ்தரிப்பு முன்னேற்றங்கள்
3) பிரேரிக்கப்பட்ட முதலீடுகளில் கிடைக்கக் கூடிய வருவாய்கள் வரக்கூடிய மாற்று முதலீட்டு வருமானங்கள் எவ்வாறு
4) எவ்வளவு முதலீட்டு பங்கு இலாபம் முதலீட்டுக்கு வழங்க முடியும் ஆகக் கூடிய பங்கு இலாப மட்டம் என்ன? மறுகம்பனிகளிடம் ஒன்றிணைப்பு செய்யக் கூடியதாக இருக்கிறதா?
5) இயக்குனர்களின் பணரீதியான கொள்கைகள் இவற்றையே பிரதானமாக முதலீட்டாளர்கள் அவதானித்துக் கொள்வர்.

6. பங்குதாரர்கள்

1) ஏனைய கம்பனிகளின் பங்குதாரர் நலன்களை ஒப்பீடு செய்தல்
2) கிடைக்கக்கூடிய உழைப்புக்கள் — இலாபம் — உபகாரம்
3) கூட்டறிக்கைகள், கட்டுப்பாடுகள், தொடர்புகள்
4) பங்கு இலாப உழைப்பு வீதம். விலை உழைப்பு வீதம்
5) ஒய்வு நிதி நட்ட ஈடுகளின் தன்மை போன்றவற்றை விமர்சனம் செய்வதற் காகவே சில முறைகள் பயன் படுத்தப்படுகின்றன.

7. ஊழியர்கள்

1) தொடர்ந்து வேலை பெறும் வாய்ப்பு வீதம்
2) இலாபப் பங்களிப்பு
3) அரசாங்கமும் கம்பனியும் ஊழியர்கள் மீது கொண்டுள்ள அக்கறை
4) சம்பள அதிகரிப்பு வீதம் போக்கு
5) தொழிலாளர் நலனேற்பு விடயங்கள் கம்பனி கணக்குகள் அவற்றைத் தெளிவுபடுத்துமா என்பதே ஊழியர்களின் அவாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இயக்குநர்கள்

1) ஆகக் கூடிய இலாபம் உழைக்கப்பட்டுள்ளதா?
2) நிரந்தர நிலையான நிதிநிலைமை காணப்படுகிறதா?
3) பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப ஈடுகொடுக்க முடியுமா?
4) எதிர்காலத்தில் உழைக்கக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றனவா?
5) புதிய கம்பனிகளும் போட்டியாளர்களின் நிலைமைகளுக்கேற்ப எமது தரவுகள் காணப்படுகின்றனவா?
6) தொடர்ந்தும் தாம் பங்குதாரர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நிலைத்திருக்க முடியுமா என்பவற்றையெல்லாம் இக் கணக்கியல் நிதிக்கூற்றுக்கள் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவற்றை விமர்சனம் செய்து கொள்கிறோம்,

கணக்கியல் விமர்சன முறைகள்:

1) கணக்கீட்டு விகிதாசார கோட்பாடுகள் Accounting Ratics
2) நிதிப்பாச்சல் கூற்று முறைகள் Fund Filow Statement
3) சமப்பாட்டு முனை ஆய்வு Break Even Analysis
4) இலாப தொகை வரைபடங்கள் Profit Volume Graph
5) உழைப்பு விளைவுகள் earning Perfomance
6) மூலதன அமைப்பும் இணைப்பும் Capital Structure and gearing
7) விற்பனை வருமானப் போக்குகள் Sales and income Trends
8) நிலையான வட்டிவீத அமைப்பும் Fixed Interest Charges and earnings

மேற்கூறிய விமர்சன முறைகளின் மூலம் ஒரு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை பகுப்பாய்வு செய்து அவற்றில் அக்கறையுள்ள உடமையாளர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப வெளியீடு செய்வதே இவற்றின் பிரதான நோக்கமாகும். ஒவ்வொரு அக்கறையுடைய கட்சியினரும் நிறுவனத்தில் என்ன கருத்தை அல்லது எவ்வாறு அதனை நோக்குகின்றனர். என்பதையே மேலேயுள்ள பகுதி தெளிவு படுத்தியிருக்கின்றது. எனவே அவர்களுக்கு ஏற்ற முறையில் எமது விமர்சன கருத்துக்களும் முறைகளும் அமைய வேண்டும்.

மேற்கூறிய கணக்கியல் விமர்சன முறையில் எல்லாவற்றையும் முழுமையாக இக் கட்டுரையில் தெளிவு படுத்த முடியாது. அதனால் எல்லா மாணவர்களும் பயன் பெறுவார்கள் என்பது கருத்தல்ல. இதனால் உயர்தர வகுப்பு மாணவர்கள் நலன் கருதி ஒரு பகுதியை மட்டும் தெளிவு படுத்துவோம். இதற்காக மாணவர்கள் ஏதாவது ஒரு கம்பனியின் ஐந்தொகை இலாப நட்ட கணக்கினை ஆதாரமாக வைத்து கீழ்வருமாறு முக்கியத்துவம் உடைய சில கணக்கீட்டு விகிதாசாரங்களை கண்டு மேலேயுள்ள ஆய்வுகள் ரீதியாக அவற்றை எழுதி தெளிவு படுத்திக்கொள்ளலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1) முதலீட்டு வருமான விகிதம் $= \frac{\text{வரி கழித்தபின் லாபம்}}{\text{மொத்த உருவச் சொத்து}} \times 100$

2) பங்குமுதல் வருமான விகிதம் $= \frac{\text{வரி கழித்தபின் லாபம்}}{\text{பங்குமுதல்}} \times 100$

3) ஒதுக்குவீதம் $= \frac{\text{வரி கழித்தபின் லாபம்}}{\text{பங்குமுதலும் ஒதுக்கமும்}} \times 100$

4) மூலதன வீதம் $= \frac{\text{வரி கழித்தபின் லாபம்}}{\text{பங்குமுதல் ஒதுக்கம் நீண்டகாலக் கடன்கள்}} \times 100$

5) மொத்தப் பொறுப்பு வீதம் $= \frac{\text{வரி கழித்தபின் லாபம்}}{\text{மொத்தப் பொறுப்பு}} \times 100$

2. மொத்த விற்பனை சொத்து விகிதங்கள்

1) தேறிய இலாபவீதம் $= \frac{\text{தேறிய லாபம்}}{\text{மொத்தவிற்பனை}} \times 100$

2) மொத்த இலாபவீதம் $= \frac{\text{மொத்த லாபம்}}{\text{மொத்த விற்பனை}} \times 100$

3) இயக்க லாபவீதம் $= \frac{\text{இயக்க இலாபம்}}{\text{மொத்த விற்பனை}} \times 100$

4) சொத்து விற்பனை வீதம் $= \frac{\text{விற்பனை}}{\text{மொத்த உருவச் சொத்து}} \times 100$

5) சரக்கு புரள்வு வீதம் $= \frac{\text{விற்ற சரக்கின் கொள்விலை}}{\text{இருப்பு}} \times \text{தடவை}$

3. தொழில் படு முதல் விகிதங்கள்

1) தொழில் படு முதல் $= \frac{\text{நடைமுறைப் பொறுப்பு}}{\text{நடைமுறைச் சொத்து}} \times 100$

2) திரவ விகிதம் $= \frac{\text{நடைமுறைப் பொறுப்பு}}{\text{திரவச் சொத்து}} \times 100$

3) கடன்பட்டோர் வீதம் $= \frac{\text{கடன்பட்டோர்}}{\text{கடன் விற்பனை}} \times 100$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) கடன் கொடுத்தோர் விதம் $= \frac{\text{கடன்கொடுத்தோர்}}{\text{கடன் கொள்வனவு}} \times 100$

5) காசு விகிதம் $= \frac{\text{கொத்தக் காசு + வங்கி}}{\text{நடைமுறைச்சொத்து}} \times 100$

4: முகாமை விகிதங்கள்

1) பங்கு இலாப வீதம்
2) விலை உழைப்பு விகிதம்
3) ஒப்பீட்டு விகிதங்கள்
4) செலவியல் விகிதங்கள்
5) இருப்பு பேணல் விகிதங்கள்

} மேற்படிப்பு மாணவர்களுக்கு மட்டும்

உயர்தர வகுப்பில் கணக்கியலைத் தேர்ந்து கொள்ளும் மாணவர்கள் ஓர் கணக்கியல் நிதிக்கூற்றினை எவ்வாறு விமர்சனம் செய்யமுடியும் என்பதைத் தகுந்தமுறையில் தேர்ந்து கொள்வதற்கான ஓர் வித அறிவுமுறையே இதுவாகும்.

* * *

## பசுமையான நினைவில்
## "வணிகஜோதி"

1982-08-28 சனிக்கிழமை இரவு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இலங்கை வர்த்தகப் பட்டதாரிகளின் ஒன்று கூடி உண்டாடல் வைபவம் நடைபெற்றது.

இந்த பசுமையான இரவில் 'வணிக ஜோதி' நறுமணம் பரப்பத் தவறவில்லை. வணிக ஜோதி' யின் எட்டாவது மலர் பற்றிய விமர்சன உரையை ஜனாப். U. L. M. ஹனிபா B. Com. (ஆசிரியர், மட்/அலிகார் ம. வி. ஏறாவூர்) நிகழ்த்தினார்கள்.

விமர்சன உரையை தொடர்ந்து இலங்கை வர்த்தக பட்டதாரிகள் சங்கத் தலைவர் திரு. எம், நவரத்தினம் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி) அவர்களால்,

திரு. எம். எம். ஜனரட்ண (பிரதம கல்வி அதிகாரி - வர்த்தகம்)
அவர்கட்கு 'வணிக ஜோதி' யின் பிரதி வழங்கப்பட்டது.

'வணிகஜோதி' க்கு தாங்கள் அளித்த கௌரவத்திற்கு
எமது நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வணிகஜோதி' வளர வர்த்தக ஆசிரியர்களான தங்களின் அன்பும் ஆதரவும் ஆலோசனையும் என்றென்றும் தேவையன்றோ!

| | | |
|---|---|---|
| திரு. க. தர்மகுணசிங்கம் | — | தம்புலுவில் ம. வித்தியாலயம் |
| செல்வி கி. வீரசிங்கம் | — | மன்னார் புனித சவேரியர் பெண்கள் |
| செல்வி S. கமலேஸ்வரி | — | GM / DARUSSALAM M. V. |
| திரு. க. சுந்தரகாந்தன் | — | முத்துத்தம்பி ம. வித்தியாலயம் |
| திரு. L. B. ஞானப்பிரகாசம் | — | ஹாட்லிக் கல்லூரி |
| திரு. செ. கனகேந்திரம் | — | கிளிநொச்சி ம. வி. |
| திரு. ஏ. துரைராசா | — | நாவலர் ம. வித்தியாலயம் |
| திரு. ம. புவனேந்திரன் | — | வட்டக்கச்சி ம. வித்தியாலயம் |
| திரு. R. A. திலகரத்தினம் | — | புனித சம்பத்திரிசியார் கல்லூரி |
| திரு. ஜே. அ. யோ அருமைநாதன் | — | புனித சம்பத்திரிசியார் கல்லூரி |
| திரு. ம. பாக்கியநாதர் | — | புனி தசம்பத்திரிசியார் கல்லூரி |
| திரு. S. இராசதுரை | — | வைத்தீஸ்வர வித்தியாலயம் |
| திருமதி ப. மகாலிங்கம் | — | வைத்தீஸ்வர வித்தியாலயம் |
| செல்வி R. சின்னத்தம்பி | — | திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்) |
| திருமதி சி. இராஜரட்ணம் | — | திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்) |
| திரு. N. தனபாலசிங்கம் | — | விக்ரோறியாக் கல்லூரி |
| திரு. பொ. வில்வராசா | — | யாழ். இந்து |
| திரு. எஸ். தெய்வநாயகம் | — | மட் / கோட்டைமுனை ம. வி. |
| செல்வி சி. கதிரேசு | — | நயினாதீவு ம. வித்தியாலயம் |
| திருமதி லெ. பரராசசிங்கம் | — | நயினாதீவு ம. வித்தியாலயம் |
| திருமதி இ. சண்முகலிங்கம் | — | கொக்குவில் இந்து |
| செல்வி நா. வேலுப்பிள்ளை | — | கொக்குவில் இந்து |
| திரு. K. பேரம்பலம் | — | கொக்குவில் இந்து |
| திருமதி ம. சுந்தரலிங்கம் | — | இராமநாதன் கல்லூரி |
| திருமதி ப. பத்மநாதன் | — | இராமநாதன் கல்லூரி |
| ஜனுப் U. L. M. ஹனிபா | — | மட் / அலிகார் ம வித்தியாலயம் |
| திரு. K. R. அரைசிங்கம் | — | KG / SULAIMANIYA M. M. V. |
| திரு. எஸ். இராஜகுலசிங்கம் | — | வயாவிளான் ம. ம. வித்தியாலயம் |
| செல்வி க. சித்திராதேவி | — | வேலணை ம. ம. வித்தியாலயம் |
| திரு. ச. மகாலிங்கம் | — | வேலணை ம. ம. வித்தியாலயம் |
| திரு. இ. ரகுபதி | — | வேலணை ம. ம. வித்தியாலயம் |
| செல்வி பொ. செல்லையா | — | யாழ். மத்திய கல்லூரி |
| செல்வி வி. முருகுப்பிள்ளை | — | யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனம் |
| திரு. வி. நகுலேஸ்வரசர்மா | — | கொ / விவேகானந்த ம. வித்தியாலயம் |
| திரு. K. புவனரத்தினம் | — | பரி. யோவான் கல்லூரி |
| திரு. இ. அமிர்தலிங்கம் | — | துரையப்பா ம. வித்தியாலயம் |
| திரு. செ. பாலராமன் | — | செங்குந்த இந்துக் கல்லூரி |
| திருமதி கே. இராஜேஸ்வரன் | — | செங்குந்த இந்துக் கல்லூரி |
| திரு. க. நாகராசா | — | யாழ். மத்தியகல்லூரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவன முதல் - சிறு விளக்கம்

திரு. S. உமாக்காந்தன்,
போதனாசிரியர், பல்தொழில்நுட்பநிறுவனம்,
யாழ்ப்பாணம்.

நிறுவன தொழில் பாட்டிற்கான நிதியினை அளிப்பவர்கள் முதலீட்டாளர்கள் எனப்படுவார்கள். இம் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு மூலங்களில் அல்லது துறைகளில் முதலீட்டுக்கான வாய்ப்பு இருப்பதால் நாம் ஓர் முதலீட்டுத் துறையை தெரிவு செய்யும் போது எப்பொழுதும் பின்வரும் காரணிகளை முக்கியமாக கவனத்தில் கொள்வார்கள்.

1) முதலீட்டினால் பெறக்கூடிய வருமானம்
2) முதலீட்டுக்கான பாதுகாப்பு
3) முதல் திரும்பி வரக்கூடிய காலம்

முதலீட்டாளர்கள் பல துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு இருப்பதால் கூடிய வருமானம் தரக்கூடிய துறையையே தெரிவு செய்வார்கள். பொதுவாக முதலீட்டில் கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்க்கும் வருமானமானது சாதாரண சந்தை வட்டி வீதத்தினை விட அதிகமாக இருக்க வேண்டும். காரணம் பல இடர் வரவுகளை எதிர்நோக்கியே நிறுவனங்களில் முதலீட்டினைச் செய்வதால் வங்கி போன்ற நிதி நிறுவனங்களால் அளிக்கப்படும் வட்டி வீதத்தினை விட எதிர்பார்க்கப்படும் முதலீட்டு வருமானம் அதிகமாக இருக்கவேண்டும் என்பதில் தவறில்லை.

அடுத்ததாக முதலீட்டுக்கான பாதுகாப்பும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இன்னுமொரு முக்கிய காரணியாகும். கூடிய வருமானம் தரக் கூடிய துறையாக இருந்தாலும் முதலீட்டுக்கான பாதுகாப்பு குறைவாக இருந்தால் முதலீட்டாளர்கள் வருமானம் குறைந்த, ஆனால் பாதுகாப்பான துறையையே நாடுகிறார்கள். உதாரணமாக நிதிக்கம்பனிகளில் முதலீட்டுக்கான வட்டி விகிதம் அதிகமாக இருக்கும்போதும் மக்கள் வட்டி வீதம் குறைவாக வழங்கும் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்வதற்குக் காரணம் அரச உத்தரவாதமேயாகும்.

மூன்றாவது அம்சமாகிய முதல் திரும்பும் காலம், பெரிய தொடர்ச்சியாக முதலீடுகளைச் செய்பவர்களைப் பொறுத்தவரையில் முக்கியமானதாகும். காரணம் இம் முதலீட்டாளர்கள் புதிய முதலீடுகளை ஆரம்பிப்பதற்கான மூலதனத்தை ஏற்கனவே ஆரம்பித்த முதலீட்டு வருமானத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதாலாகும்.

ஆகவே முதலீட்டாளர்களால் அளிக்கப்படும் நிதி, மூலதனம் அல்லது கடன் ஆக அமைகின்றன. எனவே ஓர் நிறுவனம் முதலீட்டாளர்களிடம் இருந்து, மூலதனத்தையா அல்லது கடனையா பெறுவதென்பது அந்நிறுவன அமைப்பையும் அதன் தொழில் முயற்சியையும் பொறுத்ததாக அமையும். வளர்ந்து செல்லும் நிறுவனங்கள் வளர்ச்சியை ஈடு செய்ய தற்கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கடன்களைப் பெறுகின்ற அதே வேளை புதிதாகத் தொழில் முயற்சியை ஆரம்பிக்கும் நிறுவனங்கள் முதலீட்டாளர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து நிதியை மூலதனம் என்ற பெயரில் பெற்றுக்கொள்கின்றன, ஆகவே ஓர் தொழில் நிறுவனமானது அதற்கான நிதியை மூலதனமாக பெறத் தீர்மானிக்கும் போது எவ்வளவு தொகையைப் பெறப்போகின்றது என்பதையும் அதற்கான மூல கங்களையும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளல் வேண்டும் இவற்றிற்கான சாதாரண நடைமுறை என்னவெனில் மூலதன பாதீட்டினைத் தயாரித்துக் கொள்வதும், பொருத்தமும் மலிவானதுமான மூலதனத்தைத் தேடிக்கொள்வதுமேயாகும். எவ்வா றாயினும் இதற்குமுன் எதிர்பார்க்கப்படும் மூலதனத்தில் உள்ள மூலதன இணைப்பு வீதங்களும் மூலதன மூலங்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பது முக் கியமாகும்.

மூலதன மூலங்கள் என்பது மூலதனம் பெறப்படும் வழிகளைக் குறிப்பதாகும் இத்த மூலதன மூலம் இருவகைப்படும்.

1) வெளி மூலம்
2) உள் மூலம்

தாபனத்திற்கு வெளியே நிதி திரட்டப்படும் மூலங்கள் வெளி மூலகங்கள் ஆகும். அதாவது பங்கு மூலதனம், தொகுதிக்கடன், வங்கிக்கடன், நிதிக் கூட்டுத் தாபனங்கள் போன்ற மூலகங்களில் இருந்து பெறப்படும் நிதியாகும். இந்த வெளி நிதி மூலமும் உரிமை நிதி, கடன் நிதி என இரு வகையாக வகுக்கப்படும். இலாபத் தில் பங்குகொள்ளும் உரிமை கொண்ட நிதிமூலங்கள் உரிமை நிதி மூலமெனவும் வட்டி கொடுக்கவேண்டிய நிதி வகைகள் கடன் நிதி எனவும் அழைக்கப்படும். இவை பொதுவாக நாம் ஓர் ஐந்தொகையின் பொறுப்புப் பக்கத்தில் அமைந்து இருப்பதனை சாதாரணமாக அவதானிக்கலாம் என்பதனால் அவைகளை விரிவாக ஆராயவேண்டிய தில்லை.

மறுபுறத்தில் ஓர் நிறுவனம் தனக்குத் தேவையான நிதியினை நிறுவனத்திற் குள்ளேயே திரட்டிக்கொள்ளலாம். இந் நடவடிக்கையையே உள்ளக நிதி மூலங்கள் என அழைப்பர். பொதுவாக பின்வரும் வழிகளால் ஓர் நிறுவனம் உள்ளக நிதியினை திரட்டிக் கொள்ளலாம்.

## 1. நிறுத்தி வைக்கப்படும் இலாபம்

நிறுவனம் உழைக்கும் இலாபத்தினைப் பங்குலாபமாக பணமாக வழங்காமல் நிறுத்திவைப்பதனை இது குறிக்கும். இதுவே மிக மலிவான மூலதனமாகும். கார ணம் இவ்வாறு திரட்டப்படும் தொகைக்கு பங்குலாபமோ, வட்டியோ, வரியோ கொடுக்கவேண்டியதில்லை. சாதாரணமாகச் சொத்துக்களைப் பராமரிப்பதற்காகவும் நவீனமயப்படுத்துவதற்காகவும் விரிவாக்க நடவடிக்கைகளுக்காகவும் பங்குலாபத்தை நிறுத்தி வைப்பார்கள்.

1) ஏனைய ஒத்த கம்பனி கொடுத்தது
2) முன்பு இவர்கள் கொடுத்தது
3) பங்காளர் விருப்பம் – பங்குலாபத்தையா அல்லது பங்குப் பெறுமதி அதிகரிப்பையா?
4) நிறுவன திரவத்தன்மை
5) பங்குகள் தொடர்பான சந்தை நிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2. மதிப்பிறக்க ஒதுக்கம்

மதிப்பிறக்கமானது நிதி சம்பந்தமான உடனடி நடவடிக்கையன்று. பெயரேட்டுப் பதிவுகள் மூலம் செய்யப்படும் ஒன்று. இவ்வாறு ஒதுக்கப்படும் தொகையைத் வெளியில் ஆழ்நிதியாக முதலீடு செய்யலாம் அல்லது நிறுவனத்தினுள்ளே வைத்திருக்கலாம். நிறுவனத்தின் உள் விட்டுவைக்கும் போது இத் தொகை வேறு பொருட்களாக மாறக்கூடும். எனினும் இது ஓர் உள்ளக நிதி மூலகமாகும்.

### 3. சொத்துக்களை விற்று குத்தகைக்கு வாங்குதல்

ஏற்கனவே கொள்வனவு செய்து பாவனையில் இருக்கும் சொத்துக்களை விற்பனை செய்தால் பணம் கிடைக்கும். ஆனால் எமது பாவனைத் தேவைகட்குத் தேவையான சொத்துக்களைக் குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ தேவையைப் பூர்த்தி செய்யலாம். இதனால் எமக்கு நிதி கிடைப்பதோடு தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது. உதாரணமாக ஓர் லொறி உண்டு. இதனை 200,000 ரூபாவிற்கு விற்று பணத்தைப் பெற்றுக்கொள்ளல் எமது தேவைக்கு பணத்தைக் கொடுத்து வாடகைக்குப் பிடித்தல்.

### 4. சாதனங்களைக் குத்தகைக்கு எடுத்தல்

நிறுவனத்திற்குத் தேவையான சாதனங்கள் / சொத்துக்கள் என்பனவற்றை உடனடியாக பணம் கொடுத்து கொள்வனவு செய்யாமல், குத்தகைக்கு எடுத்துப் பாவிப்பதால், கொள்வனவுக்கு வேண்டிய பணத்திற்கும் குத்தகைப் பணத்திற்கும் உள்ள வித்தியாசம் உள்ளக நிதியாக அமைகின்றது. உதாரணமாக 50000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யவேண்டிய சொத்தினை 5000/- க்கு குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்துதல் 45000/- உள்ளக நிதியாக வேறு தேவைகட்குப் பயன்படுத்தமுடியும்.

### 5. கடன்களைக் கழிவு செய்தல்

நிறுவனத்திற்குத் வரவேண்டிய கடன்களை வேறு நிறுவனங்களுக்குக் கழிவுடன் விற்பனை செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ளல். கடன்பட்டோரைக் கொள்வனவு செய்த நிறுவனம் அக் கடன்களைத் தானே வசூலித்துக்கொள்ளும். உதாரணமாக 100000/- ரூபா கடன் பல் வேறு தவணைக்காலங்களில் பெறப்படவேண்டியிருக்கையில் அவைகளைக் கழிவு செய்து உடனடியாக 90000/- பெற்றுக்கொள்வதை இது குறிக்கும்.

### 6. உபகாரப் பங்கு வழங்கல்

நிறுவனத்திற்கு இலாபம் வரும்போது பங்கு லாபம் கொடுக்காமல் விடமுடியாது. காரணம் பங்கு லாபம் கொடுக்காவிட்டால் முதல் திரட்டமுடியாது. அத்துடன் இலாபம் வழங்கும்போதும் பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்படவேண்டியுள்ளது.

எனவே கொடுக்கவேண்டிய பங்கு லாபத்தை பங்காளர்கட்குப் பணமாகக் கொடுக்காமல் பங்குகளாக மாற்றிவிடலாம். இதனால் நிதி வெளியேறாமல் தடுக்கப்படுகின்றது. இதன் முக்கிய நன்மை என்னவெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வரி கொடுக்கத் தேவையில்லை
2) பங்காளர்கள் உண்மை மூலதனம் கூடும்
3) நிறுவன நிதி அதிகரிக்கும்

## 7. கடன்களைத் தீர்த்தல்

கடன்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு கொடுத்துத் தீர்ப்பதால் கழிவுகள் பெறப்படுவது வணிக வழக்கம். எனவே எப்படியும் விரைவில் கடன்களைக் கொடுத்துத் தீர்க்க முயலவேண்டும். உதாரணமாக 1,00 000/- கடனை ஒரு மாதகாலத்துள் கொடுத்தால் 5% கழிவு ஆயின் மாதம் 5000/- கழிவு கிடைக்கும், எனவே இந்த ரீதியில் நடந்தால் வருடாந்தம் 60000/- கழிவு கிடைக்கும். இதுவும் ஓர் உள்ளக நிதி மூலமாகும்.

ஆகவே நிறுவனம் தன் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் வெளி நிதிமூலம் உள் நிதிமூலம் என இருவகையாக விளக்கப்படுவதாகப் பார்த்தோம். அத்துடன் வெளி மூலமாவது உரிமை மூலதனம் கடன் மூலதனம் என இரு வகையாக வகுக்கப்படுகின்றது என்பதனையும் நோக்கினோம். ஓர் நிறுவனத்தில் கடன் மூலதனம் உரிமை மூலதனம், எவ்வளவாக இருத்தல் வேண்டும் என்பது முகாமைக் கணக்கியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கடன மூலதனத்திற்கும் உரிமை மூலதனத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்க மூலதன இணைப்பு என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. மூலதன இணைப்பு என்பது உரிமை மூலதனத்திற்கும் நிலையான வட்டி உழைக்கும் கடன் மூலதனத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குவதாக அமைவதாகும் என வரைவிலக்கணம் கூறலாம். கடன் மூலதனம் கூடுதலாகவும் உரிமை மூலதனம் குறைவாககவும் இருக்கும் போது தாழ் இணைப்பாகவும் கடன் மூலதனம் குறைவாகவும் உரிமை மூலதனம் கூடுதலாக இருக்கும் போது உயர் இணைப்பாகவும் மூலதன இணைப்பு விகிதம் காணப்படும். இலாபத்தில் இருந்து தங்களுக்குரிய வருமானத்தை எதிர்பார்ப்பவர்களே மூலதன இணைப்பு விகிதத்தில் முக்கிய அக்கறையுடையவர்களாகும். எனவே ஓர் நிறுவனத்தில் மூலதன இணைப்பு விகிதம் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது, நிறுவனங்கள் மூலதன இணைப்பை அவதானிக்க வேண்டிய முக்கிய காரணமென்னவெனில்

1) முதலீடு செய்பவர்களைக் கவர
2) முதலீடு செய்யும் யாவருக்கும் நியாயமான வருமானம் கிடைக்கச்செய்ய
3) மூலதன அமைப்பை நிலைநாட்ட

ஆகவே முக்கியத்துவம் பெறும் மூலதன இணைப்பை பூரணமாக விளங்கிக்கொள்ள மூலதன இணைப்பின் இரு தன்மைகளையும் இரு உதாரணங்களுடன் விளக்குவோம்.

Ex: 1) உயர் இணைப்புக் கொண்ட ஓர் நிறுவனத்தை நோக்குகையில்

| விபரம் | மூலதனம் | இலாபம் 1ம் வருடம் | இலாபம் 2ம் வருடம் |
|---|---|---|---|
| 5% தொ. கடன் | 1000000 | 50000 | 50000 |
| 7% மு. பங்கு | 1000000 | 70000 | 70000 |
| சா. பங்கு | 500000 | 60000 | — |
| | | 180000 | 120000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ம் வருடம் இலாபம் 180000 ஆகவும் 2 ம் வருடம் இலாபமானது $33\frac{1}{3}\%$ வீதத்தால் வீழ்ச்சியடையும் போது சாதாரண பங்குதாரர்கட்கு இலாபத்தொகையாக எத்தொகையும் கிடைக்காமல் போகின்றது. எனவே தான் இவ்விதமான தன்மைகளைக் கொண்டு கடன் முறைகள் அமைக்கப்படல் வேண்டும்.

Ex: 2) தாழ் இணைப்புக் கம்பனியில்

| விபரம் | மூலதனம் | இலாபம் 1 ம் வருடம் | இலாபம் 2 ம் வருடம் |
|---|---|---|---|
| 5% தொ கடன் | 200000 | 10,000 | 10000 |
| 7% மு, பங்கு | 400000 | 28,000 | 28000 |
| சா. பங்கு | 1900000 | 142000 | 82000 |
| | 2500000 | 180000 | 120000 |

இரண்டாவது அமைப்பில் இலாபம் 2ம் வருடம் $33\frac{1}{3}\%$ குறைந்த போதிலும் சாதாரண பங்குதாரர்கட்கு இலாபமானது முதலாவது உதாரணம் காட்டப்பட்டது போல் அல்லாமல் (142000 – 82000) 42% மட்டுமே குறைவடைந்துள்ளதை அவதானிக்கலாம்

எனவே முதலீட்டாளர்கள் இலாபத்தை நோக்கி முதலீட்டினை மேற்கொள்வதால் முதலீடு செய்யமுன் அவர்களைக் கவருவதற்கு மூலதன இணைப்பு விகிதம் முக்கிய பங்கினை வகிக்கின்றதென்பதை நாம் அறியலாம்.

* * *

"வணிகஜோதி" பொலிவுறப் பிரசுரமாகியுள்ளது. அச்சுவாகனம் அழகுசேர அமைந்துள்ளது. எழுத்து வடிவங்கள் கருத்துக் கருவூலங்களாக மாறி நூலுருப் பெற்றுள்ளன. நூலின் கவின்பெறு வனப்புக்கு வகை செய்த பெருமை யாழ்ப்பாணம் செட்டியார் அச்சகத்தாருக்கே சொந்தம்.

வணிகமன்ற மாணவர்களின் கிறல்களை யெல்லாம் கலைப்படைப்புகளாக்கியமை; நல்லாசான்களின் கட்டுரைகளை எழுத்து வழுவறப் படைத்தமை; புகைப்படங்களை புத்தழகொளிரப் பதித்தமை; விளம்பரங்களை விழுமிய கோலங்களில் அமைத்தமை...

இத்துணை நயத்துக்கும் செட்டியாரச்சக முதல்வர், தொழில் நுட்ப ஊழியர் அனைவர்க்கும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவ மன்றம் நன்றிப்பெருக்குடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர்களே! அபிமானிகளே!

## உங்கள் உதவிக்கு எங்கள் நன்றிகள்

செல்வி இ. அப்புத்துரை
திரு. பெ. பாலசுப்பிரமணியம்
திரு. சி. இரவீந்திரன்
திருமதி, த. மகேஸ்வரி
திருமதி கா. யோகம்மா
செல்வி கு. நாகேஸ்வரி
திரு. செ. இராசலிங்கம்
திரு. கு. ஏபிரகாம்லிங்கன்
திரு. சு. சண்முகரட்னம்
திரு. ஐ. முருகையா
திரு. சி. சிவயோகன்
செல்வி தி. கலாவதி
திரு. பொ. தர்மேந்திரன்
திரு. க. யோகவனம்
திரு. நே. சிவநேசன்
திருமதி S. சீதாலக்சுமி
செல்வி S பிறபலதா
செல்வி கு. குமரேஸ்வரி
திருமதி இ. சோமசுந்தரம்
திரு. C. லோகநாதன்
திரு இ. இரவீந்திரன்
திரு. இ. நிர்மலேந்திரன்
திரு க. சுந்தரலிங்கம்

பொருளாளர்,
வ. மா. மன்றம். 01-06-1983

* * *


நவ நாகரீக நங்கையர்களுக்கேற்ப சலுஜா பிறசியர்கள்
சிறு பிள்ளைகளுக்குரிய சூட்டிங், கவுண்கள்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்

விபரங்களுக்கு:

ஜயராம் கார்மன்ட் இன்டஸ்ரீஸ்

25, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

❋ உத்தரவாதமுள்ள ஏரியல் அமைப்பிற்கும்

❋ ரி. வி. டெக்குடன் படங்கள் வாடகைக்கு விடுவதற்கும்

❋ உள், வெளிப்புறக் காட்சிகள், உற்சவங்கள், படப்பிடிப்பிற்கும்

Ranjanas

60, Grand Bazaar, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "செல்வன் நந்தகுமார் அமரனுகி அடங்கினனே"

கண்ணீர்த் துளிகள் இன்னமும் காயவில்லை. நெஞ்சு கனக்கிறது. கடந்த ஓராண்டு கால நினைவுகள் உணர்வலைக ளாய் உருவெடுக்கின்றது. நந்தகுமார் இன்று எம் மத்தியில் இல்லை. காலன் சாயலைத்தான் அழித்தனன். நந்தனின் அருமைச் செழுமை அழிக்கற் பாலதோ!

நந்தன் துடிப்பும் எடுப்பும் மிக்க இளைஞன். ஓராண்டுக் காலமே எமது கல்லூரியில் உயர் வகுப்பில் கற்றனன். இக் குறுகிய காலத்தில் அவன் கல்லூரியின் கல்லும் கதைபேச வாழ்ந்திட்டான். காலத் தச்சன் நந்தனைக் கத்தரித்துக்கொண்டாலும் கல்லூரியில் அவன் பதித்த முத்திரை ஸ்திரமானது.

கல்வியில் கருத்துடையன், விளையாட்டுக் கலையில் தலைவன், ஒழுக் கத்தால் விழுப்பமடைந்தோன். அடக்கத்தில் அமரன். சாந்தமும் பொறு மையும் அவனது சொத்துக்கள். விடாமுயற்சியும், எடுத்த கருமத்தை தொடுத்து முடிப்பதும் அவனது சுபாவம். போட்டிகளில் 1500 - 10000 மீற்றர் வரை ஓடிச் சாதனை நிலைநாட்டினனே. இது நந்தனின் திடசித் தத்திற்குச் சான்றாகும்.

விளையாட்டு வினையாகிவிட்டது. ஆம். 10,000 மீற்றர் ஓட்டம் அவனைத் தனது பிறந்த மண்ணில் மறையவைத்தது, புகழுடம்பைப் பொலியச் செய்தது பச்சிலைப்பள்ளி, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, விளையாட்டுப் போட்டியே அவனுக்கு வினையாக விளைந்தது. அகல் விளக்கு அணைந்தது. ஆறுமோ நெஞ்சம். யார் செய்த குறத்தவமோ? ஊர் கூடி அழுதது. மாணவர் நாம் மரணச் சடங்கில் அழுது சாம்பி னோம். அடுத்து செய்வதென்ன?

ஆண்டவனின் திருப்பாதம் அடைந்தவர்கள் பற்றற்ருன் பற்றிலே கொலுவிருக்க வழுத்துவோம். நந்தன் தெய்வமாகிவிட்டான். அவனை உணர்ந்துகொண்ட இதயங்களில் தெய்வம் பேசும்.

சாந்தி

—இதழாசிரியர்கள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSAL
LIBRARY SERVICE

# நன்றி நவிலல் மரபாறல்....

- மலர் உயர்வுற ஆசிகளை வழங்கிய பெரியோர்களுக்கும்

- இம் மலருக்கு நறுமணம் ஊட்டும் வண்ணம் விடய தானங்களை அளித்துச் சிறப்பித்த விரிவுரையாளர்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும்

- எமது மலர் வெளியீட்டுக்குப் பல வழிகளிலும் ஆலோசனை வழங்கி ஊக்கமும் ஆக்கமும் வழங்கிய அதிபர் திரு. இ. சச்சிதானந்தம் அவர்கட்கும்

- எமக்கு உற்சாகம் ஊட்டியும், எமது ஆக்க முயற்சி வெற்றி பெறவும், அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி, தன்னால் இயன்ற வரை எமக்காக, எமது வர்த்தக மாணவ மன்ற வளர்ச்சிக்காக, உதவிய மதிப்புமிக்க உபகாரப்பாளர் திரு. வ. க. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும்

- தேவையான வேளைகளில் தேடிச் சென்று ஆலோசனைகள் கேட்கும் போதெல்லாம் இன்முகத்துடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய திரு. க வை. தனேஸ்வரன் அவர்களுக்கும்

- 'உற்றுளி உதவுவோராக' தேவையான சந்தர்ப்பங்களிலெல்லாம் எமது மன்றத்தின் வளர்ச்சிக்காக முன்னின்று நெறிப்படுத்தி உதவும் எமது அன்புக்குரிய உபகாரப்பாளர்கள் திரு. அ. உபயசேகரம், திருமதி பா. கனகரத்தினம், செல்வி அ. கந்தையா, திருமதி வி. சுப்பிரமணியம் ஆகியோருக்கும்

- எமது வெளியீட்டு விழாவில் கலந்து, ஆசியுரை நல்கச் சம்மதித்த நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி அவர்களுக்கும், வருகை தந்து சமர்ப்பணவுரை நிகழ்த்திய திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கட்கும், வெளியீட்டுரை நல்கிச் சிறப்பிக்கவிருக்கும் பழைய மாணவர் திரு. எம். இராமலிங்கம் (உப அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம்) அவர்களுக்கும், முதற் பிரதியைப் பெற்று எம்மை ஊக்குவிக்கவிருக்கும் 'குறூஸ் ட்ரவல் சேவிஸ் லிமிட்டெட்' உரிமையாளரும் பழைய மாணவருமான திரு. செ. யோகேஸ்வரன் அவர்கட்கும்,

- ஆய்வுரை நல்கி 'வணிகஜோதி'யை வளமாக்க முன்வந்துள்ள திரு. மத்தியூஸ் எம். அந்தனிமுத்து (உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்) அவர்கட்கும்,

- விளம்பரம் தந்துதவிய பெரியோர்களுக்கும்,

- ஈற்றில் எமது அழைப்பை ஏற்றுச் சபையைச் சிறப்பிக்கும் எமது வித்தியாலய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும்

எமது இதயம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்

இணை இதழாசிரியர்கள்

UNIVERSAL LIBRARY SERVICE
KANTHARMADAM - JAFFNA
Acc. No. M 31·1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை நிதானத்திற்கும் தரம் குறையாத
தங்கவைர நகைகளுக்கும் நம்பிக்கையான
ஓர் ஸ்தாபனம்

செல்லையா
சிவபாதலிங்கம்
நகைமாளிகை



சிறந்த வேலைப்பாடுள்ள
தங்க வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில்
தெரிவுசெய்யலாம்.

# செல்லையா சிவபாதலிங்கம்
# நகைமாளிகை

220 (78) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓடர்கள் யாவும் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்
தொலைபேசி: 23794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்க்கான கை நூல்! மாணவர்க்கான வழிகாட்டி!!

இலங்கையில் க. பொ. த. (உயர்தர) கலை, வர்த்தக மாணவர்க்கான ஈடிணையற்ற இரு திங்கள் இதழ்.

# வணிகம்
# VANIHAM

[இரண்டாவது வருடமாக வெளிவருகின்றது.]

❋ பொருளியல், அரசியல், புவியியல், அளவையியல், கணக்கியல், வணிகமும் நிதியும், இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களில் சிறப்புத் தேர்ச்சிமிக்க பட்டதாரிகளின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இலங்கையின் ஒரே ஒரு மாணவர் சஞ்சிகை.

❋ சந்தாதாரர்களாகச் சேர்பவர்களுக்கும், தமது மாணவர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்து உதவும் ஆசிரியர்க்கும் அளப்பரிய இலவச சேவைகளை வழங்கும் ஒரே சஞ்சிகை. வருடச் சந்தா ரூபா 25/-

❋ நாட்டின் வர்த்தக, பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் மாணவர்க்கு அறியத்தரும் சஞ்சிகை.

விபரங்களுக்கு:

ஆசிரியர்,
"வணிகம்"
இல. 113, பருத்தித்துறைவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

EDITOR,
"VANIHAM"
113, Point Pedro Road,
NALLUR,
JAFFNA.

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org